விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 தை 12 வெள்ளிக்கிழமை (25.01.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 037

# மக்களின் இழப்பை தவிர்க்க இராணுவம் முயற்சித்தது

## இராணுவ விசாரணை அறிக்கை தெரிவிப்பு

(கொழும்பு)

**இலங்கை உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டத்தில் இலங்கை இராணுவம் பொதுமக்களின் இழப்பைத் தவிர்ப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது என்று இராணுவ உள்ளக விசாரணை அறிக்கை ஒன்று பரிந்துரைத்துள்ளது.**



இலங்கைப் போரின் இறுதிக்கட்டம் குறித்து ஆராய்ந்த நல்லிணக்க ஆணைக் குழு இந்தப் போர் நிகழ்வுகள் குறித்து இலங்கை இராணுவமும் ஒரு உள்ளக விசாரணையை நடத்த வேண்டும் என்று பரிந்துரைத்திருந்தது.

அதற்கமைய இராணுவத்தினால் நடத்தப்பட்ட உள்ளக விசாரணை அறிக்கை ஒன்று இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரியவினால் பாதுகாப்புச் செயலர் கோத்தபாயராஜபக்ஷவிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. எதிர்காலத்திலும் இப்படியான இராணுவ நடவடிக்கைகளில் பொதுமக்கள் இழப்பைத் தவிர்க்கும் நோக்கில் புதிய யுக்திகள் கையாளப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கை கூறியுள்ளது.

தற்போதுள்ள சர்வதேச மனித நேய சட்ட அடிப்படைகள், உள்நாட்டுப் போர் நடவடிக்கைகளுக்கு பொருத்தமற்றது. இந்தச்சட்டங்கள் தேசிய அரசாங்கங்களை மாத்திரமே கட்டுப்படுத்தும் என்பதால், அவை மிகவும் சிக்கலான பல விட (20ஆம் பக்கம் பார்க்க)

## விஸ்வரூபத்துக்கு தடைவிதிப்பு

(கொழும்பு)

கமலஹாசன் தயாரித்து நடித்த விஸ்வரூபம் திரைப்படத்துக்கு இலங்கையில் தற்காலிகமாக தடைவிதிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல இதனை அறிவித்துள்ளார்.



கமலஹாசனின் விஸ்வரூபம் திரைப்படம் இனங்களுக்கிடையில் பதற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளமையால் அதனை இலங்கையில் தடைசெய்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கெனவே (20ஆம் பக்கம் பார்க்க)

## இன, மதவாதங்களுக்கு இடமளிக்கக் கூடாது

### அனுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இன மற்றும் மதவாத நடவடிக்கைகளுக்கு இட மளிக்கக்கூடாது என ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரி வித்துள்ளார்.

நாட்டின் சகல இன மக்களும் பாரிய ளவில் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர். ஒரு புறத்தில் பொருளாதார நெருக்கடிகளும் மறுபுறத்தில் ஜனநாயக ஒடுக்குமுறைகளும் இடம்பெற்று வருகின்றன.

வெளிநாட்டுச் சக்திகள் நாட்டுக்கு எதிராக சூழ்ச்சித் திட்டங்களை தீட்டிவருகின்றன. இனவாதத்தை தூண்டும் வகையில் செயற்படும் சக்திகளை இனம்கண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். (19ஆம் பக்கம் பார்க்க)

## இனவாதப் பிரச்சினைகளை ஆராய நாடாளுமன்ற குழு!

### அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

நாட்டில் ஏற்படும் இனவாதப் பிரச்சினைகள் குறித்து ஆராய நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை அமைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சிறுபான்மை சமூகங்களுக்கு இடையிலும், சிறுபான்மை, பெரும்பான்மை சமூகங்களுக்கு இடையிலும் ஏற்படக்கூடிய முரண்பாடுகள் குறித்து ஆராயப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இனவாதம், மதவாதம் மற்றும் அடிப்படைவாதம் போன்றவற்றினால் ஏற்படக்கூடிய முரண்பாட்டு நிலைமைகள் குறித்து ஆராயும் நோக்கில் விசேட நாடாளுமன்றக் குழுவொன்று அமைக்கப்படவுள்ளதாக அமைச்சர் நிமால் (20ஆம் பக்கம் பார்க்க)

## ரணில்-சஜித் சந்திப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் கட்சியின் முன்னாள் பிரதித்தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கும் இடையில் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ஐ.தே.க.பிரதித்தலைவர் பதவியில் மாற்றம் ஏற்படும் வாய்ப்பு பெரிதும் காணப்படுகின்றது. இது தொடர்பாக இருவரும் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், பொதுச்செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்கவும் உடன் இருந்ததாக (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் அவசர தேவைகளுக்காகவே இராணுவம் இன்னமும் நிலை கொண்டுள்ளது

### பாதுகாப்புச் செயலர் விளக்கமளிப்பு

(கொழும்பு)

வடக்கில் சிவில் நிர்வாகமே இடம்பெற்று வருகின்றது. தெற்கில் இராணுவ முகாங்கள் இருப்பதைப் போன்றே வடக்கிலும் அவசர தேவைகளுக்காக இராணுவ முகாங்களை அமைத்து இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர் என்று பாதுகாப்பு செயலாளர் கோத்தபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது,

இலங்கை இராணுவம் இலங்கையில் நிலைகொள்ளாமல் வெளிநாடுகளில் சென்று முகாம்களை அமைத்து நிலை கொள்ள முடியாது. தெற்கில் போன்றே வடக்கிலும் அவர்கள் தங்கியுள்ளனர்.

வடக்கில் பொலிஸாரே சட்டத்தையும் ஒழுங்கையும் பேணி வருகின்றனர். அங்கு எவ்வாறன (19ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக முயற்சித்தேன்

### ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)


தமிழ்அரசியல்கைதிகளின்விடுதலைக்காக நான் முயற்சிகளை மேற்கொண்டேன் என அமெரிக்கத்தூதுவரிடம் நீதியமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை மேற்கொள்ளப்பட்டவிதம் குறித்து அமெரிக்க விசனம் தெரிவிப்பதாகவும், அதே வேளை இலங்கையின் சட்டத்துறை சம்பந்தப்பட்ட கருத்திட்டங்களுக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பதாகவும் இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் மிசேல் ஜே.சிசன் நீதியமைச்சிடம் தெரிவித்துள்ளதாக நீதியமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் மிசேல் ஜே.சிசோன் அமைச்சர் ரவூப் ஹக்கீமை நேற்று முன்தினம் முற்பகல் நீதியமைச்சில் சந்தித்து கலந்துரையாடிய போதே இதனைத் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது அமெரிக்க தூதரக அரசியல் அதிகாரி [illegible]

## முழு அளவிலான ஒத்துழைப்பை இலங்கைக்கு இந்தியா வழங்கும்



### பீரிஸிடம் மன்மோகன் உறுதி

(புதுடில்லி)

இலங்கைக்கு முழு அளவிலான ஒத்துழைப்பு வழங்கப்படும் என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சகல விவகாரங்களிலும் இந்தியா ஒத்துழைப்பு வழங்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது இந்தியாவிற்கு விஜயம் செய்துள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

நிறுவனம் ஒன்றிற்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை.
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புக்கு: 0777722448


# தமிழ் அரசியல் கைதி...

வில்லியம் லின்ஸன்மீயர், அமெரிக்க உதவித் திட்ட உயர் அதிகாரிகள் சிலரும் நீதி அமைச்சின் செயலாளர் கமலினி டி சில்வாவும் கலந்து கொண்டனர்.

இதன்போது நல்லிணக்க ஆணைக்குழுவின் விதந்துரைகளைச் செயற்படுத்துவது தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் ஹக்கீம் குறிப்பிட்டதாக குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் அமைச்சர் ஹக்கீமைப் பதவி விலகுமாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்ற விவாதத்தின்போது குறிப்பிட்டதைச் சுட்டிக்காட்டிய அமெரிக்கத் தூதுவர், அது தொடர்பில் கேள்வி எழுப்பியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு பதிலளித்த அமைச்சர், தடுப்புக் காவலில் உள்ள தமிழ் சிறைக் கைதிகளை விடுதலை செய்யும் விவகாரம் தமது அமைச்சோடு மாத்திரம் சம்பந்தப்பட்டது அல்லவென்றும் அதில் பாதுகாப்பு அமைச்சும் சட்டமா அதிபர் திணைக்களமும் சிறைச்சாலைகள் சீர்திருத்த அமைச்சும் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறியதோடு அத்தகைய கைதிகள் தொடர்பிலான விசாரணைகளை துரிதப்படுத்தி குற்றமற்றவர்களை விடுவிப்பதற்காக தாம் முயற்சிகளை மேற்கொண்டதாகவும் கூறினார்.

அத்துடன் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் முஸ்லிம் விரோத நடவடிக்கைகள் பற்றியும், தூதுவர் அமைச்சிடம் கேட்டறிந்ததாகவும் குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ-11)

# விபத்தில் காயம்

(சாவகச்சேரி)

மோட்டார் சைக்கிளும் சிறிய ரக வாகனமும் விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 5 மணியளவில் சாவகச்சேரி வடக்கு மருதடி வீதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் மீசாலை வாசயடியைச் சேர்ந்த தங்கவேல் அங்குஜன் (வயது 22) மற்றும் அதே இடத்தினைச் சேர்ந்த உதயராசா சரவணபவன் (வயது18) என்ற இருவருமே படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(எ -29)


## பிள்ளையார் இன்

25% கழிவு

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் மாலையில் வழங்கப்படும்.

இன்றைய விசேட உணவு :-
பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

இலவசமாக இஞ்சி சோடா வழங்கப்படும். (இங்கு உணவருந்துபவர்களுக்கு மட்டும்)
(C-1660) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

## நத்தார், புதுவருடம், தைப்பொங்கல் பண்டிகைகளை முன்னிட்டு விசேட கட்டணக் கழிவுகள்

3 நாள்களில் உங்கள் கைகளில் பொதிகள் கிடைக்கக்கூடியவாறு துரித சேவை....



| கட்டணங்கள் | (1Kg) இற்கு |
|---|---|
| லண்டன் | 1500/- |
| கனடா | 2600/- |
| சுவிஸ் | 1200/- |
| அவுஸ்திரேலியா | 1000/- |
| ஜேர்மனி | 1000/- |

சாதாரண சேவை 1 kg க்கு : கனடா 700/- லண்டன் 600/-
(பொதிகள் நிறை 5 Kg க்கு மேற்பட்டதாக இருத்தல் வேண்டும்.)

குறிப்பு: ஆவணங்கள், கடிதங்கள் அனுப்புவதற்கு விசேட கட்டணம்
லண்டன், இத்தாலி, பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, சுவிஸ் ஆகிய நாடுகளுக்கு
500 கிராமுக்கு 2000 ரூபா மட்டுமே...!
3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.

எமது வாடிக்கையாளர்களின் நன்மை கருதி உங்கள் பிரதேசங்களில் உள்ள பின்வரும் வியாபார ஸ்தாபனங்களில் பொதிகளை ஒப்படைக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

நெல்லியடி மருதம் கொமினிகேசன் 021 226 3210
வல்வெட்டித்துறை: V2 Travels and Tours 021 2055044 (சி-2235)

மேலதிக தொடர்புகளுக்கு:
Rain Bow Travels
இல.30/2, 3 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 0212219596 0778710732

## O/L & A/L இன் பின்னர்

Advanced Diploma in Office Administration

3 in 1

ஒரே பாடநெறியில் மூன்று சான்றிதழ்களைப் பெற்றிடுங்கள்

Office Application
DTP & Internet
Accounting

பதிவுகள் தற்பொழுது ஆரம்பம்

CSC-ASIAN
COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

| | |
|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் | 021-222 5677 |
| 230,கட்டுக்கானி வீதி, சாவகச்சேரி | 021-2270267 |
| கொடிகாமம் வீதி, நெல்லியடி, | 021-2262399 |
| A9 வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி | 021-2283925 |





## வசந்தம் மருந்தகம்

Wanted Pharmacist

To: 456, Hospital Road, Jaffna
Salary is More than Rupees Fifteen Thousand Only
TP: 0779396804
(1572)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 14 | 06 |
| 03 | 02 |
| 1937 | 2012 |

அமரர்
### மாணிக்கம் நரேந்திரன்
(மில் கனகு)


ஆண்டு ஒன்று ஆனதுவோ அப்பா -நாம்
எழவில்லை இன்னும் எம் துயரிலிருந்து -நீர் எழுந்து
வருவீரென ஏங்கியிருந்தோம்-அப்பா
எப்போதுதான் எழுவீரோ எம் அப்பாவே.

இன்று (25.01.2013) வெள்ளிக்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

மடத்தடி, அல்வாய் கிழக்கு, அல்வாய். குடும்பத்தினர்

(C-2233)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளி/ கண்டாவளை ம.வி இன் முன்னாள் ஆசிரியராகவும், பிரதிஅதிபராகவும், கிளி / முரசுமோட்டை அ.த.க பாடசாலையின் அதிபராகவும் கடமையாற்றி இலங்கை கல்வி நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்திபெற்று 15.01.2013 இல் ஊவா மாகாணம், பதுளை கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக பதவி ஏற்றிருக்கும்

**திரு.ஞானப்பிரகாசம் இளையதம்பி**

அவர்கள் மேன்மேலும் பதவி உயர்வுகள்பெற்றுச்சிறப்படைய வாழ்த்துகிறேன்.

கண்டாவளை, பரந்தன்

ஆசிரியர்
சி. புவனேந்திரராசா

(C-2236)




நயினாதீவு
## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
## தைப்பூச விழா 27.01.2013



நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயிலில் வழமை போன்று இவ்வருடமும் தைப்பூச விழா மிகவும் சிறப்பாக நடைபெறவுள்ளது.
மு.ப.11.00 மணியளவில் விசேட அபிஷேகம் நடைபெற்று நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும் உச்சிக்காலப் பூசையைத் தொடர்ந்து விசேட வசந்த மண்டப பூசை நடைபெற்று அம்பாள் திருமஞ்சத்திலே வீதியுலா வந்து அருள் செய்வாள்.

**அன்றைய தினம் நயினாதீவு அமுதசுரபி அன்னதான சபையினரினால் வழமை போல் இம்முறையும் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.**

அடியார்களின் நலன் கருதி நயினாதீவு குறிகட்டுவான் விசேட படகுச் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் யாழ் - குறிகட்டுவான் போக்குவரத்துச் சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. எனவே அடியார்கள் வருகை தந்து அம்பிகையின் தைப்பூச விழாவை கண்டு கொள்வதுடன் அன்னையின் அருட்கடாட்சத்தையும் பெற்றுய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.



அறங்காவலர் சபை
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்
நயினாதீவு.
(சி-2232)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## விண்வெளியும் மனநிலையும்

"ஒரு 20 அடி நீளம், 18 அடி அகலமும் உள்ள அறையொன்றினுள்ளே இரு நபர்களை வைத்து பூட்டுங்கள்; அவர்களுக்கும் வெளியுலகத்திற்கும் எதுவிதமான தொடர்புகளும் இருக்கக் கூடாது. அனைத்தையும் துண்டிக்க வேண்டும். ஓரிரு மாதங்கள் வரை அவர்களை வெளியிலேயே விடக்கூடாது. இப்படியாகச் செய்தால், ஒரு கொலை நடைபெறுவதற்கான சூழ்நிலையை உருவாக்கி விட்டது என்று அர்த்தம்.

ரஷ்ய விண்வெளி வீரர் ஒருவர் எழுதி வைத்திருந்த தினசரி குறிப்பேட்டில் இவ்வாறு இருந்தது. அவர் பெயர் வாலரி நியுமின். இவர் 1980 ஆம் ஆண்டு இன்னொருவருடன் கூடி விண்வெளிக்குப் போய் திரும்பி வந்தவர்.

ரொக்கெட்டிலே விண்வெளிக்குச் சென்று சிறிது நாட்கள் அங்கே தங்கி விட்டு திரும்பி வரும்போது அவர்களது மன நிலை மிகவும் பாதிப்படைந்து காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ரொக்கெட்டிலே மிகவும் துணிச்சலாகத்தான் புறப்பட்டார்கள். இருந்தாலும் ரொக்கெட் பயணிக்கும் பாதையோ எல்லையில்லாமல் பரந்து கிடக்கும் வானமாகும்.

அங்கே என்ன நடக்கும் என்று யாருக்குமே தெரியாது. எந்தக் கணனியென்றாலும் அதைத் துல்லியமாகக் கணக்கு சொல்லாது. பயணிக்கு ரொக்கெட்டில் ஏதாவது கோளாறு நேர்ந்தால் வீதியில் ஓரமாக நிறுத்தி பழுது பார்க்க முடியுமா? போனால் போனதுதான்.

சுவாசிப்பதற்கு போதியளவு வளி கிடைக்காது. பகல் என்றால் வெப்பமாகவும்; இரவென்றால் நினைத்துப் பார்க்க முடியாதளவு இருள் சூழ்ந்தும் காணப்படும்.

இது மாதிரியான அபாயத்தை மனதிலே சுமந்து கொண்டு தான் விண்வெளி வீரர்கள் ரொக்கெட்டிலே பயணிக்கிறார்கள். ரொக்கெட் எவ்வளவு பெரியது? ஒரு சிறிய கூடுதான் விண்வெளி வீரன் அமரும் இடமாக அமைந்திருக்கும். உள்ளே இருந்து அழுதாலும் சிரித்தாலும் தரையில் இருந்துதான் பதில் வர வேண்டும்.

1982 இலே இரண்டு விண்வெளி வீரர்கள் ஒரே விண்கலத்திலே புறப்பட்டார்கள்.

இவர்கள் இருவரும் விண்கலத்தினுள் அடி வைத்ததிலிருந்து பேசுவது கிடையாது. மிகவும் அவசியம் என்றால், ஓரிரு வார்த்தைகள் பேசிக் கொள்வார்கள். இப்படியாக புழுக்கமான, இறுக்கமான, மௌனமான சூழ்நிலையிலேயே விண்வெளி வீரர்கள் 211 நாட்களைக் கடத்தி இருக்கிறார்கள்.

இவர்கள் இருவரும் இப்படியாக பல்லைக் கடித்துக் கொண்டு, 211 நாட்களையும் விண்ணிலே செலவு செய்து விட்டு, தப்பினோம்; பிழைத்தோம் என்று மீண்டும் பூமிக்கு வந்து சேர்ந்தார்கள்.

அந்த இருவரில் ஒருவர்தான் இதையெல்லாம் தனது தினக் குறிப்பில் எழுதி வைத்துள்ளார். இக் குறிப்பேடு 1983 ஆம் ஆண்டிலே சோவியத் யூனியனிலே புத்தகமாக வெளி வந்துள்ளது.

விண்வெளி வீரர்கள் மீண்டும் பூமியில் தரை இறங்கியதும் அவர்கள் இரத்தப் பரிசோதனைக்குட்படுத்தப்படுவர். அப்போது ஹைட்ரோ கார்ட்டிடுசோன், காட்டி கோலமன் ஆகிய வேதியியல் பொருட்கள் இவர்களது உடம்பில் சுரந்திருப்பது கண்டறியப்படும். இந்த வேதியியல் பொருளானது ஒரு சாதாரண மனிதன் பதற்றமடையும் போது ஏற்படுகிறது. பின்னர் அவர் ஓய்வெடுக்கும் போது... இப்பொருள் இயல்பாகவே மறைந்து விடும். ஆனால், விண்வெளி வீரர்களின் இரத்தத்திலே இது எப்போதுமே இருக்கிறது.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# சுதந்திரதின வைபவம் திருமலையில்; சுமார் ஒரு இலட்சம் பேர் பங்கேற்பர்!

(கொழும்பு)

இலங்கையின் 65 ஆவது சுதந்திர தின தேசிய நிகழ்வுகள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் திருகோணமலை பிரெட்ரிக் கோட்டை மாவத்தையில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி காலை நடைபெறவுள்ளன.

இம்முறை சுதந்திரதின நிகழ்வுகளில் ஒரு இலட்சம் பேர் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுவதுடன் சுதந்திர தின விழா நிகழ்வுகள் தொடர்பான அனைத்து முன்னோடி நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த 1953 ஆம் ஆண்டு திருகோணமலையில் சுதந்திரதின நிகழ்வுகள் நடத்தப்பட்டதன் பின் 60 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் 2013 ஆம் ஆண்டுக்கான சுதந்திர தின விழா திருகோணமலையில் கொண்டாடப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

சுதந்திரதினம் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் செய்தியாளர் மாநாடொன்று நேற்று முன்தினம் தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் கலந்து கொண்டு விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அமைச்சர் இங்கு மேலும் விளக்கமளிக்கையில், கொழும்பிற்கு வெளியே சுதந்திர தின நிகழ்வுகளை நடத்த வேண்டுமென்ற தீர்மானத்தை ஜனாதிபதி மேற்கொண்டதன் பின்பு சுதந்திர தின நிகழ்வு கண்டியிலும் கதிர்காமத்திலும் அநுராதபுரத்திலும் கொண்டாடப்பட்ட துடன் இம் முறை சுதந்திரதின நிகழ்வு திருகோணமலையில் கொண் டாடப்படவுள்ளது.

நான்கு இலட்சம் மக்கள் வாழும் திருகோணமலை மாவட்டத்தில் பிரசித்தி பெற்ற இந்து ஆலயங்கள், பௌத்த விஹாரைகள், இஸ்லாமிய வழிபாட்டுத் தலங்களும் உள்ளன. மூவின மக்களும் இங்கு செறிந்து வாழ்கின்றனர்.

சுதந்திர தினத்தை முன்னிட்டு திருகோணமலையின் பல பகுதிகள் மற்றும் வீதிகள் புனரமைக்கப்பட்டுள்ளன. நகரின் பல பிரதேசங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

சுதந்திரதின நிகழ்வுகளில் சகல சமயங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பல்வேறு கலை, கலாசார நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பார்வையாளர்களுக்கென மெஷிகன் விளையாட்டரங்கில் விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பிரெட்ரிக் கோட்டை மாவத்தையில் பிரதான மேடை அமைக்கப்பட்டுள்ளதுடன் அரை வாசி கடற்பகுதியையும் அரைவாசி நிலப்பகுதியையும் கொண்டதாக நிகழ்வுகளுக்கான மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (செ-2)

## சமூக விஞ்ஞான படிப்பு வட்டத்தின் நிகழ்வு

சமூகமும் சமூக விஞ்ஞான நோக்கமும் எனும் தலைப்பிலான சமூக விஞ்ஞான படிப்பு வட்டம் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு திருநெல்வேலி ஆடியபாதம் வீதி அரங்க செயற்றிறன் இயக்கத்தில் நடைபெறவுள்ளது.

உதவிக்கல்விப் பணிப்பாளர் மு.இராஜநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சட்டத்தரணி சோ.தேவராஜா கருத்துரை வழங்கவுள்ளார். நிகழ்வின் நிறைவில் கலந்துரையாடலும் நடைபெறும் என தேசிய கலை இலக்கியப் பேரவை அறிவித்துள்ளது. (செ-9)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 300 | 240 | 180 |
| உருளைக்கிழங்கு | 70 | 60-120 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 160 | 120 | 250 | 300 |
| தக்காளி | 80 | 100 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 40 | 40 |
| கோவா | 90 | 80 | 100 | 120 |
| கரட் | 180 | 120 | 140 | 160 |
| பூசணி | 40 | 40 | 60 | 50 |
| புடோல் | 140 | 120 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 100-160 | 110 | 120 | 150 |
| பெரிய வெங்காயம் | 80-100 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 200 | 190 | 240 | 200 |
| வெண்டிக்காய் | 120 | 60 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | 80 | 70 |
| பயற்றங்காய் | 250 | 240 | 200 | 150 |
| லீக்ஸ் | 140 | 110 | 120 | 150 |
| பீற்றூட் | 100 | 80 | 150 | 120 |
| கறிமிளகாய் | 400 | 220 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 300-400 | 500 | 600 | -- |
| போஞ்சி | 120 | 120 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | -- | 250 | 220 | -- |
| கீரை - 1 பிடி | 20-35 | 40-50 | 30 | 30 |
| தேசிக்காய் | 30 | 90 | 80 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 40 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 90 | 90 | 120 | 140 |
| வெங்காயப்பூ | 140 | 220 | 100 | 100 |

## இராசி பலன்

25.01.2013
(தை 12, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.29 மணிக்கு
திரயோதசி காலை 7.59 மணிவரை
திருவாதிரை பிற்பகல் 1.31 மணிவரை
இராகுகாலம் 11.06-12.36 மணிவரை
சுபநேரம் 6.36-8.06 மணிவரை
முகமது நபி பிறந்த தினம்.

**மேடம்** விருந்து விழாக்களில் கலந்து மகிழும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், நீண்ட நாளைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், உடன் பிறப்புக்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

**இடபம்** குடும்பத்தில் குதூகலம் தென்படும், நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி நகர்வீர்கள், மாற்றினத்தவர்கள் மூலம் மகிழ்ச்சியான செய்திகள் வந்து சேரலாம், வாக்கு மேன்மையுண்டு.

**மிதுனம்** பெண் தெய்வ வழிபாட்டால் பெருமை சேர வேண்டிய நாள், குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், அதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டி நாள், சிந்தனை மிகுதியுண்டு.

**கடகம்** அன்றாடப் பணிகள் நன்றாக நடைபெற ஆண்டவனைப் பிரார்த்திப்பீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும், அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்படலாம், சயன சுகக்குறைவான நாள்.

**சிங்கம்** சிறப்பான நாள், அந்நிய தேசத் தொடர்புகள் அனுகூலம் தரும், தொலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும், வருமானம் திருப்தி தரும், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**கன்னி** தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், திறமைகள் வெளிப்படும் நாள், அரை குறையாக இருந்த பணிகளை செய்து முடிப்பீர்கள், உடல் நலம் சீராகி உற்சாகம் பெருகும், போசன நன்மையுண்டு.

**துலாம்** தடைகளைத் தகர்த்தெறிந்து தன்னிறைவு காணும் நாள், எதிர்பாராத சில சம்பவங்கள் நடைபெறலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், பயணங்களால் பலனுண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** வார்த்தைகளில் நிதானம் தேவை, எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், பயணங்களின் போது விழிப்புணர்ச்சி தேவை, மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும்.

**தனுசு** பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், அன்பு நண்பர்களின் ஆதரவுண்டு, ஆலய வழிபாட்டில் நாட்டம் காட்டுவீர்கள், செல்வாக்கு மேலோங்கும், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்** நாவன்மையால் நல்ல பெயரெடுப்பீர்கள், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், தேவைகள் பூர்த்தியாகும் நாள், தொழில் வளர்ச்சி கருதி அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

**கும்பம்** பிறருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனைகள் கிடைக்கலாம், எடுத்த காரியங்கள் முன்னேற்றமாக அமையும்.

**மீனம்** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடி கொள்ளும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய ஆலோசகர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன


## 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க அறிவுறுத்தல்

வடக்கு மாகாணத்தின் கீழ் உள்ள 12 கல்வி வலயங்களிலும் நிலவும் ஆசிரிய ஆலோசகர்களுக்கான வெற்றிடங்களை பூரணப்படுத்தும் செயற்றிட்டத்தின்கீழ் ஒவ்வொரு வலயத்தின் கீழ் கடமையாற்றும் தகுதியான ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் வடக்கு மாகாண கல்வி திணைக்களத்திற்கு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக அனுப்பி வைக்குமாறு வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக வலயக் கல்வி திணைக்களங்களிற்கு அனுப்பப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒவ்வொரு வலயத்திலும் உரிய பாடத் துறைகளுக்கான ஆசிரிய ஆலோசகர்களை நியமித்து அவர்களின் சேவையினை கல்வி அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக பெற்றுக் கொள்வது என்ற நோக்கில் வெற்றிடமாக உள்ள ஆசிரிய ஆலோசகர்கள் விபரம் கோரப்பட்டு உரிய தெரிவு பரீட்சையினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருப்பதுடன் ஏற்கனவே இப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் தவிர்ந்த புதிதாக விண்ணப்பிக்க விரும்பும் ஆசிரியர்கள் இருப்பின் அவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்று தமக்கு உடன் அனுப்பி வைக்குமாறு மேலும் அச் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-3-15)




நன்றி:- ஐலண்ட்

# வடக்கு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த இந்திய அரசாங்கம் தொடர்ந்தும் உதவும்

## சரியாக பயன்படுத்திக் கொள்ளுமாறு தூதுவர் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் முடிவிற்கு கொண்டு வரப்பட்ட பின்பு வடமாகாணத்தின் அபிவிருத்திக்காக இந்திய அரசாங்கம் பல ஆயிரம் மில்லியன் ரூபாவினை செலவு செய்துள்ளதோடு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் கடன் உதவிகளையும் வழங்கி வருகின்றது. அந்த உதவிகளை சரியான முறையில் பயன்படுத்தி இங்குள்ள மக்கள் எமக்கு ஊக்கமளித்துள்ளனர் என யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்தார்.

இந்தியன் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் இரண்டாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு வங்கியின் மண்டபத்தில் கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்ற மாதிரிக் கிராம அபிவிருத்தித் திட்ட தெரிவின் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியன் வங்கியினால் வழங்கப்பட்ட கடன் தொகையினை தமது கடின உழைப்பினால் மீளச் செலுத்திய வட்டு.மேற்கு கிராம மக்களை பாராட்டுவதோடு இத்திட்டம் வெற்றியளிக்க உதவியதற்காக அவர்களுக்கு எனது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

யாழ்.இந்தியன் வங்கியின் இரண்டாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு மாதிரிக் கிராம அபிவிருத்தித் திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள வட்டு.வடக்கு கிராம மக்களும் திட்டத்தை வெற்றி பெறச் செய்வதோடு பயன் பெற வேண்டும்.

கடந்த 2011 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இந்தியன் வங்கி ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஓராண்டு பூர்த்தியை முன்னிட்டு கடந்த வருடம் வட்டு.மேற்கு கிராமம் மாதிரிக் கிராம அபிவிருத்தித் திட்டத்திற்கு உள்வாங்கப்பட்டது.

இந்தக் கிராமத்தைச் சேர்ந்த 142 பயனாளிகளுக்கு 10.45 மில்லியன் ரூபா கடனாக பகிர்ந்தளிக்கப்பட்டது. பயனாளிகளின் தேவையைக் கருத்தில் கொண்டு இந்தியன் வங்கியினால் வழங்கப்பட்ட கடன் தொகையினை உரிய முறையில் பயன்படுத்தி அத்திட்டத்தினை வெற்றி பெறச் செய்வதோடு தங்களின் கடின உழைப்பினால் தாம் பெற்ற கடனை மீளச் செலுத்தும் அளவுக்கு தொடர்ந்து அந்தத் தொழிலைச் செய்யக் கூடிய அளவிற்கும் வருமானத்தை ஈட்டியுள்ளனர்.

சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வட்டு.மேற்கு கிராம மக்கள் உதவிகளைப் பெறுவதோடு மட்டும் நின்றுவிடாது அதனை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளவும் வேண்டும். இந்திய அரசாங்கம் ஆனது வட பகுதி மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் கடந்த 2009-2010 காலப்பகுதியில் 80 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்களை வழங்கியிருந்தது.

அதுமட்டுமின்றி மன்னார் மாவட்டத்தில் 175 மீனவக் குடும்பங்களுக்கு படகுகள் மற்றும் கடற்றொழில் உபகரணங்களை வழங்கியுள்ளது.

இதுதவிர யாழ்.மாவட்டத்தில் குருநகர் பகுதியில் அமைக்கப்பட்டு வரும் மீன்வலை உற்பத்தி தொழிற்சாலைக்கு 140 மில்லியன் ரூபா செலவில் நவீன இயந்திரங்களை வழங்கியுள்ளது. இந்தத் தொழிற்சாலை எதிர்வரும் மார்ச் மாதமளவில் திறந்து வைக்கப் படவுள்ளது.

மேலும் இந்த வருடம் செப்ரெம்பர் மாத இறுதிக்குள் வடக்கில் இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் 11 ஆயிரம் வீடுகள் கட்டி முடிக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)




# இரு நூல்கள் வெளியீடு

எழுத்தாளர் வைத்தியர் ஆ.பேரின்பநாதன் எழுதியுள்ள சிறுவர் துஷ்பிரயோகம், மதுவும் அடிமை நிலையும் ஆகிய நூல்களின் வெளியீடு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகம் என்ற நூலின் ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக மெய்யியல்துறை தலைவரும் சிரேஷ்ட உளவியல் விரிவுரையாளருமான கலாநிதி கஜிவிந்தனும் மதுவும் அடிமை நிலையும் என்ற நூலின் ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீட உதவிப்பதிவாளர் இ.சர்வேஸ்வராவும் வழங்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் சிறுவர் துஷ்பிரயோகம் என்ற நூலின் முதற் பிரதியை பேராசிரியர் என்.சண்முகலிங்கன் வெளியிட்டு வைக்க தாயகம் சிறுவர் இல்ல அதிபர் தர்மவாரிதி வி.ஸ்ரீதரன் பெற்றுக் கொள்கிறார்.

மதுவும் அடிமையும் என்ற நூலின் முதற் பிரதியை வைத்திய அதிகாரி வைத்தியர் திருமதி.குருபரன் தாரணி வெளியிட்டு வைக்க செல்வி சங்கீதா குருநாதசிவம் பெற்றுக் கொள்ளவுள்ளார். (செ-5)

# தமிழ்பாட கருத்தரங்கு

(சாவகச்சேரி)

முழுநிலா நாளை முன்னிட்டு மீசாலை உயர்கலைக்கல்லூரி நிறுவனத்தினரால் இவ்வருடம் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான தமிழ்பாடக் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் வளவாளர்களாக முன்னாள் உதவி விரிவுரையாளர் த.அஜந்தகுமார், யோ.பகீரதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-3-29)

# இல்ல மெய்வல்லுநர் போட்டிகள்

யா/மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் எஸ்.சிவனேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாம வலயக்கல்வி பணிப்பாளர் எஸ்.சந்திரராஜா, சிறப்பு விருந்தினராக கொமர்ஷல் வங்கி மானிப்பாய் கிளை முகாமையாளர் எஸ்.குருபாதம், கௌரவ விருந்தினராக ஓய்வுபெற்ற உப அதிபர் எஸ். உதயபாலன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (செ-3-23)

* * *

வடஇந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் திருமதி.நவரட்ணம் தேவராணி தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி பு.புஸ்பகுமாரி வழங்கி கௌரவிக்கவுள்ளார். (செ-3-24)

# மணல் ஏல விற்பனை

மல்லாகம் மாவட்ட நீதவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்ட மணல்கள் அடுத்த மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு விற்பனை செய்யப்படவுள்ளன.

மேற்படி மணலினை அன்றைய தினம் அரை மணித்தியாலயத்திற்கு முன்னர் பொது மக்கள் பார்வையிட்டு ஏலத்தில் வாங்குபவர்கள் உடன் பணம் செலுத்தி நீதிமன்ற வளவிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும் எனவும் ஏலத்தில் கோருபவர்கள் தேசிய அடையாள அட்டையினை கொண்டு வர வேண்டும் எனவும் பதிவாளர் அறிவித்துள்ளார். (செ)

# சிவபூமி ஞான ஆச்சிரமம் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

சிவபூமி அறக்கட்டளையினால் சைவ வளர்ச்சிக்கும் சமூக உதவிகளுக்கும் பயன்படுத்தும் வகையில் குப்பிளானில் அமைக்கப்பட்டுள்ள சிவபூமி ஞான ஆச்சிரம திறப்பு விழா எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு சிவபூமி அறக்கட்டளை தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ் ஆச்சிரமத்தை அமெரிக்க ஹவாய் சுப்பிரமுனிய சுவாமிகளின் சீடர் ஆன்மீக சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் திறந்து வைக்கவுள்ளார்.

இந் நிகழ்வில் நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், பருத்தித்துறை சாரதா ஆச்சிரம முதல்வர் சித்ரூபானந்தா சுவாமிகள், அமெரிக்க ஆன்மீகச் சுடர் ரிஷி தொண்டு நாத சுவாமிகள் ஸ்ரீவேதவித்தியாசகர், சுவாமி ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள், சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் அமுத.சுரபி மோகனதாஸ் சுவாமிகள் ஆகியோர் வாழ்த்துரைகளை வழங்கவுள்ளனர். (அ-2-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடகர்கள் மற்றும் அறிவிப்பாளர்கள் போட்டி

யாழ்ப்பாணம் ராசிகலகசனினால் நடத்தப்படும் சிறந்த பாடகர்கள் மற்றும் சிறந்த அறிவிப் பாளர்களை தெரிவு செய்யும் போட்டிக்கான விண்ணப்பங்களை அனுப்பி வைக்க முடியுமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இதில் தேனிசை மழை சிறந்த பாடகர் தெரிவில் 9 முதல் 15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் ஒரு பிரிவாகவும் ஏனையோருக்கு ஒரு பிரிவாகவும் தனியானபோட்டிகள் இடம்பெறும் அதேவேளை அறிவிப்பாளர்களுக்கான தெரிவுப்போட்டியும் இடம்பெறவுள்ளது. இப்போட்டிக்கு விண்ணப்பிப்பவர்கள் வி.எஸ் சற்குணன், 25, பொன்னப்பா லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ ராசி கலக்சன், 199 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ பெயர், வயது, பங்குபற்றும் நிகழ்ச்சி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை விண்ணப்பித்து எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கலைப் போட்டிகள் மணி மதிவதனன், ஜெயசித்ரா ஆகியோரின் 18 ஆம் ஆண்டு நினைவையொட்டி இடம்பெறுகின்றது குறிப்பிடத்தக்கது. (செ-5)

## கொழும்பு வருகிறார் பிரித்தானிய அமைச்சர்

பிரித்தானியாவின் தெற்காசிய விவகாரங்களுக்கான அமைச்சர் அலிஸரயர் பேட் அடுத்த வாரம் கொழும்பு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு வரும் இவர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் உள்ளிட்ட பலரை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

சர்வதேச உறவுகள் மற்றும் தந்திரோபாய கற்கைகளுக்கான லக்ஸ்மன் கதிர்காமர் நிலையம் மற்றும் கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் ஆகியவற்றின் ஏற்பாட்டிலான நிகழ்வொன்றிலும் பிரித்தானிய அமைச்சர் சிறப்புரையாற்றவுள்ளார்.

பிரித்தானிய நாடாளுமன்றத்தின் பொது நலவாய மற்றும் வெளிநாட்டு அலுவலக செயலாளரான அலிஸரயர் பேட் *இலங்கை 2013 உம் அதற்கு அப்பாலும்* எனும் தொனிப்பொருளில் பெப்ரவரி முதலாம்ஆம் திகதி உரையாற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-2)

## பொங்கல் விழாவும் பட்டிமன்றமும்

(யாழ்ப்பாணம்)

அறிவொளி சனசமூகநிலையமும் அறிவொளி கலை இலக்கிய மன்றமும் இணைந்து நடாத்தும் பொங்கல் விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அறிவொளி சனசமூக நிலைய தலைவர் நா.இன்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக சமூகவியல் துறை பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை வங்கி, புன்னாலைக்கட்டுவன் முகாமையாளர் பி. காந்தரூபன், உடுவில் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி சிவஞானராஜா பத்மராணி, யாழ் மாவட்ட கிராமிய உழைப்பாளர் சங்க உபதலைவர் மா.மகேந்திரம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் *தமிழர் வாழ்வியலில் விழாக்கள்* எனும் தலைப்பில் முன்னாள் இந்து கலாசார உதவிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் சிறப்புரையாற்றவுள்ளார்.

அத்துடன் பொங்கல் திருநாள் *சைவத்திருநாளா? உழவர் திருநாளா? தமிழர் திருநாளா?* என்னும் தலைப்பிலான சிறப்பு பட்டிமன்றம், கவியரங்கு ஆகியன நடைபெறவுள்ளதாக அறிவொளி சனசமூக நிலையம் அறிவித்துள்ளது. (செ-9)

## 100 கிலோ கஞ்சா மன்னாரில் மீட்பு

### மூவர் கைதாகினர்

மன்னார் சௌத்பார் கடற்கரைப்பகுதியில் சுமார் நூறு கிலோ கிராம் கஞ்சாப்பொதியுடன் மூவரை கடந்த செவ்வாய்க்கிழமை படையினர் கைது செய்துள்ள நிலையில் அவர்களை மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கடத்தி வரப்பட்ட நூறு கிலோ கஞ்சாப்பொதிகளே மன்னார் சௌத்பார் கடற்பரப்பில் மீட்கப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுமார் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான கஞ்சாப்பொதிகளே மீட்கப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-2)

## ஆழிப்பேரலை முன்னெச்சரிக்கை ஒத்திகை 14 மாவட்டங்களில்

ஆழிப்ரேலை முன்னெச்சரிக்கை ஒத்திகைகள் இடம்பெறவுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய இந்நடவடிக்கை 14 மாவட்டங்களில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் இரண்டு மணிநேரம் இடம்பெறும் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஊடக பணிப்பாளர் சரத் லால்குமார் தெரிவித்துள்ளார். இந்த ஆழிப்பேரலை முன்னெச்சரிக்கை ஒத்திகைகள் கடற்கரைகளை அண்மித்த பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-9)

## "கைகொடுக்கும் நண்பர்கள்" அங்குரார்ப்பண வைபவம்

(யாழ்ப்பாணம்)

"கைகொடுக்கும் நண்பர்கள்" அங்குரார்ப்பண வைபவம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் இல.104, நான்காம் குறுக்குத் தெருவில் நடைபெறவுள்ளது.

அங்குரார்ப்பணம் செய்யப்பட இருக்கும் **கைகொடுக்கும் நண்பர்கள்** என்னும் அமைப்பு கடந்த 38 வருடங்களாக இலங்கையில் இயங்கி வரும் சுமித்ரயோ தொண்டு நிறுவனத்தின் பதினொராவது கிளையாகச் செயற்படுவதுடன் இந்த அமைப்பின் பணியகத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத் தலைவர் கலாநிதி ச.பாலகுமார் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளார்.

உளரீதியாகப் பலவீனப்பட்டு மனத் தளர்வினாலோ தாங்க முடியாத துயரத்தினாலோ தற்கொலையில் நாட்டம் கொள்வோருடைய தற்கொலை உந்துதலை நீக்கி வைப்பதே கைகொடுக்கும் நண்பர்களின் முதன்மையான நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இத்தகையோருக்கு உணர்வு ரீதியான ஆதரவு வழங்கவும் அவர்கள் கூறுவதைப் பொறுமையுடன் செவிமடுத்து அவர்களது பிரச்சினைகளுக்கு அவர்களே தீர்வைக் காண உதவவும் தன்னார்வத் தொண்டர்களுக்கு ஏற்கனவே விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

இப்பணிமனை வாரத்தின் எல்லா நாட்களிலும் பிற்பகல் 12.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை திறந்திருக்கும். ஆதரவு தேவைப்படுவோர் 021 222 8117 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ள முடியும் அல்லது நேரில் பணிமனையில் சந்தித்துக் கலந்துரையாடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்தில் தலைமையகத்தைக் கொண்டு உலகம் பூராகவும் தற்கொலைத் தடுப்புச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் சமரிட்டன்ஸ் நட்புடன் ஆதரிப்போர் இயக்கம் யாழ்ப்பாணத்துக்கு விஸ்தரிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-9)


காணி, வீடு விற்பனைக்கு

காணி: புத்தூர், நிலாவரைச் சந்தியில் 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ஹோட்டல், கடைத் தொகுதி கட்டுவதற்கு ஏற்ற காணி.

வீடு: சுழிபுரம் மேற்கு, பெரியதம்பிரான் கோயிலுக்கு அண்மையில் 7 ½ பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு

காணி: திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையில் நாவலடி லேனில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு

காணி: பருத்தித்துறை முதலாம் கட்டைக்கும் பருத்தித்துறை பஸ் டிப்போவுக்கும் இடையில் 2 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு:
ராஜலக்ஷ்மி என்ரபிறைஸ்
Rajaluxmy Enterprise
Real Estate
காணி, வீடு வாங்கித் தருவதற்கும் விற்றுக்கொடுப்பதற்குமான நிறுவனம்
26D, பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
(தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக)
E-mail:nrluxmy@gmail.com
தொ.பே: 0779994603, 0215684810


## கால்கோள் விழா

சுன்னாகம் மயிலணி ஜனசக்தி முன்பள்ளி மாணவர்களின் கால்கோள்விழா, பொங்கல் விழா ஆகியன இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஜனசக்தி முன்பள்ளியில் முன்பள்ளி முகாமைத்துவக்குழு தலைவர் சி.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ல் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச முன்பள்ளி இணைப்பாளர் திருமதி லோகேஸ்வரன் புஸ்பராணி, சிறப்பு விருந்தினர்களாக ஜனசக்தி சனசமூக நிலைய முன்னாள் தலைவர் திரு. திருமதி அ.சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-9)


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| | |
|---|---|
| பிறப்பு: 1978 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம் 4<br>உயரம்: 5'11"<br>கி.பா: 42<br>தகைமை/தொழில்: A/L, Manager (ஜேர்மனி PR)<br>தொ.இ: B -1036 | பிறப்பு: 1970 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>உயரம்: 5'4"<br>கி.பா: 93, 1இல் செவ்<br>தகைமை/ தொழில்: A/L, பிரதம மொழி பெயர்ப்பாளர்<br>தொ.இ: G -1099 |
| பிறப்பு: 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பூரம்<br>உயரம்: 5'6"<br>கி.பா:44.75, 12 இல் செவ்<br>தகைமை/தொழில்: தொழில்நுட்ப பொறியியலாளர் (UK PR)<br>தொ.இ: B -1037 | பிறப்பு: 1987 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: சுவாதி 2<br>உயரம்: 5'1"<br>கி.பா: 59.75, 8 இல் செவ்.<br>தகைமை/ தொழில்: HNDA மாணவி<br>தொ.இ: G-1100 |
| பிறப்பு: 1974 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 3<br>உயரம்: 5'6"<br>கி.பா: 9.25<br>தகைமை/ தொழில்: B.Sc? SLAS உதவி பிரதேச செயலர்<br>தொ.இ: B -1039 | பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: மூலம் 3<br>உயரம்: 5'1"<br>கி.பா:23<br>தகைமை/ தொழில்: A/L<br>தொ.இ: G -1102 |
| பிறப்பு: 1980 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்: பரணி 2<br>உயரம்: 5'6"<br>கி.பா: 44.25<br>தகைமை/தொழில்: O/L மின் இணைப்பும் குழாய் பொருத்துநர்<br>தொ.இ: B -1040 | பிறப்பு: 1983 இந்து விஸ்வகுலம்<br>நட்சத்திரம்: பூரம் 1<br>உயரம்: 5'2"<br>தகைமை/ தொழில்: B.Sc (Hons), ACCA (Qualified), Assistant Accountant<br>தொ.இ: G -1103 |

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தாத்தில் தற்கொலைத் தாக்குதல்; 42 பேர் பலி



தலைநகர் பக்தாத்திற்கு வடக்கே அமைந்துள்ள ஷியா பிரிவினரின் மசூதிக்குள் புகுந்த மனித குண்டுதாரி நடத்திய தாக்குதலில் 42 பேர் பலியாகியதுடன் 75 இற்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இத்தாக்குதல் சம்பவம் பக்தாத்துக்கு வடக்கே 175 கிலோமீற்றர் தொலைவில் உள்ள அல்ஹீகாதா மசூதியில் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

ஆறு மாதத்தில் நடந்த மிகப் பெரிய கொடூர தாக்குதல் இதுவாகும். ஷியா பிரிவைச் சேர்ந்த பிரதமர் நூரி அல் மாலிகி தலைமையிலான அரசைக் கண்டித்து ஈராக்கில் ஒரு மாத காலமாகவே ஆங்காங்கே போராட்டம் நடந்து வருகிறது. அதன் ஒரு பகுதியாகவே இந்த தாக்குதலும் இடம்பெற்றுள்ளது. இதனால் ஈராக்கில் பதற்றம் மேலும் அதிகரிக்கும் நிலை உருவாகியுள்ளது.

மனித குண்டுத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை. எனினும் பிரதமர் மாலிகி தலைமையிலான அரசை குலைக்கும் நோக்கில் சன்னி பிரிவு பயங்கரவாதிகள் அடிக்கடி போராட்டம் நடத்தி வருகின்றனர்.

ஒருவரின் இறுதி ஊர்வலத்தை இலக்கு வைத்து பயங்கரவாதிகள் இந்த தாக்குதலை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இத்தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் தொகை மேலும் அதிகரிக்கலாம் எனவும் அச்சம் வெளியிடப்படுகிறது. (செ-2)

# மும்பை தாக்குதல் சதிகாரனை இந்தியாவிடம் ஒப்படைக்க முடியாது

## அமெரிக்கா தெரிவிப்பு

மும்பை தாக்குதலுக்கு சதித் திட்டம் தீட்டிக் கொடுத்த லக்ஷர்-இ-தொய்பா இயக்கத்தைசேர்ந்ததொய்பா டேவிட் கோல்மேன் ஹெட்லியை இந்தியாவிடம் ஒப்படைக்க முடியாது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

மும்பையில் 2008 நவம்பரில் தாக்குதல் நடத்திய அஜ்மல் கசாப்புக்கு கடந்த ஆண்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இந்தத் தாக்குதலுக்கு சதித்திட்டம் தீட்டிக் கொடுத்த அமெரிக்கா வாழ் பாகிஸ்தானியரான ஹெட்லியையும் ராணாவையும் அமெரிக்க பொலிஸார் கைது செய்தனர். மும்பை தாக்குதலுக்கு சதித் திட்டம் தீட்டிக் கொடுத்ததை ஹெட்லி ஒப்புக் கொண்டதால் அவருக்கு மரண தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

டென்மார்க் நாட்டின் பத்திரிகை அலுவலகத்தில் குண்டு வைக்க முயன்றது தொடர்பாக தகவூர் ராணாவுக்கு கடந்த வாரம் 14 ஆண்டுகள் சிறைத் தண்டனை அளிக்கப்பட்டது.

மும்பை குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக இந்திய புலனாய்வு அதிகாரிகள் அமெரிக்கா சென்று ஹெட்லியிடம் விசாரணை மேற்கொண்டனர். எனினும் ஹெட்லியை இந்தியாவிடம் ஒப்படைக்க அமெரிக்கா மறுத்து விட்டது.

ஹெட்லிக்கு 35 ஆண்டு சிறை தண்டனை அளிக்க அமெரிக்க அரசு தரப்பில் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, ஹெட்லியை ஒப்படைக்க முடியாது என அமெரிக்கா கூறியுள்ளது ஏமாற்றத்தை அளிக்கிறது என இந்திய வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார். (செ-5)

# விமானங்களை தாக்கும் பறவைகளை தடுப்பதற்கான கருவி கண்டுபிடிப்பு

(லண்டன்)

விமானங்களை பறவைகள் தாக்குவதை தடுக்கும் புதிய கருவியை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இது குறித்து அறிவியல் இதழில் கூறப்பட்டுள்ளதாவது,

விமானப் பாதையில் பறவைகள் குறுக்கிடுவதால் விமான விபத்துக்கள் உள்ளிட்ட பிரச்சினைகள் ஏற்படுகின்றன. உலக அளவில் இப்பிரச்சினை காணப்படுகிறது. இதனால் கோடிக்கணக்கான வருவாய் இழப்பும் ஏற்படுகிறது. இதனைத் தடுக்கும் வகையில் புதிய கருவி ஒன்றை அமெரிக்காவின் லூசியானா விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர்.

இது மற்ற கருவிகளைப் போல் அதிகமான சப்தம் எழுப்பாமல் சகித்துக் கொள்ளும் அளவிற்கு மட்டுமே சப்தம் எழுப்பும். ஆனால், இந்த சப்தத்தால் பறவைகள் விமான ஓடு பாதையின் குறுக்கே வருவது தடுக்கப்படும். இந்த கருவி விமான நிலையங்கள் மற்றும் பறவைகள் அதிகமாக கூடும். மாசுபட்ட நீர் நிலைகள் அருகே வைக்கப்படும்.

இது குறித்து இக்கருவியை தயாரிக்கும் லூசியானாவை சேர்ந்த அதிகாரி கூறியதாவது,

இக் கருவி காதுகளுக்கு எவ்வித கெடுதலையும் ஏற்படுத்தாது. அதே நேரத்தில் பறவைகளை விரட்டியடிக்கும். இக் கருவியை சோதனை முறையில் பயன்படுத்தியதில் நல்ல பலன் கிடைத்துள்ளது. இக் கருவியை பொருத்துவதன் மூலம் புறாக்களை விரட்டியடிக்க முடியும். அல்லது விமான பாதையிலிருந்து அவற்றை திசை மாறி செல்ல வைக்க முடியும். அடுத்த இரண்டு ஆண்டுகளில் இப்புதிய கருவி பயன்பாட்டிற்கு வரும் என அவர் கூறினார். (செ-2)



புதுடில்லி இந்திரா காந்தி சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய பூடான் அரசர் ஜிக்மே கேசார் நாம்ஜியெல் வாங்சக் மற்றும் அரசி ஜேட்சன் பெமா ஆகியோரை வெளியுறவுத்துறை இணை மந்திரி ஈ.அகமது வரவேற்றதைப் படத்தில் காணலாம்.

# ஐரோப்பிய நாடுகளில் நாற்பது இலட்சம் பேர் ஓராண்டில் வேலையிழப்பு

(நியூயோர்க்)

உலகம் முழுவதும் பல நாடுகளில் பொருளாதார பின்னடைவு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகள் பெரும் சிரமத்தை சந்தித்து வருகின்றன. இதன் காரணமாக உலகம் முழுவதும் வேலை இழப்புகள் அதிகமாகி வருவதாக உலக தொழிலாளர் அமைப்பு தெரிவித்துள்ளது.

உலகம் முழுவதும் தற்போது 19 கோடியே 70 இலட்சம் பேர் வேலையில்லாமல் உள்ளனர்.

அதாவது வேலை செய்யும் திறனுள்ளவர்களில் 6 சதவீதம் பேருக்கு வேலையில்லை.

கடந்த ஒரு ஆண்டில் மட்டும் 40 இலட்சம் பேர் வேலையிழந்துள்ளனர். 24 வயதுக்கு குறைவானவர்களுக்கு வேலை கிடைப்பது மிகவும் சிரமமாக உள்ளது. ஐரோப்பிய நாடுகளில் 3 இல் ஒரு பங்கினர் ஒரு வருடத்துக்கு மேலாக வேலையில்லாமல் இருப்பதாகவும் உலக தொழிலாளர் அமைப்பு கூறியிருக்கிறது. (செ-2)

# உலக தரிசனம்

# 15 பேர் பலியாவதற்கு கடும் பனி காரணம்!

கடும் பனி பொழிவு காரணமாக சோதனை சாவடி அருகே தடுப்புக்காக அமைக்கப்பட்டிருந்த இரும்பு கம்பிகள் மீது பயணிகளுடன் சென்ற பேருந்து மோதி ஏற்பட்ட விபத்தில் 15 பேர் பலியாகியுள்ளதோடு 10 பேர் காயமடைந்துள்ளனர். பீகார் மாநிலம் கயா அருகே பேருந்து ஒன்று நேற்று முன்தினம் அதிகாலை சென்று கொண்டிருந்தது. கடும் பனிப் பொழிவு காரணமாக சாலையே தெரியாத அளவுக்கு பனி மூட்டம் இருந்தது. இந்த நிலையிலும் தொடர்ந்து பேருந்தை செலுத்தினார். இதில் கட்டுப்பாட்டை இழந்து பேருந்து சோதனை சாவடி அருகே தடுப்புக்காக அமைக்கப்பட்டிருந்த இரும்பு கம்பிகள் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இதில் 15 பேர் சம்பவ இடத்திலேயே பலியானதோடு 10 பேர் காயமடைந்தனர். அவர்கள் பல்வேறு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (செ-5)


# டெங்கின் தாக்கம் உலகில் அதிகரிப்பு

தென் அமெரிக்கா நாட்டிலும் டெங்கு காய்ச்சல் அதிகமாகப் பரவி மக்களை பீதிக்குள்ளாக்கியுள்ளது. இக்காய்ச்சலுக்கு பிரேசில், பராகுவே ஆகிய நாடுகளில் உள்ள பல்லாயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். பிரேசிலில் உள்ள கேம்போ கிரைனைட் நகரில் மட்டுமே 3 ஆயிரம் பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதோடு அவர்களில் 2 பேர் பலியாகியுள்ளனர்.

பராகுவே நாட்டில் 8 ஆயிரத்து 500 பேர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 8 பேர் பலியாகியுள்ளனர். அயல் நாடான உருகுவே, சிலி, பெரு ஆகிய நாடுகளிலும் குறித்த காய்ச்சல் பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. தொடர்ந்து டெங்கு காய்ச்சல் அதிகரித்துள்ளதால் இதைக் கட்டுப்படுத்த வெளிநாடுகளிலிருந்து மருந்துகளை இறக்குமதி செய்து வருகிறார்கள். (செ-5)

# ஐ.நா.தடையை மீறி அணுஆயுத சோதனையில் வடகொரியா முனைப்பு

(நியூயோர்க்)



வடகொரியா சமீபத்தில் விண்ணில் ரொக்கெட்டை ஏவியது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்த ஐ.நா.பாதுகாப்பு சபை வடகொரியாவிற்கு புதிய தடைகளைக்கொண்டு வந்தது. மேலும் அணு ஆயுதங்களை பயன்படுத்தி இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்று ஐ.நா.எச்சரித்துள்ளது.

இது குறித்து ஐ.நா.பாதுகாப்பு சபை வடகொரியா குறித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அதில் வடகொரியா கண்டம் விட்டு கண்டம் சென்று தாக்கும் ஏவுகணைகள் மற்றும் அணு ஆயுத சோதனைகள் நடத்துவதற்கு ஐ.நா.பாதுகாப்பு சபை தடை விதித்ததோடு மேலும் அதற்கான பொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்களை வாங்கவும் தடை ஏற்படுத்தியிருந்தது.

மேலும் வடகொரியா கம்பனிகளோ அல்லது அரச நிறுவனங்களோ அணு ஆயுதப் பொருட்களை இறக்குமதி செய்யக்கூடாது. மேலும் ஏவுதலோ அல்லது அணு ஆயுத சோதனைகளோ தொடருமானால் வடகொரியாவிற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

வடகொரியாவுடன் நடக்கும் இதுபோன்ற நடவடிக்கைகளுக்கான பணப்பரிமாற்றத்தை தடுப்பது குறித்து கண்காணிக்க உறுப்பு நாடுகள் கேட்டுக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஐ.நா.தடை பிறப்பித்த சில மணி நேரங்களிலேயே அணு ஆயுத சோதனைகள் தொடரும் என்று வடகொரியா பதிலடி கொடுத்துள்ளது. மேலும் [illegible] அணு ஆயுதமில்லாப் பகுதியாக்க வேண்டும் என்கிற பேச்சுக்கே இடமில்லை என்றும் வடகொரியா மிரட்டல் விடுத்துள்ளது. (செ-5)

# மன்னரை அவமதித்தவருக்கு 11 ஆண்டுகள் சிறை!

தாய்லாந்தில் மன்னரை அவமதித்த முக்கிய அரசியல் பிரமுகருக்கு பாங்காக் நீதிமன்றம் 11 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்தது.

முன்னாள் பத்திரிகை ஆசிரியர் சோம்யோத் ப்ரூக்சக். சிவப்பு சட்டை போராட்டக் குழுவைச் சேர்ந்த இவர் மன்னர் குடும்பத்துக்கு எதிராக 2 கட்டுரைகளை எழுதியதாக பாங்காக் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. இந்த வழக்கில் அவருக்கு 11 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

முன்னதாக இவர் கடந்த ஆண்டு ஏப்ரலில் கைது செய்யப்பட்டார். இதற்கு மனித உரிமை அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

ஆனால், மன்னருக்கு எதிராக கருத்து கூறவில்லை என்றும் இது குறித்து மேல் முறையீடு செய்யப் போவதாகவும் சோம்யோத்தின் வழக்குரைஞர் கூறியுள்ளார். மன்னருக்கு எதிரான கருத்து தெரிவிப்பவர்களை தண்டிக்கும் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைக்கு சோம்யோத் ஆதரவு தெரிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (செ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் இடமாற்றங்களில் பிரச்சினைகள் உண்டு

## சுட்டிக்காட்டி பொதுநிர்வாக அமைச்சுக்கு கடிதம்

(திருகோணமலை)

இணைந்தசேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றம் கால அவகாசமின்றி அவசரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பொருத்தமற்ற இடங்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுமிடத்து பல பிரச்சினைகளை உத்தியோகத்தர்கள் எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படும் என பல விடயங்களைச் சுட்டிக்காட்டி வடக்கு, கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் அ.தினேஷ்குமார் வடமாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

இணைந்தசேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றம்-2013 தொடர்பில் கடந்த வருடம் நவம்பர்மாதம் 30ஆம் திகதி அனுப்பிவைத்த கடிதத்திற்கு மேலதிகமாக கடந்த 19ஆம் திகதி பொதுநிர்வாக அமைச்சின் செயலாளருக்குஅவர் அனுப்பிவைத்துள்ள இரண்டாவது கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வடமாகாண சபையின் கீழ்வரும் இணைந்த சேவை உத்தியோகத்தர்களுக்கான வருடாந்த இடமாற்றத்திற்கான விண்ணப்பங்களைக் கோரி நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தொழிற்சங்கத்தின் பிரதிநிதித்துவத்தை இடமாற்ற சபையில் வழங்கி உத்தியோகத்தர்களுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் இடமாற்றத்தை மேற்கொள்ள உதவுமாறும் தங்களைக் கேட்டிருந்தோம்.

இருப்பினும் ஆளணி மீள் பரவலாக்கல் என்ற வகையில் உத்தியோகத்தர் பலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

கடந்த பல வருடங்களாக வருடாந்த இடமாற்றம் மேற்கொள்ளப்படாத நிலையில் இடமாற்ற விண்ணப்பங்கள் கோரப்பட்டு முறையாக பரிசீலிக்கப்பட்டு இடமாற்றம் வழங்கப்படாது திடீரென இடமாற்ற கட்டளை வழங்கும்போது பெரும்பாலான உத்தியோகத்தர்கள் வெகுவாகப் பாதிக்கப்படும் சந்தர்ப்பம் உள்ளதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அத்துடன் இவ்விடமாற்ற திட்டமானது ஆளணி மீள் பரவலாக்கல் என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படினும் பதிலீடுகள் வழங்கப்பட்டும் போதிய கால அவகாசம் இன்றி அவசர அவசரமாக மேற்கொள்வதனை நோக்குமிடத்து முறையான இடமாற்றக்கொள்கை இன்றி எழுந்தமானமாக நடைபெறுவதை உணரமுடிகின்றது.

யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்டும் பொருளாதார கஷ்டத்திற்கு மத்தியில் வாழ்ந்துவரும் உத்தியோகத்தர்களுக்கு பொருத்தமற்ற இடங்களுக்கு இடமாற்றம் வழங்கப்படுமிடத்து இவர்கள் மேலும் பொருளாதார கஷ்டங்களை எதிர்நோக்குவதுடன் வாழ்க்கைத்தரமும் மிகவும் மோசமடையும்.

எனவே இவ்விடமாற்றத்தால் பாதிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மேன்முறையீடு செய்யுமிடத்து அவர்களது விண்ணப்பங்களை சாதகமான முறையில் பரிசீலனை செய்து அவர்களுக்கு பொருத்தமான இடங்களுக்கு இடமாற்றம் வழங்குவதுடன் தாபன விதிக்கோவை அத்தியாயம் XIV பிரிவு 24 இன் பிரகாரம் சரி செய்கைப்படி மற்றும் சகல கொடுப்பனவுகளையும் வழங்கி உத்தியோகத்தர்களது பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுக் கொடுத்து உதவுமாறு தொழிற்சங்கம் சார்பாக தங்களை மிகவும் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றேன் என அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் வடமாகாண ஆளுநர், வடமாகாண பிரதம செயலாளர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணம் பிராந்திய இணைப்பாளர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (செ-6-9)

### செய்மதி தொலைபேசியுடன் இலங்கையர் கைது

இந்தியாவில் பாவனைக்கு தடை செய்யப்பட்ட செய்மதித் தொலைபேசியொன்றை பயன்படுத்தியதாகக் கூறப்படும் அவுஸ்திரேலிய குடியுரிமை பெற்ற இலங்கையைச் சேர்ந்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

39 வயதான ஒருவரே நேற்றுமுன் தினம் புதன்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கோழிப்பண்ணையொன்றை அமைக்கும் நோக்கில் இந்தியாவின் தேநீர் பட்டிப் பகுதியில் இவர் காணியொன்றை வாங்கியுள்ளார். இந்நிலையிலேயே இவர் தேநீர்ப் பட்டிக்கு வந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் கியூ பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து இவர் கைதுசெய்யப்பட்டார். (செ-11)

### சமுர்த்தி அலுவலர்களுக்கு பயிற்சிப்பட்டறை

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் வங்கி நிதி நடவடிக்கை பிரிவினால் சமுர்த்தி வங்கிசங்கங்களில்கணக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தமிழ்மொழி மூலமான பயிற்சிப்பட்டறை நடத்தப்படவுள்ளது. இப்பயிற்சி பட்டறை எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9 மணிக்கு இலக்கம் 100, ஸ்ரீலங்கா பதநம மாவத்த, சுதந்திர சதுக்கம், கொழும்பு 7 எனும் முகவரியில் உள்ள இலங்கை மன்ற கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது என யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (செ-3-19)

# காரைநகர் பிரதேசத்தில் கட்டாக்காலிகள் தொல்லை

## விவசாயம் பாதிப்பதாக மக்கள் கவலை

(மானிப்பாய்)

காரைநகர் பிரதேசத்தில் கட்டாக்காலி கால்நடைகளால் விவசாயம் பாதிக்கப்படுவதாக அப்பகுதிவிவசாயிகள் கவலைதெரிவித்துள்ளனர்.

காரைநகர் பிரதேச வாழ் மக்களின் தொழிலாக காணப்படுவது விவசாயம் ஆகும்.

இந்த வேளாண்மைத் தொழில் பெரும் போகம், சிறுபோகம் என இரு போகங்களாக மேற்கொள்ளப்பட்டாலும் இயற்கை அன்னையின் சாபக்கேடால் இம்முறை பிந்திய மழை வீழ்ச்சியால் மிகுந்த சிரமங்கள் ஏற்பட்டுள்ளது.இந்நிலையில் பெரும்போக பயிர்ச்செய்கையை மட்டுமே நம்பியிருக்க வேண்டிய நிலை உள்ளது.


இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட நெற் பயிரானது வளர்ந்து வரும் காலத்தில் கட்டாக்காலிகளாக காணப்படும் கால்நடைகளால் நாசமாக்கப்படுகின்றன. இவ்வாறு பயிருக்கு சேதம் விளைவிக்கும் கால்நடைகளை பிடிப்பதற்கு பிடியாளர்கள் நியமிக்கப்பட்டு பிடிக்கப்பட்டாலும் அக்கால்நடைகளை நீண்ட நாட்கள் வைத்து பராமரிப்பது கஷ்டமாக உள்ளதாலும் காரைநகர் பிரதேசத்தை விட்டு வெளியே கொண்டு செல்ல தடைவிதிக்கப்பட்டுள்ளதாலும் கால்நடைகளை பிடிப்பதை கைவிட்டுள்ளனர்.

இதனால் கால்நடைகள் இரவில் சென்று பயிர்களை சேதமாக்குவதால் நாளுக்கு நாள் தொல்லைகள் அதிகரித்து வருகிறது.மக்கள் கால்நடைகளுக்கு நச்சு மருந்து வைத்து கொல்கிறார்கள். இன்றுவரை எத்தனையோ கால்நடைகள் இறந்து வருகின்றன. ஆறறிவு படைத்த மனிதர்களின் சில அசமந்த போக்கே ஐந்தறிவு படைத்த உயிரினங்களின் அழிவுக்கு வழிவகுக்கின்றது.

கால்நடைகளின் உரிமையாளர்கள் இல்லாத படியால் கால்நடைகளை அடக்கம் செய்வதில் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். இதனால் பல சுகாதார சீர்கேடுகளும் இடம்பெறுகின்றன.

எனவே இதனை உரிய திணைக்களங்கள் அரச அதிகாரிகள் ஆகியோர் இவ்வாயில்லா ஜீவன்களின் பாதுகாப்பையும் விவசாயத்தை நம்பியிருக்கும் தமது வாழ்வினையும் பாதுகாக்க முன்வர வேண்டுமென அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(செ-3-23)

# வாழ்வாதார உதவி வழங்கல்



(காரைநகர்)

காரைநகர் சுவிஸ் அபிவிருத்தி சபையினால் வியாவில் ஐயனார் ஆலயம் ஊடாக வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதற்கென ஒரு இலட்சத்து 5 ஆயிரத்து 100 ரூபா நிதி அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.இவ் உதவிக் தொகைகளை காரைநகர் அபிவிருத்தி சபையின் முன்னாள் தலைவர் பயனாளிகளுக்கு வழங்கி வைத்தார்.

இதன்போது கால்கள் இயலாத கடற்றொழிலாளர் ஒருவருக்கு 50ஆயிரம் ரூபா உதவி தொகையும் 6மாதங்களுக்கான முதல் மாத கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா நிதியும் வழங்கப்பட்டதோடு மற்றுமோர் பயனாளிக்கு 6 மாதங்களுக்கான முதல் மாத கொடுப்பனவு 5 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது. இதன்போது காரைநகர் அபிவிருத்தி சபையின் செயலாளர் இதிருப்புகழூர் சிங்கம், பொருளாளர் ந.பாரதி, ஓய்வுபெற்ற ஆசிரியர் ஆ.கமலாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (செ-5-246)

# தேசிய சுதந்திரதின அணிவகுப்பில் வடக்கு மாணவர்களும் இணைப்பு

## அவர்களுக்கான பயிற்சிகள் ரந்தம்பையில்

(மல்லாவி)

இலங்கையின் 65 ஆவது தேசிய சுதந்திர தின அணி வகுப்பில் பங்குகொள்வதற்காக வடக்கு மாகாண பாடசாலை மாணவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பாடசாலைகளில் கல்வி பயிலும் தேசிய மாணவர் படையணி மாணவர்களுக்கான பயிற்சி ஒன்று கடந்த 23 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி வரை ரந்தம்பை பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்று வருகின்றது. இதனை 20 ஆவது தேசிய மாணவர் படையணி கட்டளை அதிகாரி லெப்.கேணல் ஏச்.எம்.ஏச் பிலப்பிட்டியா உறுதிப்படுத்தியுள்ளார்.

இப்பயிற்சியில் யாழ்ப்பாணம், வடமராட்சி வலிகாமம், கிளிநொச்சி, துணுக்காய் ஆகிய கல்வி வலயங்களின் கீழ் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கே பயிற்சி வழங்கப்படுகின்றது.

இப்பயிற்சிநெறியினை பூர்த்தி செய்து நடைபெறவுள்ள சுதந்திரதின அணிவகுப்பில் பங்குபற்றும் மாணவர்களுக்கு தேசிய ரீதியான சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-3-15)

# எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நூல்கள் கொள்வனவு திட்டம்

## வவு.பிரதேச செயலர் தெரிவிப்பு

(குருமன்காடு)


எழுத்தாளர் ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் எழுத்தாளர்களின் நூல்களை கொள்வனவு செய்ய கலாசார அலுவல்கள் திணைக்களம் திட்டமிட்டுள்ளதாக வவுனியா பிரதேச செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்துள்ளார்.

கலாசார அலுவல்கள் திணைக்களம் தமது எழுத்தாளர் ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் பிரதேச செயலாளர் பிரிவுதோறும் வசித்து வரும் எழுத்தாளர்களிடம் 2012 ஆம் மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் வெளிவந்த நூல்களில் தகுதியான சிலவற்றை கொள்வனவு செய்வதற்கு தீர்மானித்துள்ளதெனவும் மேற்படி நூல் கொள்வனவிற்கு விண்ணப்பிக்க விரும்புவர்கள் தமது நூல்களுடன் பிரதேச செயலகத்தில் விண்ணப்பப்படிவத்தினை பெற்று ஒப்படைக்கும் பட்சத்தில் அதனை கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்க முடியுமெனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஒன்றிற்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டிருப்பின் அவை ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான விண்ணப்பப்படிவங்கள் இணைக்கப்பட வேண்டும் என்பதுடன் பாடப்புத்தகங்கள், தொகுப்பு நூல்கள், வார வெளியீடுகள் மற்றும் மாதிரி வினாவிடை புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட மாட்டாது எனவும் பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-9-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Asus நிறுவனத்தின் புதிய படைப்பு



Asus நிறுவனம் நவீன தொழில்நுட்பங்களினை உட்புகுத்தி உருவாக்கிய VivoTab ME400 கணனிகளை அறிமுகப்படுத்துகின்றது.

10.1 அங்குல அளவுடைய மற்றும் 1366 x 768 Pixel Resolution கொண்ட HD திரையினை கொண்டதாகக் காணப்படும் இக்கணனிகள் விண்டோஸ் 8 இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு செயற்படவல்லன.

இவற்றுடன் 9.5 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக மின்னை வழங்கக்கூடிய மின்கலங்கள், 8 மெகாபிக்சல்கள் உடைய பிரதான கமரா, 2 மெகாபிக்சல்கள் உடைய துணைக் கமரா ஆகியவையும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

ஜனவரி 31 ஆம் திகதியளவில் அறிமுகப்படுத்தப்படவுள்ள இவற்றின் பெறுமதியானது 400 யூரோக்கள் ஆகும்.

# Firefox OS ஸ்மாட் போன்



Mozilla நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட Firefox இயங்குதளத்தினை (Firefox OS) அடிப்படையாகக் கொண்ட முதலாவது ஸ்மார்ட் கைபேசி சோதனைக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

3.5 அங்குல அளவு மற்றும் HVGA தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்ட தொடு திரையினைக் கொண்ட இக் கைபேசிகள் 1GHz வேகத்தில் செயலாற்றவல்ல Snapdragon S1 Processor மற்றும் பிரதான நினைவகமாக 512MB RAM ஆகிவற்றினை உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டுள்ளன.

மேலும் இவற்றின் சேமிப்பு வசதியானது 4GB ஆகவும் அமைந்துள்ளது.

இக் கைபேசிகள் விரைவில் விற்பனைக்கு வரும் என Mozilla நிறுவனம் தெரிவித்துள்ளது.

# இந்திய மாணவியின் கண்டுபிடிப்பு

இந்தியாவை சேர்ந்த Sankalp Sinha என்ற 19 வயதான மாணவி ஒருவர் SingNshock எனும் கடிகாரம் ஒன்றினை உருவாக்கி அசத்தியுள்ளார்.

முற்றுமுழுதாக டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் உருவாக்கப்பட்டுள்ள இக்கடிகாரத்தினை தொடுதிரை மூலமாக கையாளக்கூடியவாறு காணப்படுகின்றது.

விருப்பமான பாடல் மற்றும் அதிர்வு என்பனவற்றினை அடிப்படையாகக் கொண்டு அலாரத்தினை ஏற்படுத்துவதன் மூலம் தூக்கத்திலிருந்து இலகுவாக விழித்துக்கொள்ள முடியும் என்ற கொள்கையின் அடிப்படையில் இக்கடிகாரம் உருவாக்கப்பட்டுள்ளதுடன் பாடல்களை சேமிப்பதற்கென 32GB SD சேமிப்பு வசதியும் உள்ளடக்கப்பட்டுள்ளது.




## தொழில்நுட்ப வல்லுநர்களை அறிந்துகொள்ளுங்கள்




### பில்கேட்ஸ்



தொழில்நுட்பத்தின் கடவுள் என்று போற்றப்படுபவர் மைக்ரொசொப்ட் நிறுவுநர் பில்கேட்ஸ் அவர்கள்தான்.

இவர் 1995 முதல் 2007 வரை உலகின் மிகப்பெரிய பணக்காரர் என்ற முதலிடத்தை தக்கவைத்திருந்தது குறிப்பிடத்தக்கது. மைக்ரொசொப்ட் நிறுவன தலைவர் பதவியிலிருந்து விலகிய பில்கேட்ஸ், தனது மனைவியுடன்சேர்ந்து அறக்கட்டளைகளை ஆரம்பித்து நற்பணிகளை செய்துவருகிறார்.

### ஸ்டீவ் ஜாப்ஸ்



அப்பிள் நிறுவனத்தின் தொழில்நுட்ப 'கிராண்ட்மாஸ்டர்' என அழைக்கப்படுபவர் தான் அப்பிள் நிறுவனத்தை நிறுவியவர்களில் ஒருவரான ஸ்டீவ் ஜாப்ஸ். இவர் எந்தப் பணியையும் துணிந்து ஆற்றுவார். எந்த வித தடைகளுக்கும் அஞ்சாதவர். மடிக் கணனி, ஐபாட், ஐபோன் மற்றும் ஐபேட் ஆகியவைகளை நமக்கு அறிமுகப்படுத்தியதில் ஸ்டீவ் ஜாப்ஸுக்கு பெரும் பங்குள்ளது

### மார்க் ஜுகர்பர்க்




மார்க் ஜுகர்பர்க் தான் "பேஸ்புக்" என்ற புதிய உலகத்தையே நமக்காக உருவாக்கிக் கொடுத்தவர். பேஸ்புக் பற்றித்தெரியாத குழந்தைகூட இருக்கமுடியாத அளவுக்கு கணனி முதல் சீன கைபேசி வரையிலும் பேஸ்புக் உலகம் விரிவடைந்துள்ளது. இவர் தான் உலகின் 2ஆவது சிறுவயதுடைய பணக்காரர் என்ற பெருமையை பெறுகிறார்.

இதில் சுவாரஸ்யமான தகவல் என்னவெனில் முதலாவது சிறுவயதுடைய பணக்காரருக்கும் இவருக்குமான வயது வித்தியாசம் வெறும் 8 நாட்கள்தான்.

# நீங்கள் கணனி பாவனையாளரா...?

### தொடங்குவதை வேகமாக்குங்கள்:

கணனியை இயக்கினால் சிறிது நேரத்திற்குப்பின் தான் செயற்படுநிலைக்கு வருகின்றது. இதை 'ஸ்டார்ட்-அப்' (Startup) என சொல்கிறார்கள். இந்த Startup ஆனது விண்டோஸ் 8 இயங்குதளத்தில் இல்லை.

இந்த Startup இல் உள்ள தானாக இயங்கும் சில அப்ளிகேசன்களை நீக்குங்கள். இதை செய்வதற்கு "msconfig" என Run இல் தட்டச்சு செய்து, வரும் திரையில் Startup' என்பதை தெரிவுசெய்யுங்கள். இதில் எந்தெந்த அப்ளிகேசன்கள் இருக்கவேண்டும், எவற்றையெல்லாம் நீக்கவேண்டும் என்பதை முடிவு செய்யுங்கள். இதை சரிசெய்தாலே உங்கள் கணினியானது சற்றே வேகமாகும்.

### கணனியை 'சுத்தம்' செய்யுங்கள்:

அதாவது கணினியில் உள்ள தேவையற்ற குப்பைளையும் நீக்கவேண்டும்.
இங்கே குப்பைகள் எனப்படுவது,
டெம்பரரி தரவுகள்,
சேமிக்கப்பட்ட இணைய பக்கங்கள்,
கணனியில் படியும் இன்டர்நெட் தரவுகள்,
இவைகளை நீக்கினாலே உங்கள் கணனியானது மேலும் அதிகமான வேகத்தில் செயற்படும். இவை அனைத்தையும் ஒவ்வொன்றாக நீக்குவது சற்றே கடினம். மேற்சொன்னவற்றை ஒரே அழுத்ததில் நீக்க வேண்டுமா? அப்படியானால் சிசிகிளீனர் என்ற அப்ளிகேசன் பயன்படுகிறது.

### அளவை குறையுங்கள்:

நமது கணனியில் பயன்படுத்தும் சாதாரண அப்ளிகேசன்களின் எண்ணிக்கையையும், 'சைசையும்' (Size) குறைக்கவேண்டும். உதாரணமாக திரைப்படங்கள் பார்க்க நீங்கள் 'விண்டோஸ் மீடியா பிளேயர்' பயன்படுத்துகிறீர்கள் என்றால் அதற்கு மாற்றாக VLC மீடியா பிளேயர் பயன்படுத்திப்பாருங்கள். ஏனெனில் விண்டோஸ் மீடியா பிளேயரானது அதிக அளவு Ram பகுதியை பயன்படுத்தும். இதனால் கணனியின் வேகம் குறையும்.

### Automatic Update

நமது கணனி அவ்வப்போது அதை Update செய்யவா? இதை Update செய்யவா? என கேட்டுக்கொண்டே இருக்கும். நாமும் அதை 'தள்ளிவைத்து விடுவோம். நாம் இப்படிச்செய்வதால் கணனியின் பாதுகாப்பு கேள்விக்குறியாவதுடன் இதன் வேகமும் குறையும்.

எனவே my computer - properties -Automatic update என்றவரிசையில் தேர்வுசெய்து உடனுக்குடன் உங்கள் கணனியை update செய்யுங்கள். அல்லது Update Checker என்ற அப்ளிகேஷனை உங்கள் கணனியில் நிறுவினால் அதுவே update செய்துகொள்ளும்.

கண்டிப்பாக இந்த வழிமுறைகள் அனைத்தையும் பின்பற்றினால் உங்களது கணனியானது வேகமாக செயற்பட ஆரம்பிக்கும். வித்தியாசத்தை நீங்களே உணருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் உலகப்போர்

## 25 மானுடத்திற்கான திடக்கண்ணீர்!



வரவர மேய்ச்சல் நிலம் குறைஞ்சு போயிச்சு; ஆடுமாடுக அலைய எடம் இல்ல.

ஆடுமாடுகளும் கொறஞ்சு போயிருச்சு; காடுகரைகளும் காணாமப் போயிருச்சு.

தரிசெல்லாம் தோப்பு; வெறும் பூமியெல்லாம் வீட்டடி; கரட்டுக்கு மேல போனா பாறைட்டு. ஆறு ஓடையெல்லாம் ஆக்கிரமிப்பு. எங்க போறது ஆடு, மாடு மேய்க்க?

ஒரு காலத்துல ஆடு, மாடு மேயவே செடிகொடிக ஏறிக்கெடக்கும் வேலிகள்ல. இன்னைக்கு முள்ளுக் கம்பி நட்டு முடுக்கி மூடிப்புட்டாக.

விவசாய நெலத்துல கண்டும் காணாமக் களவாணித்தனமா எத்தனை நாளைக்கு மேய்க்கறது?

ஆடிமாச வறட்சி ஆடு, மாடுகள வாட்டி எடுக்குது மருந்துக்கும் பச்சை இல்ல. பசை இல்ல. எல்லா எடத்துலயும் ஒட்டி ஒட்டி ஓஞ்சுபோயிக் கடைசியா வத்திக் கெடக்கிற கம்மாக்குள்ள ஆடுகள எறக்கிட்டான் சுழியன்.

கல்யாண வீட்டுப் பந்தி முடிஞ்சதும் கடைசியில அண்டாவுல கெடக்கும் பாருங்க அடிரசம்... அப்பிடிக் கம்மாக்குள்ள கொஞ்சூண்டு கெடந்துச்சு செந்தண்ணி.

"பிர் பிர் பிர் பிர்"

கம்மாக்குள்ள ஒரு பன்னிய மல்லாக்காப் போட்டுக்கிட்டு என்னவோ பண்ணிக் கிட்டிருக்காக ரெண்டு ஆளுக. ஒரு ஆம்பள; ஒரு பொம்பள.

ஆடுகளக் கோரம்புல்லுல அமத்துன சுழியனப் பாத்து அந்தப் பொம்பள கத்துறா: "யோவ் ஆட்டுக்காரரே! ஒரு கை குடுய்யா. வாய்யா"

ஆடுகள ஓரம்சாரம் ஒதுக்கி ஒழுங்கு பண்ணிட்டுக் கிட்டப் போனான் சுழியன்.

பன்னி எடைகூடி வரணும்னா அதைக் காயடிச்சு விடணும். காயடிக்கக் கவுத்துப் போட்டுருக்காக பன்னிய. ஆள் பத்தல; அது அடங்கமாட்டேங்குது. பன்னி பின்னங்காலப் புடிச்சு நிக்கிறான் ஒரு இளந்தாரி. முன்னங்காலப் புடிச்சுக் கழுத்த அமுக்கினான் சுழியன்.

**தண்ணி போற வழி ஓடம் போற மாதிரி, விதிபோற வழி போகுதய்யா பொழப்பு**

கீழ கிடந்த பன்னிய விட்டுட்டு அவ கெண்டைக் காலயே பாத்துக் கிட்டிருந்தான் சுழியன். அந்தக்கெண்டைக்கால் ரோமத்துலகிறங்குனகெறக்கம்தான் அவன் பொழப்பையே திசை மாத்திப் போட்டுட்டுப் போயிருச்சு.

பொம்பளக்கிறுக்குப் புடிச்சு அலையிறான் சுழியன். பேயி ஏறி உக்காந்த மாதிரி அவன் நெஞ்சில ஒக்காந்திருக்கா பன்னிக்காரி பவளாங்கி.

பொம்பளைக மாதிரி இருக்கிற சில ஆம்பளைகளப் பொம்பளைகளுக்குப் புடிக்கிற மாதிரி- ஆம்பளை மாதிரி இருந்த பவளாங்கிமேல பைத்தியமாகிப் போச்சு சுழியனுக்கு

"கெண்டைக்கால் ரோமத்துக்கும்
கீழுதட்டு வெத்தலைக்கும்
மண்(ணை)ட கெறங்குதடி
மான ஈனம் மறக்குதடி"

இட்டுக்கட்டிப் பாட்டு வேற படிக்கிறான் எட்டுக்கட்டையில.

தடம் மாறிப் போனவனுக்கு எடம் மாறிப் போகாதா?

• எது பன்னி மேயிற எடமோ அது தான் ஆடு மேய்கிற எடம்னு ஆகிப் போயிருச்சு சுழியனுக்கு.

பொண்டாட்டிக்குத் தெரியாம ஆட்டுப்பால் வித்த காசுல, பூந்தியும் காராச்சேவும் வாங்கித் துண்டுல கட்டித் தோள்ல மாட்டிக் கம்மாக்குள்ள எறக்கிட்டான் ஆடுகள. பூந்தி தின்ன கடனைக் கழிக்க மறுநாள் உறைக்கப் புளிக்கப் பன்னிக்கறிக் குழம்போட வந்துட்டா பவளாங்கி. நாளாக ஆக ஒண்ணுக் கொண்டு ஊட்டிவிட்டு உறவாடுதுக.

ஆடு- பன்னி ரெண்டுக்குமே இரை இருக்கு வத்திப்போன கம்மாயில.

●●●●●

கம்மாக்கரையில ஆடுகளுக்குக் குழை அறுத்துக்கிட்டிருந்தான் சுழியன்.

கருவேல மரத்துல படந்துபந்தல் போட்டிருக்கு ஊணாங்கொடி.

எக்கி எக்கிப் பாத்தான்; எட்டல தொரட்டி.

ஒரு தவ்வுத் தவ்வுனவன் தவறி உருண்டு விழுந்து போனான் கம்மாக்குள்ள.

பெரண்டு போச்சு காலு; உசுரு போகுது உள் வலி.

"யப்பே யாத்தே"ன்னு கத்திக் கதறிட்டான் சுழியன்.

பன்னிகள விட்டுட்டு ஓடி வந்தா பவளாங்கி. எந்தக் காலுன்னு கேட்டா. எடது காலுன்னு சொன்னான். கால நீட்டிச் சாஞ்சு உட்காரச் சொன்னா கம்மாப்புல்லு மேல. சேலையத் தெரட்டி முழங்காலுக்கு மேல தூக்கிக்கிட்டு தன்னோட ரெண்டு பாதத்துக்கு மத்தியில அவன எடது கால மாட்டி ஒரு நமட்டு நமட்டுனா. ரெண்டு மூணு தடவை இப்படியும் அப்படியும் நமட்டவும் பாதிவலி போயிருச்சு பயலுக்கு.

இப்ப காலைத் தூக்கி மடியில போட்டுக்கிட்டா பவளாங்கி. பெரண்ட காலை உருட்டி உருட்டி நிமுத்துறா.

ஒவ்வொரு வெரலா உருவி விடறா.

மூளையே உலையாப் போக அதுல ஏறிக் கொதிக்குது மொத்தரத்தமும்.

லேசா மோடம் (மூட்டம்) போட்டுச்சு. போடி மெட்டுவ புறப்பட்டு வருசநாட்டுக்குப் போய்க்கிட்டுருந்த மேகம் மறந்து போயி மார்க்கயன் கோட்டையில எறங்கிருச்சு.

புனுபுனுன்னு ஆரம்பிச்சுச் சடசடன்னு பெய்யவும் கம்மாயவிட்டுத் தவ்விக் கரையோரத்து வேப்பமரத்தடியில ஓடி ஒதுங்கிருச்சு வெள்ளாடுக.

மழை பேஞ்சா வெள்ளாட்டுக்குத் திண்டாட்டம்; பன்னிக்குக் கொண்டாட்டம். மழையில நனஞ்சுக்கிட்டே கம்மாத்தண்ணியக் கலக்குதுக பன்னிக.

சுழியனும் பவளாங்கியும் ஒரு நொச்சிப் புதர்ல ஓடி ஒதுங்குறாக. ஒருத்தர் துணிய ஒருத்தர் மாத்தி மாத்திப் புழியிறாக.

வெய்யில்ல உருகுற பனிக்கட்டி மாதிரி மழையில ஒழுகுது இருதயம்.

ரொம்ப நாளாக் கனிஞ்சுக்கிட்டிருந்த தீய மூட்டி விட்டுருச்சு மூச்சு.

"படபட படபட படபட பட்டீர்..."

எங்கேயோ விழுந்த ஒரு இடி கிட்ட விழுந்த மாதிரி கேட்டுச்சு.

அரண்டுபோன ஆடுக ஒண்ணுக்குப் பின்னால ஒண்ணு ஓடி வந்து நொச்சிப் புதரைச் சுத்தி வட்டம் கட்டி நிக்குதுக.

நொச்சிப் புதருக்குள்ள நடக்கிற கூத்தை எட்டிப் பாத்துட்டு இது வேற தினுசா இருக்கேன்னு வெறிச்சு நிக்குதுக வெள்ளாடுக.

"யாத்தே! இத்தன பங்கு இருக்கா பொம்பளைக்கும் இதுல? இதுவரைக்கும் தெரியாமப் போச்சே!"

கெட்ட வார்த்தை சொல்லிச் சொல்லிப் பவளாங்கியப் பாராட்டி வையிறான் பைத்தியக்காரப் பய.

அப்புறம் என்ன?

மழை மட்டுதான் நின்னுச்சு.

●●●●●

"ஏன்யா என் வீட்லயே இருந்துர்றது...?"

அவன் ஒண்ணும் பேசல:

"பன்னிக்காரின்னு பாக்குறியா...?"

பதில் இல்ல.

"புருசன் இல்லாதவ... இல்லை... இல்லை புருசனக் கொன்னு குழிதோண்டிப் புதைச்சவ பவளாங்கின்னு என்னப்பத்தி ஊருக்குள்ள எக்குத்தப்பாப் பேசறாகளேன்னு பாக்குறியா?"

அவன் பதறிப் போயி அதுக்கில்லன்னு தலையாட்டுனான்.

"பிறகென்ன? ஆடு ஒசத்தி; பன்னி கேவலம். அதான...?"

அவன் இல்லேன்னும் சொல்லல; ஆமான்னும் சொல்லல. இறுக்கமா இருந்தான்.

"இந்தாய்யா உன் ஆட்டைவிட என் பன்னிதான் சுத்தம் பாத்துக்க. உன் ஆடு நடுவீட்டுல கட்டி வச்சாக் கூடப் புழுக்கை போடும். எந்தப் பன்னியும் அடைச்சு வச்ச தொழுவுக்குள்ள ஒண்ணுக்கு ரெண்டுக்குப் போறதில்ல. இன்னொண்ணு சொல்லட்டுமா? ரெண்டு காம்பு ஆட்டுக்கு; பத்துக் காம்பு பன்னிக்கு. எந்தக் காம்புலயும் எந்தக் குட்டியும் பால் குடிக்கும் ஆட்டுல. ஆனா எந்தக் குட்டியும் வாய் வச்ச காம்பைப் தவிர வேற காம்புல வாய் வைக்காது பன்னியில. ஆட்டுக்கும் பன்னிக்கும் என்னய்யா பெரிய வித்தியாசம்? தாய் வயித்துல ஆடும் ஆறுமாசம்; பன்னியும் ஆறு மாசம். நீயும் பத்துமாசம்; நானும் பத்துமாசம்."

வார்த்தையப் போட்டுப்போட்டுச் சிக்க வச்சுட்டா; மடியில போட்டுப் போட்டுச் சொக்க வச்சுட்டா; மயங்கிட்டான்.

வெல்லத்துல மொய்க்க வந்து ஊறுகாப் பானையில விழுந்த ஈயி, தட்டுத் தடுமாறி எந்திருச்சுப் பறந்து, சட்டுன்னு விழுந்து போச்சு சாராயச் சட்டியில.

(தொடரும்)



வைரமுத்துவின் கவிதைத் துளிகள்...

**மழைக்குருவி**

காட்டு மழைக்குருவி- போர்த்தக்
கம்பளி ஏதுமில்லை
ஓட்டை வான்மறைக்க- அதன்
உயரே கூரையில்லை

கூடோ சிறுபுதரோ- இலைக்
குடைக்கீழ் ஒதுங்கிடுமோ?
தேடோ தேடென்று- இடம்
தேடி அலைந்திடுமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி, நியாயம் தெரியாத ஒருவரிடம் நீதியமைச்சு இன்று சிக்கியுள்ளது

## நிலைமை மோசம் என்கிறார் அசாத் சாலி

(கொழும்பு)

நீதி, நியாயம் தெரியாத ஒருவரிடம் இன்று நீதியமைச்சு பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்தளவுக்கு நாட்டின் நிலைமை இன்று படுபாதாளத்துக்குச் சென்றுள்ளது என கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.

அசாத் சாலி பவுண்டேசன் நடத்திய அதிகாரத்தை பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்தவும் என்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

மக்களுக்கு நிம்மதியாக வாழ முடியாத சூழல் இன்று நாட்டில் ஏற்பட்டுள்ளது. பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருப்பதாகக் கூறி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு அராஜகத்தில் சென்று கொண்டிருக்கிறது.

இதர கட்சிக்காரர்களுக்கு பணத்தைக் கொடுத்து அவர்களை அரசின் பக்கம் உள் வாங்கிக் கொண்டு அவர்களை பெட்டிப்பாம்பாக வைத்துக் கொண்டு ஜனாதிபதியின் ஆட்சி தொடர்கிறது.

மக்கள் ஆணையைப் பெற்ற ஒரு சிலர் மஹிந்தவின் ஆட்சிக்கு சோரம் போயுள்ளனர். இத்தகையவர்கள் குறித்து மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

ஷரிஆ சட்டத்தை சிலர் விமர்சிக்கிறார்கள். அதனை விமர்சிக்கும் உரிமை எவருக்கும் கிடையாது. இன்று இலங்கையில் அந்த சட்டம் அமுலில் இருந்திருந்தால் பலர் கையை இழந்திருப்பார்கள். ஏனெனில் அந்தளவுக்கு இலங்கையில் களவுகள் இடம்பெறுகின்றன.

இலங்கையில் பொதுபலசேனா அமைப்பு முஸ்லிம் மக்களுக்கெதிராக பல்வேறு ஈனச் செயல்களை முன்னெடுத்து வருகிறது.

சிங்கள- முஸ்லிம்களுக்கிடையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்குமாறு பௌத்த மத பெரியார்களிடம் கோரிக்கை விடுத்திருந்தும் அது குறித்து அவர்கள் எவரும் முன்வரவில்லை.

இது குறித்து அமைச்சர் பசில் ராஜபக்ஷவிடம் தெரிவித்தபோது அவர் இதனைப் பெரிதாக அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்கிறார்.

ஆனால், நாடு இன்று படுபாதாளத்திற்குள் சென்று கொண்டிருக்கிறது. சட்டத்தரணிகள் தமது வீடுகளில் நிம்மதியாக நித்திரை கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அநீதிகள் ஏற்படும் போது நீதி கோருவதற்காகவிருந்த நீதிமன்றத்தின் செயற்பாடுகளும் இன்று கேள்விக்குறியாகியுள்ளது.

ஆகவே, இலங்கையில் மக்கள் நிம்மதியாக வாழ வேண்டுமாக இருந்தால் ஆட்சியில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றார் அசாத் சாலி. (செ-2)

## இலங்கை பணிப்பெண் குவைத்தில் கைது!

(கொழும்பு)

திருட்டு சம்பவமொன்றில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட இலங்கைப் பணிப் பெண்ணொருவரை குவைத் நாட்டு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த இலங்கைப் பணிப்பெண் பகுதி நேரமாக சுத்திகரிப்புப் பணிகளை வீடுகளில் மேற்கொண்டு வந்துள்ளதாகவும் அவரினால் சேகரிக்கப்பட்ட தகவலின் அடிப்படையில் இருவருடன் இணைந்து பலர் பல வீடுகளில் திருட்டுக்களை மேற்கொண்டு வந்ததாகவும் குவைத் பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர்.

இக்குற்றச் செயலில் ஈடுபட்ட குழு 10 இற்கு மேற்பட்ட வீடுகளில் திருடியுள்ளதாக அபு கலைஃபா பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இக்குழுவிற்கு தலைமை தாங்கியதாக கூறப்படும் இலங்கை பணிப்பெண் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (செ-8)

# மொஹானுக்கு எதிரான விசாரணைகளிலிருந்து நீதியரசர் சிறிப்வன் விலகிக்கொண்டார்

(கொழும்பு)

புதிய பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் நியமிக்கப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு தொடர்பிலான விசாரணைகளிலிருந்து நீதியரசர் சிறிபவன் வாபஸ் பெற்றுக் கொண்டுள்ளார்.

புதிய பிரதம நீதியரசர் நியமனத்தை இரத்து செய்யுமாறு கோரி மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் மனுவொன்றை தாக்கல் செய்திருந்தது.

தனிப்பட்ட காரணங்களினால் இந்தமனுவை விசாரணை செய்யும் பணிகளிலிருந்து விலகிக் கொள்வதாக நீதியரசர் சிறிபவன் தெரிவித்துள்ளார்.

இந்த மனு தொடர்பான விசாரணைகளுக்காக நீதியரசர்களான சிறிபவன், ஐ.இமாம் மற்றும் சலீம் மர்சூக் ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

சிறிபவனின் வாபஸை அடுத்து நீதியரசர் குழாமிற்கு புதிய நீதியரசர் ஒருவரை நியமித்து பின்னர் விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த மனு தொடர்பான விசாரணைகள் எதிர்வரும் 5 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-2)

# தமிழ்-சிங்களத்தில் கலந்து தேசிய கீதத்தை பாடுவோம்

## வாசு யோசனை

தேசிய கீதத்தை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் கலந்து பாடுவதற்கான யோசனையொன்று தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

இரு மொழிகளிலும் கலந்து பாடுவதற்கான இந்த யோசனை ஜனாதிபதி செயலகத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய தேசிய கீதத்தை தி நகோணமலையில் நடைபெறவிருக்கின்ற 65 ஆவது சுதந்திர தினத்தின் தேசிய வைபவத்தில் பாடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கற்றறிந்த பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைவாகவே இந்த யோசனை முன்வைக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த யோசனைக்கு ஜனாதிபதியிடமிருந்து அனுமதி கிடைத்ததன் பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கையை அமைச்சு மேற்கொள்ளும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (செ-2)

# சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்

(கொழும்பு)

சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மாணம் கொண்டு வரத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான குற்றவியல் பிரேரணை தொடர்பில் சபாநாயகரின் நடவடிக்கைகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

எனவே, சபாநாயகருக்கு எதிராக நாடாளுமன்றில் நம்பிக்கையில்லாத் தீர்மான யோசனை ஒன்றை முன்வைக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் குழுக் கூட்டத்தில் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான லக்ஸ்மன் கிரியெல்ல, சுஜீவ சேனசிங்க, விஜயதாச ராஜபக்ஷ, அஜித் பெரேரா ஆகியோர் இந்த நம்பிக்கையில்லா தீர்மான யோசனையை தயாரிக்கவுள்ளனர்.

கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் அனுமதி கிடைக்கப் பெற்றதன் பின்னர் ஏனைய எதிர்க்கட்சிகளுடன் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தப்படவுள்ளது. (செ-2)

# இலங்கையின் பயங்கரவாத ஒழிப்பு துருக்கிக்கு சிறந்த உதாரணம்

## புதிய தூதுவர் ஒக்யே ஒப்பீடு

(கொழும்பு)

பயங்கரவாதத்திற்கு எதிரான இலங்கையின் போராட்டம், துருக்கிக்கு சிறந்த உதாரணமாக இருக்கும் என்று புதிதாக இலங்கை தூதுவராக நியமனம் பெற்றுள்ள துருக்கியின் தூதர் ஸ்கேண்டர் ஓக்யே தெரிவித்துள்ளார்.


இலங்கைக்கு புறப்படுவதற்கு முன்னர் துருக்கியின் ஆங்கில செய்தித்தாளான துருக்கிஸ் டெய்லி ஸமானுக்கு கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,


இரண்டு நாடுகளும் பயங்கரவாதம் மற்றும் பொது விடயங்களை தீர்ப்பதே முதல் பணியாக கொண்டுள்ளன என்றார்.

மேலும் இலங்கையும் துருக்கியும் ஒரே வகையான பயங்கரவாத பிரச்சினையை எதிர்நோக்குவதாக அவர் இதன் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை தற்போது சமாதானத்தை அனுபவிப்பதாகவும் ஸ்கேண்டர் குறிப்பிட்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் இலங்கைக்கு துருக்கி ஆதரவளித்தமையையும் அவர் நினைவு கூர்ந்தார். (செ-2)





புனர்வாழ்வு பெற்றவர்களின் பொருளாதார, சமூக மற்றும் நலன்புரி தொடர்பான இணைப்புக்காரியாலயம் யாழ்.மாவட்ட செயலக வளாகத்தினுள் உள்ள பதிவாளர் நாயக கட்டடத்தொகுதியின் 3 ஆம் மாடியில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. இதில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு காரியாலயத்தின் பெயர்ப் பலகையினை திரை நீக்கம் செய்து வைத்ததோடு நாடா வெட்டி அலுவலகத்தையும் உத்தியோக பூர்வமாக திறந்து வைப்பதையும் மங்கல விளக்கினை காரியாலயத்தின் இணைப்பதிகாரி மேஜர் ஹெசி ஜெகதகுமார ஏற்றிவைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழி தவறி செல்ல முயற்சிக்க வேண்டாம் வடக்கு மக்களின் வாழ்வு சுபீட்சமாகும்

## ஜனாதிபதி தமிழில் தெரிவிப்பு

(கொழும்பு)

**வழி தவறிச் செல்ல வேண்டாம். வடக்கு மக்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

அலரி மாளிகையில் நடைபெற்ற மீனவ சம்மேளன மாநாட்டில் கலந்து கொண்ட பெருந்திரளான வடக்கு மக்கள் மத்தியில் தமிழில் உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு மக்களின் வாழ்வு செழிக்க வேண்டும் என்பதே தமது பிரார்த்தனை என தெரிவித்த ஜனாதிபதி வடக்கு மக்களும் இந்த நாட்டில் சகல வசதிகளையும் பெற்று வாழ நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார். தொடர்ந்து தமிழில் உரையாற்றிய அவர்,

வடக்கு மக்கள் நீண்டகாலம் அனுபவித்த கஷ்டங்களையும் துயரங்களையும் நாம் அறிவோம். இப்போது பயம், சந்தேகம் நீங்கி சுதந்திரமாக வாழக்கூடிய சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

அன்று யுத்தம் நிலவியது. இன்று சமாதானம் நிலவுகிறது. சுதந்திரமாக மீன்பிடிக்கச் செல்ல முடியும். அனைத்துத் தொழில்களையும் மேற்கொள்ள முடியும். எதிர்காலத்தைக் குறித்து நம்பிக்கையற்றிருந்த மக்களுக்கு நாம் நம்பிக்கையைப் பெற்றுக் கொடுத்துள்ளோம்.

நாட்டில் நிலவும் சமாதான சூழலினால் கொழும்பில் அலரி மாளிகையில் நடைபெறும் மீனவர் சம்மேளன மாநாட்டிற்கு வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் பெருமளவு மக்கள் வருகை தர முடிந்துள்ளது.

அன்று ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிக்க முடியாத நிலை இருந்தது. இன்று அலரி மாளிகைக்கும் வடக்கு மக்கள் வரக்கூடிய நிலை உருவாக்கப்பட்டுள்ளது.

எமது அரசாங்கம் கடல் தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களுக்குப் பல வசதிகளைச் செய்து கொடுத்துள்ளது.

கோடிக்கணக்கில் நிதி செலவு செய்து வள்ளங்கள், படகுகள், வலைகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களையும் பெற்றுக் கொடுத்துள்ளது. தொடர்ந்தும் மீனவர்களுக்குத் தேவையான வசதிகளை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்போம்.

இதேவேளை வடக்கில் வாழும் பெண்களுக்கு சுயதொழில் வசதிகளைச் செய்து கொடுத்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

அதற்கான சகல நடவடிக்கைகளையும் நாம் முன்னெடுப்போம். வடக்கு மக்கள் வாழ்வு செழிக்க வேண்டும். அதுவே எமது பிரார்த்தனை. தவறான வழியில் போக வேண்டாம் என நான் மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்கின்றேன். மீனவ மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை நான் அறிவேன். அவற்றிற்கு விரைவில் தீர்வு காணப்படும். நான் கடற்றொழில் அமைச்சராக பதவி வகித்த காலத்தில் உங்களோடு இருந்தது போல் எப்போதும் உங்களுடனே இருப்பேன். நான் உங்களை நம்புகின்றேன். நீங்களும் என்னை நம்பலாம் என்றார். (2-9)

# ஆளும் கட்சிக்கு ஆதரவளிக்காத உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

ஆளும் கட்சியின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்காத தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆளும் கட்சியின் தேசியப் பட்டியல் ஆசனங்களின் மூலம் தெரிவு செய்யப்பட்ட சிலர் அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறானவர்களை பதவி விலக்கி செயற்றிறனுடையவர்களை பதவியில் அமர்த்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தேசியப் பட்டியலின் மூலம் நியமிக்கப்பட்ட பேராசிரியர் ராஜீவ் விஜேசிங்க அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கத் தவறியுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (2-9)




★ 1327 - 14 வயது மூன்றாம் எட்வர்ட் இங்கிலாந்தின் மன்னனாக முடிசூடினான்.

★ 1494 - இரண்டாம் அல்பொன்சோ நேப்பில்ஸ் மன்னனாக முடிசூடினான்.

★ 1498 - போர்த்துக்கீச நாடுகாண்பயணி வஸ்கொடகாமா தென்கிழக்கு ஆபிரிக்காவை அடைந்தார்.

★ 1755 - மொஸ்கோ பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1881 - தோமஸ் அல்வா எடிசன், அலெக்சாண்டர் கிரஹம்பெல் ஆகியோர் இணைந்து ஓரியண்டல் ரெலிபோன் கம்பனி என்ற நிறுவனத்தை ஆரம்பித்தனர்.

★ 1882 - வேல்ஸ் இளவரசர்கள் அல்பேர்ட் விக்டர், ஜோர்ஜ் ஆகியோர் கொழும்பு வந்து சேர்ந்தனர்.

★ 1890 - நெல்லிபிளை தனது 72 நாள் உலகம் சுற்றும் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டார்.

★ 1917 - டானிஷ் மேற்கிந்தியத் தீவுகள் ஐக்கிய அமெரிக்காவுக்கு 25 மில்லியன்களுக்கு விற்கப்பட்டது.

★ 1918 - உக்ரேன் மக்கள் போல்ஷெவிக் ரஷ்யாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தனர்.

★ 1919 - நாடுகளின் அணி நிறுவப்பட்டது.

★ 1924 - முதலாவது குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் பிரான்ஸில் ஷாமீனி என்ற இடத்தில் ஆரம்பமானது.

★ 1942 - இரண்டாம் உலகப் போர்: தாய்லாந்து, ஐக்கிய அமெரிக்கா மீதும் ஐக்கிய இராச்சியம் மீதும் போரை அறிவித்தது.

★ 1949 - சீனக் கம்யூனிஸ்டுகளின் படைகள் பீக்கிங்கினுள் நுழைந்தன.

★ 1949 - இஸ்ரேலில் இடம்பெற்ற முதலாவது பொதுத் தேர்தலில் டேவிட் பென் குரூயன் பிரதமரானார்.

★ 1955 - சோவியத் ஒன்றியம் ஜேர்மனி மீது அதிகாரபூர்வமாக போரை நிறுத்தியது.

★ 1971 - உகண்டாவில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் மில்ட்டன் ஒபோட் ஜனாதிபதி பதவியில் இருந்து அகற்றப்பட்டு இடிஅமீன் ஜனாதிபதி ஆனார்.

★ 1971 - இந்தியாவின் 18ஆவது மாநிலமாக இமாசலப் பிரதேசம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

★ 1981 - மா சே துங்கின் மனைவி ஜியாங் கிங்கிற்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இது பின்னர் ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

★ 1986- தேசிய எதிர்ப்பு இயக்கத்தினரால் உகண்டா அரசு கவிழ்க்கப்பட்டது.

★ 1994 - நாசாவின் கிளமென்டைன் விண்கலம் சந்திரனை நோக்கி ஏவப்பட்டது.

★ 1995 - யோசவ்வாஸ் அடிகளார் திருத்தந்தை இரண்டாம் ஜோன்போலினால் முத்திப் போறு பெற்றவராக அறிவிக்கப்பட்டார்.

★ 1998 - கண்டியின் தலதாமாளிகையில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் 8 பேர் கொல்லப்பட்டு 25 பேர் படுகாயமடைந்தனர்.

★ 1999 - மேற்கு கொலம்பியாவில் இடம்பெற்ற 6.0 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தில் ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

★ 2002 - விக்கிபீடியா, மீடியாவிக்கி மென்பொருளுக்கு மாறியது.

★ 2004 - ஒப்போர்ச்சுனிட்டி தளவுளவி (MER-B) செவ்வாயில் தரையிறங்கியது.

★ 2005 - இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் மந்திராதேவி என்ற இடத்தில் கோயில் ஒன்றில் சனநெரிசலில் சிக்கி பெண்கள், குழந்தைகள் உட்பட 258 பேர் கொல்லப்பட்டனர்.

★ 2006- சூரிய குடும்பத்திற்கு வெளியே பால் வழியின் நடுவிற்கு கிட்டவாக பூமியில் இருந்து 21,500± 3,300 ஒளியாண்டுகள் தூரத்தில் OGLE-2005-BLG-390Lb என்ற கோள் கண்டு பிடிக்கப்பட்டது.

### பிறப்புகள்

★ 1627 - ரொபேர்ட் பொயில், ஐரிஷ் வேதியியலாளர் (இ.1691)

★ 1872 - பி.ஆர்.ராமையர், எழுத்தாளர், பத்திரிகையாசிரியர் (இ.1898)

★ 1917 - ஈலியா பிரிகோஜின், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய அறிவியலாளர் (இ.2003)

★ 1928 - எடுவார்ட் ஷெவார்டுநாட்சே, ஜோர்ஜியாவின் முன்னாள் ஜனாதிபதி.

★ 1933 - கொரசோன் அக்கினோ, பிலிப்பைன்ஸ் முன்னாள் ஜனாதிபதி (இ.2009)

★ 1941 - செங்கை ஆழியான், ஈழத்து எழுத்தாளர்

★ 1949- போல் நர்ஸ், நோபல் பரிசு பெற்ற பிரித்தானியர்

### இறப்புகள்

★ 1922 - சுன்னாகம் குமாரசாமிப் புலவர் (பி.1855)

★ 2005 - பிலிப் ஜோன்சன், அமெரிக்கக் கட்டடக் கலைஞர் (பி. 1906)

★ 2006 - நெல்லை கிருஷ்ணமூர்த்தி, கர்நாடக இசைக் கலைஞர்

# ரிஸானாவிற்கு மன்னிப்பு வழங்காத சவுதி பெற்றோரை மன்னித்தோம்

## ரிஸானாவின் தாயார் பரீனா நபீக்

(கொழும்பு)

தமது மகளுக்கு மரண தண்டனை நிறைவேற்ற வேண்டும் என்று கூறியோருக்கு ஷரீஆ சட்டத்தின் படி தாம் மன்னிப்பை வழங்குவதாக சவுதி அரேபியாவில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட மூதூர் ரிஸானாவின் தாயார் தெரிவித்துள்ளார்.

அப்பாவியான தமது மகள் ரிஸானா பிழையான முறையில் குற்றம் சுமத்தப்பட்டு மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டார்.

ரிஸானாவினால் கொலை செய்யப்பட்டதாக கூறப்படும் குழந்தையின் பெற்றோர் ரிஸானாவை மன்னிக்கவில்லை என்றும் இதன் காரணமாகவே அவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதாகவும் சவுதி அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

எனினும் இஸ்லாத்தின் ஷரீஆ சட்டத்தின்படி தமது மகளுக்கு மன்னிப்பு வழங்காத குறித்த சவுதி பெற்றோருக்கு தாம் மன்னிப்பை வழங்குவதாக ரிஸானாவின் தாயார் குறிப்பிட்டுள்ளார்.

ரிஸானாவின் மரண தண்டனை நிறைவேற்றம் தொடர்பில் சவுதி அரசாங்கம் தமக்கு எவ்வித அறிவித்தலையும் விடுக்கவில்லை.

ஊடகம் மூலமே தாம் தமது மகளின் மரண தண்டனை நிறைவேற்றத்தை தெரிந்து கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார். (2-9)

# ஐந்து திருமணங்கள் செய்ய பௌத்தர்களை அனுமதிக்க வேண்டும்

## ஞானசார தேரர் கோரிக்கை

(கொழும்பு)

பௌத்தர்கள் ஐந்து திருமணங்கள் செய்து கொள்ள அனுமதிக்கப்பட வேண்டுமென பொதுபல சேனா அமைப்பின் கலபொட ஞானசார தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஒரே நாட்டில் இரண்டு இனங்களுக்கு வெவ்வேறு சட்டங்கள் இருக்க முடியாது. பெரும்பான்மை இனத்தை சிறுபான்மை இனமாக மாற்ற முஸ்லிம் சக்திகள் முயற்சிக்கின்றன.

இந்த முயற்சிக்கு உரிய அதிகாரிகள் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

முஸ்லிம்களுக்கு மூன்று, நான்கு திருமணங்களை செய்து கொள்ள முடியுமாயின் அதே உரிமை பௌத்தர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

அரேபிய தேசத்தைச் சேர்ந்த செல்வந்த வர்த்தகர்கள் பௌத்தர்களை மதம் மாற்றி வருகின்றனர்.

நாட்டின் உள்விவகாரங்களில் குழப்பங்களை ஏற்படுத்த எவருக்கும் அனுமதியளிக்கக் கூடாதா என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் துணைத் தலைவரானார் ராகுல்; அடுத்த பிரதமர் அவரே!

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் துணைத் தலைவராக ராகுல்காந்தி தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். காங்கிரஸ் கட்சித் தலைவராக அவருக்கு முடிசூட்டு விழா அரங்கேறுவதற்கான முன்னோட்டமே இப்போது அவருக்கு அளிக்கப்பட்டுள்ள துணைத்தலைவர் பதவி. 1885 இல் தொடங்கப்பட்ட காங்கிரஸ் கட்சியில் சோனியாகாந்தி 58 ஆவது தலைவர். அவருக்கு ராகுல் காந்தி இப்போது துணைத் தலைவர். இதற்கு முன்பு இரு துணைத் தலைவர்கள் இப்படி காங்கிரஸ் கட்சியில் நியமிக்கப்பட்டார்கள். ஒருவர் அர்ஜுன் சிங். இன்னொருவர் ஜிதேந்திர பிரசாத். இந்த இருவருமே பின்னர் காங்கிரஸ் கட்சியின் தலைவர்களாகும் அதிர்ஷ்டம் அடையப் போகிறவர்கள் இல்லை என்பதால் அவர்களுக்கு கட்சியின் மற்ற முன்னணித் தலைவர்கள் புகழ்மாலை சூட்டவில்லை. ஆனால், இந்த இளவரசர்தான் அடுத்த காங்கிரஸ் தலைவர் என்பதால் கட்சி முன்னோடிகள் முண்டியடித்துக் கொண்டு வாழ்த்துரைகளை பூமாலை போல் கோர்த்து ராகுல் கழுத்தில் போட்டிருக்கிறார்கள்.

துணைத் தலைவர் பதவியை ஏற்றுக்கொண்டு பேசிய ராகுல்காந்தி உருக்கமான உரை நிகழ்த்தியிருக்கிறார். அதில் அவர் கூறியுள்ள சில கருத்துக்கள் ஆட்சியிலிருக்கும் பிரதமர் மன்மோகன் சிங்கையும் காங்கிரஸ் தலைமையில் உள்ள ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசையுமே குறை கூறும் விதத்தில் இருக்கின்றன. "சொன்னால் நடக்கும் என்ற தகுதியில் உயர்பதவியில் இருப்பவர்களை சந்திக்கிறேன். ஆனால், நாட்டு மக்கள் சந்திக்கும் பிரச்சினைகள் பற்றி அவர்களுக்கு தெரியவில்லை. ஏன் இப்படி நடக்கிறது என்றால் நாம் அறிவுபூர்வமானவர்களை மதிப்பதில்லை. பொது அமைப்பு நிர்வாகம், நீதி,கல்வி, அரசியல் கட்டமைப்பு எல்லாமே அறிவுபூர்வமானவர்களை வெளியே வைக்கும் விதத்தில்தான் உள்ளன. இதனால் ஒரு விதமான இரண்டாம் தரத்தன்மையே ஆதிக்கம் செலுத்துகிறது" என்று மிகவும் நொந்துபோய் பேசியிருக்கிறார் எதிர்க்கட்சி வரிசையில் இருப்பவர்கள். இப்படி பேசுவதை புரிந்து கொள்ள முடியும். ஆனால், 9ஆவது வருடமாக இந்திய அரசை வழிநடத்திக் கொண்டிருக்கும் ஓர் ஆளுங்கட்சியின் துணைத் தலைவர் இப்படி பேசியிருப்பது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பையும் காங்கிரஸ் கட்சிக்கும் பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான ஆட்சிக்கும் உள்ள இடைவெளியையும் வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கிறது.

ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு அதுவும் குறிப்பாக இரண்டாவது முறை வந்துள்ள நேரத்தில் 2-ஜி அலைக்கற்றை ஊழல், கொமன்வெல்த் விளையாட்டுப்போட்டிகளில் ஊழல், நிலக்கரி ஒதுக்கீட்டில் முறைகேடு என்று பெரும் ரகளையே நடந்து முடிந்துவிட்டது. இதற்காக அன்னா ஹசாரே, அரவிந்த் கெஜ்ரிவால் போன்றோர் ஊரைக் கூட்டி பெரும் போராட்டமே ஊழலுக்கு எதிராக நடத்தி முடித்துவிட்டார்கள். குறிப்பாக நிலக்கரி ஒதுக்கீடு விவகாரத்தில் பிரதமர் மன்மோகன்சிங் மீதே இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதா கட்சி குற்றம் சாட்டியது. அதுபோன்ற சூழ்நிலையில் நடைபெற்றுள்ள காங்கிரஸின் ஜெய்ப்பூர் சிந்தனை அரங்க கூட்டத்தில் பேசிய ராகுல்காந்தி, "ஊழல்வாதிகளாக இருப்பவர்கள் ஊழலை ஒழிப்போம் என்று பேசுகிறார்கள்" எனக் கூறியிருக்கிறார். இதில் இன்னொரு ஹைலைட் என்னவென்றால் அதே ஜெய்ப்பூர் கூட்டத்தில் தன் நிறைவுரையில், "ஊழலுக்கு எதிராக 2010 இல் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் ஐந்து அம்சத்திட்டத்தை அறிவித்தேன். அதை நிறைவேற்றியிருக்கிறோம்." என்று சோனியா காந்தி பேசியிருக்கிறார். "நம் அரசு ஊழலை ஒழிக்க நடவடிக்கை எடுத்திருக்கிறது" என்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி பேசியிருக்க, "ஊழல்வாதிகளாக இருப்பவர்கள் ஊழலை ஒழிப்போம் என்கிறார்கள்" என்று அதே கட்சியில் புதிய துணைத் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள ராகுல்காந்தி அறிவித்திருப்பது முரண்பாட்டின் மொத்த உருவம்போல் தெரிகிறது. இதுவும்கூட, காங்கிரஸ் கட்சிக்கும் பிரதமர் மன்மோகன் சிங்கின் ஆட்சிக்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துரைக்குமீ வி.தத்தில் இருக்கிறது.

"துணைத் தலைவரானதும் என்னை நீங்கள் எல்லாம் பாராட்டினீர்கள். ஆனால், என் அன்னை வந்து என்னைப் பார்த்து கதறினார். ஏன் கதறினார் தெரியுமா? அதிகாரத்திற்கு வருவது விஷம் போன்றது என்று அவருக்குத் தெரியும் என்று வேதனைப்பட்ட ராகுல்காந்தி, தனது 42 வயதில் எட்டு வருடங்கள் அரசியல் அனுபவம் பெற்றுவிட்டேன் என்பதை விளக்கிக் காட்டி தான் ஒன்றும் அரசியலுக்கு புதிதல்ல என்பதை மற்ற காங்கிரஸ் தலைவர்களுக்கு எல்லாம் புரிய வைத்துள்ளார். வாரிசு அரசியல் அல்ல இது என்பதை வழியக்கப் போய்விளக்க முயன்றிருக்கிறார் ராகுல்காந்தி. அதே நேரத்தில் ஸ்கீம்ஸ் மற்றும் பைனான்ஸ் போன்றவற்றால் தேசங்கள் உருவாக்கப்படுவதில்லை என்று பிரதமர் மன்மோகன் சிங்கை மேடையில் வைத்துக் கொண்டு ஏன் ராகுல் காந்தி கிண்டலடித்தார் என்பதும் பலருக்கு பிடிபடவில்லை. இப்போது நிதியமைச்சராக இருப்பவர் ப.சிதம்பரம். முன்னர் நிதியமைச்சராக இருந்த பிரதமர் மன்மோகன்சிங் இப்போது ஸ்கீம்ஸ் போடும் அதிகாரத்தில் இருக்கிறார். இதுபோன்ற சூழ்நிலையில் ஸ்கீம்ஸ் அன்ட் பைனான்ஸ் போன்றவற்றை வைத்து தேசம் உருவாக்கப்படுவதில்லை என்று ராகுல் சொன்னதை பிரதமர் மற்றும் நிதியமைச்சர் போன்றோரின் மீதுள்ள கோபத்தை வெளிப்படுத்துவதாகவே உணருகிறார்கள்.

ராகுல் காந்தியின் பேச்சு இப்படியிருக்க காங்கிரஸ் கட்சி இளைய சமுதாயத்தை குறிப்பாக நகர்ப்புற இளைஞர்களை வசீகரம் செய்யும் முயற்சியில் இறங்க நினைக்கிறது. ஏனென்றால், ஊழல் எதிர்ப்பு டில்லியில் பெண் கற்பழிப்பை எதிர்த்துப் போராட்டம் என்று எல்லாவற்றிலும் அந்த இளைய சமுதாயமே டில்லியில் வீதிகளில் கொடி பிடித்து நின்றது. அவர்களை கவர்ந்து இழுக்கும் விடயங்கள் ஜெய்ப்பூர் டிக்ளரேஷன்ஸ் என்று நிறைவேற்றப்பட்டுள்ள 59 தீர்மானங்களில் இடம்பெற்றிருப்பது ஆச்சரியமான விடயம் அல்ல. பொருளாதார வளர்ச்சி, சமூக நீதி என்ற இரட்டை இலட்சியத்தை நோக்கிய பயணத்தில் நாட்டை பிளவுபடுத்தும் சக்திகளை தடுக்க காங்கிரஸுக்கு மற்ற மதசார்பற்ற சக்திகள் கைகொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டிருப்பது மட்டுமே கூட்டணி சம்பந்தப்பட்ட டிக்ளரேஷன் ஆகும். ஆகவே, 2014 நாடாளுமன்ற தேர்தலுக்கு மேலும் சில மதசார்பற்ற கட்சிகளையும் இப்போது கூட்டணியில் இருக்கின்ற கட்சிகளையும் ஒன்று திரட்ட காங்கிரஸ் பாடுபடும் என்பது ஜெய்ப்பூர் டிக்ளரேஷனில் வெளிப்பட்டுள்ளது. இதற்கு தமிழகமும்தான். இங்குதான் ஆட்சி பொய் ரொம்ப வருடங்கள் உருண்டோடிவிட்டன. மேற்கு வங்கத்தில் மத்திய அரசுக்கு தலைவலி கொடுத்துக் கொண்டிருக்கும் மம்தா பானர்ஜி முதலமைச்சராக இருக்கிறார். இவர் காங்கிரஸிலிருந்து முன்னர் பிரிந்து சென்று திரிணாமூல் காங்கிரஸ் என்று பெயர் வைத்து அங்கு ஆட்சியைப் பிடித்திருப்பவர். அதேபோல் தமிழகத்தில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியின் சார்பில் முதலமைச்சராக இருக்கிறார் ஜெயலலிதா, தமிழ் நாட்டில் அ.தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்து மத்திய அரசுக்கும்- மாநில அரசுக்கும் மோதல் அரங்கேறிய வண்ணமே இருக்கிறது. இப்போதும்கூட வருகின்ற ஜனவரி 24 ஆம் திகதி டீசல் விலை உயர்வை கண்டித்து மத்திய அரசு அலுவலகங்கள் முன்பு போராட்டம் நடத்தப் போகிறது அ.தி.மு.க. இந்தக் கோணத்தில் பார்த்தால் தமிழ்நாட்டிலும் காங்கிரஸ் தீவிரப் போராட்டங்களை அறிவிக்கும் என்றே தெரிகிறது. ஏற்கனவே கூட்டணியில் உள்ள தி.மு.க. தங்களுக்கு போதிய எண்ணிக்கையில் சீட்டுகளைக் கொடுக்க வேண்டும் என்பதற்கும் இந்த போராட்டம் உதவும் என்று காங்கிரஸ் தலைமை நினைக்கலாம். ஆனால், அ.தி.மு.க. அரசை எதிர்த்து அப்படியொரு போராட்டத்திற்கு தமிழகத்தில் உள்ள காங்கிரஸ் தலைவர்கள் எந்த அளவிற்கு முன்வரப் போகிறார்கள் என்பது பார்க்க வேண்டிய விடயம்.

வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பே ராகுல்காந்தி பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்படுவார் என்று தற்போது எதிர்பார்க்க முடியாது. ஆனால், வருகின்ற நாடாளுமன்ற தேர்தலுக்குப் பின்னர் வெற்றி பெற்றால் ராகுல்காந்தியே பிரதமர் என்பதை காங்கிரசின் முன்னணித் தலைவர்கள் கூட பேச ஆரம்பித்துவிட்டார்கள். ஆகவே, அந்த நேரத்தில் எம்.பிக்களாகவோ, கட்சியில் முக்கிய நிர்வாகிகளாகவோ இருப்பவர்களுக்கு காந்தி ஃபமிலி என்ற விசுவாசக்கொடி குத்தப்பட்டிருக்க வேண்டும் என்று காங்கிரஸ் மேலிடம் கருதுகிறது. அது ஒன்றே ராகுல் காந்திக்கு எந்தவிதமான வில்லங்க சவால்கள் ஏற்பட்டுவிடாமல் தடுக்க உதவும் தற்காப்புக்கலை என்று நினைக்கிறார்கள். மொத்தத்தில் புத்துணர்ச்சியுடனும் புதுப்பொலிவுடனும் காங்கிரஸின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் ராகுல்காந்திக்கு இப்போதே தற்காப்பு ஆயுதம் விசுவாசத்தின் வடிவில் ஜெய்ப்பூர் டிக்ளரேஷன் வாயிலாக கொடுக்கப்பட்டுவிட்டது. சிந்தனை அரங்கத்தின் சிறப்புகளில இது மிகவும் முக்கியமானது. ஏறக்குறைய 9 வருடங்கள் காந்தி ஃபமிலியில் இல்லாத ஒருவர் காங்கிரஸ் கட்சியின் தலைமையில் நடைபெறும் ஆட்சிக்கு இந்திய பிரதமராக இருக்கிறார். ஆகவே, காந்தி ஃபமிலி விசுவாசம் கட்சிக்குள் புகுத்தப்படுவது இந்த இடைவெளியை போக்கி காங்கிரஸை மீண்டும் தங்கள் ஒட்டுமொத்த கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டும் என்று ராகுல்காந்தியும் சோனியா காந்தியும் நினைக்கிறார்கள். ஜெய்ப்பூர் சிந்தனை அரங்கம் அந்த நினைப்பிற்கு வெளிச்சம் காட்டும் கைவிளக்காக அமைந்திருக்கிறது.



வலுச்சேர்க்கும் விதத்தில் தி.மு.க. தலைவர் கருணாநிதி, ராகுல்காந்தி காங்கிரஸ் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பதற்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளதும் இங்கே குறிப்பிடத்தக்கது.


சோனியா காந்தி தன் பேச்சில், நீண்டகாலமாக ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் நம் தொண்டர்களின் உத்வேகம் குறைகிறது என்று குறைபட்டுக் கொண்டிருந்தார். அதற்கு வழி காணும் வகையில் ஆட்சியில் இல்லாத மாநிலங்களில் மக்கள் பிரச்சினைகளுக்காக அங்கே உள்ள கட்சி தலைவர்கள் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களை அறிவிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அதுபோன்ற மாநிலங்களில் ஆட்சியிலிருக்கும் கட்சிக்கு நாம் ஒரு நம்பகத்தன்மை வாய்ந்த மாற்று சக்தி என்பதை நிரூபிக்கும் வகையில் அந்த போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் அமைய வேண்டும் என்றும் தொண்டர்கள் உசுப்பி விடப்பட்டுள்ளார்கள். ஆட்சியில் இல்லாத மாநிலங்கள் வரிசையில் முதலிடத்தில் இருப்பது மேற்குவங்கமும்

எம்.காசிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உண்மை அதுவே!



வீரபுரமன்னன் வீரசேனன். அவனது குரு சக்கராச்சாரியார். அந்த ராஜகுருவை வீரசேனன் மதித்து கௌரவித்து வந்தான். அதனால் அவருக்குத் தான் என்ற கர்வம் மேலிட்டது. யாரையும் இலட்சியம் செய்யாமல் இருந்து வந்தார். எவரையும் மதிக்காமல் இகழ்ந்து பேசிவிடுவார்.


அவர் தாம் ஒரு சந்நியாசி எனக்கூறிக்காவி உடை தரித்தாலும் அவை பளபளவென மின்னும் பட்டாடைகளாகவே இருந்தன. கழுத்தில் தங்கச்சங்கிலியில் கோர்த்த முத்துமாலை கைகளில் தங்கக் கங்கணங்கள், கைவிரல்களில் பளபளக்கும் வைரமோதிரங்கள்... இப்படி அவர் எப்போதும் ஆர்ப்பாட்டத்தோடு அட்டகாசமாய்த் திரிந்து தன் பெருமையையே தம்பட்டம் அடித்துக் கொண்டார். இதனால் அவரை வெறுத்தவர்களே பலர். அதை அவர் இலட்சியம் செய்யாமல் தன் போக்கிலேயே இருந்து வந்தார்.

ஒருநாள் சக்கராச்சாரியார் வீரசேனனிடம் வீரசேனா! நீ என்னிடம் காட்டும் மரியாதையைக் கண்டு நான் மிகவும் மகிழ்கிறேன். என் அருமை பெருமை

## அம்புலிமாமா கதைகள்

களை வருங் காலத்தவர் அறிய வேண்டாமா...? அதற்காக என் உருவச்சிலை ஒன்றைச்செய்து இந்நகரின் பிரதான சாலையில் மக்கள் அதிகமாக நடமாடும் இடத்தில் வை என்றார். வீரசேனனும் அவ்விதமே செய்வ தாகக் கூறினான்.

வீரசேனன் தன் அமைச்சரான சங்கரமணியிடம் ராஜகுருவின் விருப்பத்தைக் கூறினான். சங்கரமணியும் ஆஸ்தான ஓவியர் பாஸ்கரனைக்கொண்டு சக்கராச்சாரியாரின் உருவப்படத்தை வரையச் செய்தார். அந்தப்படத்தை அவர் நாட்டிலுள்ள உலகப்புகழ் பெற்ற சிற்பியான லோகநாதனிடம் அனுப்பி அத்தோடு ஒரு கடிதத்தையும் கொடுக்கச் சொன்னார். அதில் இது எமது ராஜகுருவின் படம். ஆனால் அவர் முற்றும் துறந்த சந்நியாசி என்பதைச் சிலை வடிக்கும்போது நினைவில் கொள்ளுங்கள் எனக் குறிப்பிட்டு இருந்தார். லோகநாதரும் சிலையைத் தயாரித்து விரைவிலேயே எடுத்து வந்தார்.



வீரசேனனும் சிலையை ஒரு நல்லநாளில் ஆடம்பரமாய் விழா நடத்தி நகரின் முக்கியமான இடத்தில் நிறுவத் தீர்மானித்தான். அவன் அந்தச் சிலையை முதன் முதலில் ராஜகுருவிற்குக் காட்ட விரும்பினான். அவரை அவன் அழைத்துச் சென்று சிலையையும் காட்டினான். அவர் அந்தச் சிலையைப் பார்த்துவிட்டு இது என்னைப்போலவா இருக்கிறது? என் மிடுக்கான கண்கள் எங்கே? கம்பீரமான தோற்றம் எங்கே? அழகிய ஆடைகள் எங்கே? நிமிர்ந்து நான் பார்த்தாலே பிறர் நடுங்குவது போல இந்தச்சிலை அமையவில்லையே என்றார் அருவருப்போடு.

மன்னர் உடனே சிலையை வடித்த சிற்பி லோகநாதனை வரவழைத்தாள். அவரோடு அமைச்சர் சங்கரமணியும் வந்தார். மன்னன் சிற்பியைப் பார்த்து புகழ்பெற்ற சிற்பி என்பது சரியல்ல.... எம்குருவின் சிலையைத் தக்கபடி வடித்துக் கொடுக்க உம்மால் முடியவில்லையே எனக் கோபத்தோடு கேட்டான்.

லோகநாதனும் ஆச்சரியப்பட்டு மன்னனிடம் அரசே! மந்திரி சங்கரமணியார் ராஜகுருவின் உருவப் படத்தை எனக்கு அனுப்பி அவர் முற்றும் துறந்த முனிவர் என்பதை நினைவில் வைத்துக்கொண்டு சிலையைத் தயாரிக்க வேண்டும் என எழுதியிருந்தார். நான் அந்த உருவத்தை நினைவில் வைத்துக் கொண்டுதான் சிலையில் சந்நியாசிக்கான ஏனைய அடையாளங்களைச் சேர்த்தேன். சாந்தம் தவழும் முகம், உருத்திராட்சமாலை, எளிய காவி உடை, கையில் ஜபமாலை, ஒளிவிட்டு பிறருக்கு இரங்கும் பார்வை ஆகியவற்றைச் சேர்த்தேன். ஆனால் இப்போதுதான் ராஜகுருவைப் பார்த்தேன். எனவே அவர் விரும்புகின்ற விதத்தில் சிலையைத் தயாரித்து விடுகிறேன். பிறரை அலட்சியம் செய்யும் பார்வை, கடுகடுப்பான முகம், கழுத்தில் தங்கச் சங்கிலி, கைகளில் தங்கங் கங்கணங்கள், இடுப்பில் தங்க அரைஞாண், பளபளவென சரிகையுடன் மின்னும் பட்டு வேட்டி, பட்டு அங்கவஸ்திரம், பிறர் குற்றத்தைச் சுட்டிக்காட்டும் வலது கைவிரல் ஆகியவற்றோடு கூடிய சிலையைத் தயாரிப்பது ஒன்றும் எனக்குச் சிரமம் இல்லை என்றார்.

சிற்பி கூறியதைச் சக்கராச்சாரியார் கேட்டுத் திடுக்கிட்டார். மன்னனும் சிற்பியிடம் ஆம், நீர் கூறியது போலத்தான் சிலை அமைய வேண்டும். போய் இப்போதே வேலையை ஆரம்பியுங்கள் என்றான். சிற்பியும் அங்கிருந்து செல்லலானார்.



சிற்பியே சற்று நில்லுங்கள் என்று சிற்பியைத்தடுத்து நிறுத்திய ராஜகுருவின் முகம் வியர்த்தது. சிற்பி சொல்வதுபோல் தனக்கு சிற்பம் வடித்தால் என்ன ஆகுமென்று யோசித்துப்பார்த்தார். அகம்பாவம் கொண்டமுகம், அலட்சியப் பார்வை, விறைப்பான உடல், பகட்டான ஆடை, ஆபரணங்களுடன் சிற்பி கூறுவதுபோல் சிலை வடித்தால் கேலிக்கிடமாகப் போகுமே என்று அவருக்கு அப்போது தோன்றியது.

அதேசமயம் தான் இத்தனை நாட்கள் நடந்துகொண்ட விதத்தைத் தான் சிற்பி சுட்டிக்காட்டுகிறார் என்றும் இதுவரை எல்லோரும் தன்னைப்பின்னால் இரகசியமாக பரிகாசம் செய்திருப்பார்கள் என்றும் உரைத்தது. சிலையும் சிற்பி கூறியபடி இருந்தால் விபரீதமாகிவிடும், வருங்கால சந்ததியினரும் தன் சிலையைப் பார்த்து எள்ளி நகையாடுவார்களே என்றும் தோன்றியது. தனக்கு ஏன் இத்தனை காலம் இவையெல்லாம் தவறு என்று தோன்றவில்லை என்று தன் மீதே கோபங்கொண்ட ராஜகுரு அந்தக்கணமே மனந்திருந்தினார்.

பின்பு நிதானமாக மன்னனிடம் இந்தச்சிற்பி செய்து கொண்டு வந்திருக்கும் சிலையே சரியானது. அவர் இப்போது தங்களிடம் கூறிய மாற்றங்களோடு புதிய சிலையைச் செய்யவேண்டவே வேண்டாம். ஒரு சந்நியாசிக்கு வீண் ஆர்ப்பாட்டம்கூடாது என்பதை இந்த சிற்பி விபரிதத்திலிருந்து உணர்ந்து விட்டேன். என் சிலையை நிறுவ விழாவும் வேண்டாம். நான் முற்றும் துறந்த முனிவர் என்பது யாவர் மனதிலும் பதிய இந்தச் சிலையே போதும். இதனை எங்காவது ஓரிடத்தில் வைத்தாலே போதும். என் அகங்காரத்தையும் ஆடம்பரத்தையும் எல்லோரும் வெறுப்பது எனக்கு இப்போது தெரிகிறது. எல்லோரும் சொல்லப் பயந்தார்கள். ஆனால் அமைச்சர் சங்கரமணி இந்த சிற்பியைக் கொண்டு எனக்கு நல்ல பாடம் கற்பித்தார். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி. இனி என் எஞ்சிய வாழ்நாட்களை உண்மையிலேயே சந்நியாசியாக இருந்து காட்டிற்குப் போய்த் தவம் செய்து கழிக்கப்போகிறேன். ஒரு சந்நியாசிக்கு அரண்மனை வாழ்வு கூடாது. எனவே நான் தவம் செய்யக் காட்டிற்குப்போகிறேன் என்றார்.

அவர் மறுநாளே மன்னனிடம் விடைபெற்றுக்கொண்டு காட்டிற்குப் புறப்பட்டுவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உலகில் வெளிநாட்டு முதலீடுகளுக்கு

# பாராளுமன்றத்தில் அனுமதி பெறும் ஒரே நாடு இலங்கை மட்டுமே! - அமுனுகம

(கொழும்பு)

உலகில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து பாரிய வெளிநாட்டு முதலீடுகளுக்கு அனுமதி பெறும் ஒரேநாடு இலங்கை மட்டுமே. குறுகிய காலத்தில் இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகள் இரு மடங்காக உயர்வடைந்துள்ளது என பிரதிநிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுக்ம தெரிவித்தார்.

செயல் நுணுக்க அபிவிருத்தி கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளைகளுக்கு அனுமதி வழங்குவது தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இச்சட்டத்தின் கீழ் இந்திய புகையிலைக் கம்பனி 140 மில்லியன் அமெரிக்க டீாலர் செலவில் பல்வகைத்தன்மை விடுதியொன்றை அமைக்க அனுமதி வழங்கப்படுவதாகவும் அவர் கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

பாரிய வெளிநாட்டு முதலீடுகளை பெறுவதற்கு பாராளுமன்றத்தின் அனுமதி பெறும் வகையிலே செயல் நுணுக்க அபிவிருத்தி கருத்திட்ட சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதற்கு முன்னர் முதலீட்டுச் சபை சட்டத்தின் கீழே பாரிய முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

முதலீட்டுச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் சலுகைகள் மற்றும் அதை அமுல்படுத்துவதில் உள்ள தடங்கல்கள் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்றன. முக்கிய முதலீட்டு துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த புதிய முறைமைகள் தேவைப்படுகின்றன. இதனாலேயே பாரிய முதலீடுகள் தொடர்பில் புதிய சட்டம் அமைக்கப்பட்டது. பாரிய வெளிநாட்டு முதலீடுகளாலேயே சீனா இந்தளவு முன்னேற்றமடைந்து. இந்தியாவிலும் முதலீடுகள் தொடர்பில் புதிய சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

கடந்த காலத்தில் பல முக்கிய துறைகள் தொடர்பிலான முதலீடுகள் பெறப்பட்டன. மன்னார் கடற்பரப்பில் எண்ணெய் அகழ்வு ஆராய்ச்சி, சங்கரீலா விடுதி இரும்புத் தொழிற்சாலை, சம்பூர் அனல் மின் நிலையம் என்பன அதில் முக்கியமானவை. இந்த நிலையிலே வெல்கம குரூப் பல்களை ஹோட்டல் ஒன்றை அமைக்க இங்கு 3ஆயிரத்து 140 மில்லியன் டொலர் முதலீடு செய்ய முன்வந்துள்ளது.

வர்த்தக தொகுதி சுற்றுலாப் பயணிகளை கவரும் தலைசிறந்த பொருட்களை விற்பனை செய்யும் இடம் என்பன அடங்கலாக இந்த விடுதி அமைக்கப்படவுள்ளது. இதற்கு முன் வருடாந்தம் ஒரு மில்லியன் அமெரிக்க டொலரே வெளிநாட்டு முதலீட்டுக்கு கிடைத்தது குறுகிய காலத்தில் இது இருமடங்காக உயர்ந்துள்ளது.

பாரிய முதலீடுகளை நாம் மறைவாக மேற்கொள்வதில்லை. பாராளுமன்றத்தில் சமப்பித்து அனுமதி பெற்ற பின்னரே பாரிய முதலீடுகளுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

மக்களை அறிவூட்டும் வகையில் இது குறித்து வர்த்தமானியிலும் வெளியிடப் படுகிறது. இந்திய புகையிலை கம்பனியே இவ்வாறு முதலிடுகிறது.

உலகில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து பாரிய முதலீடுகளுக்கு அனுமதி பெறும் ஒரே நாடு இலங்கை மட்டுமே. ஏனைய நாடுகள் அவ்வாறு அனுமதி பெறுவதில்லை. உலகில் சுற்றுலாத்துறைக்கு உகந்த சிறந்த பின்னணி யுள்ள நாடு இலங்கையாகும் என்றார் அமுனுகம. (செ-2)

## பணமோசடி செய்த சட்டத்தரணி கைது

(கொழும்பு)

கம்பஹா நீதிமன்றத் தொகுதியில் வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கும் பெண் சட்டத்தரணி ஒருவர் ஐந்து இலட்சம் ரூபா பணமோசடி செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மினுவாங்கொடை பிரதேசத்திலுள்ள யுவதி ஒருவரை திருமணம் செய்திருந்த இளைஞன் விவாகரத்து வழக்கொன்றைத் தாக்கல் செய்திருந்துள்ளார்.

அதன் அடிப்படையில் யுவதிக்கு இளைஞனால் வழங்கப்பட்ட நஷ்ட ஈடான மேற்படி ஐந்து இலட்ச ரூபாவையும் சட்டத்தரணியிடம் ஒப்படைத்துள்ளார்.

எனினும் அதனை உரியவரிடம் கையளிக்காது மோசடி செய்த குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே குறித்த பெண் சட்டத்தரணி கைதாகியுள்ளார். (செ-11)

## சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் ஆரம்பம்

சிறுவர் உரிமை பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளினை பிரதேச ரீதியாக மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய காரியாலயம் ஆரம்பித்துள்ளதாக அதன் இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார்.

இதன் ஆரம்பகட்ட செயற்றிட்டம் நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் கூறினார்.

சிறுவர் உரிமைகள் தொடர்பாக அறிக்கையிடுதலும் பதிலளித்தலும் எனும் தொனிப் பொருளில் சர்வதேச சமூகத்தினை கட்டியெழுப்புவோம் எனும் கருப்பொருளில் ஆரம்பிக்கப்பட்ட இச் சிறுவர் உரிமை தொடர்பான செயற்றிட்டம் 6 மாதங்கள் வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

பிரதேசங்களின் அரச ,அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளினை ஒன்றிணைத்து சிறுவர் உரிமை பாதுகாப்பு தொடர்பான ஒருங்கிணைவினை ஏற்படுத்தவே இச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இக்குழுக்களின் ஊடாக சிறுவர் உரிமை அதிகளவில் எப்பிரதேசங்களில் மீறப்படுகின்றதோ அப்பிரதேசங்களிற்கு விஜயம் மேற்கொண்டு அச்சமூகத்திற்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதே இவ் ஆறுமாத கால நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

இந்நிகழ்ச்சித் திட்டத்திற்கென தனியொரு மனிதவுரிமை அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகங்கள், சிறுவர் வன்புணர்வுகள், சிறுவர் தொழிலாளிகள், சிறுவர்களது கல்வி உரிமை, சிறுவர்களது கருத்து மற்றும் பேச்சு சுதந்திரம் என அனைத்து சிறுவர் உரிமைகள் தொடர்பிலும் இங்கு விசேட கவனிப்புகள் இடம்பெறும்.

இதனைவிட முரண்பாடுகளினால், நியாயமான காரணங்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு சட்ட உதவிகள் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த வருடம் யாழில் நடைமுறைப்படுத்தப்பட்ட இச்செயற்றிட்டம் இம்முறை கிளிநொச்சியில் செயற்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி நேற்று முன்தினம் கண்டாவளை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற இச்செயற்றிட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி புதன்கிழமை அன்று பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

சிறுவர் உரிமை மீறலுக்கு எதிராக பொலிஸார் மற்றும் அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றிணைவினை இச்செயற்றிட்டம் ஏற்படுத்துவதோடு சிறுவர் துஷ்பிரயோகங்கள், பாலியல் வன்புணர்களில் இருந்து இச் செயற்றிட்டத்தின் மூலம் சிறுவர்களினை பாதுகாக்க முடியும் என்றார். (செ-4-6)

## போலி ஆவணங்களுடன் பெண்; விமான நிலையத்தில் கைது!

போலி ஆவணங்களுடன் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு செல்லக்கூடிய வயதை பூர்த்தி செய்யாத யுவதி ஒருவர் குழந்தை பராமரிப்புக்காக வெளிநாடு செல்ல முற்படுகையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

சுற்றுலா விசாவுடன் மலேசியா செல்வதற்காக விமான நிலையம் வந்த இரண்டு யுவதிகளை விமான நிலையத்தின் பணியக அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இதில் ஒரு (20 வயதுடைய) யுவதி வீட்டில் பெற்றோருக்கு தெரியாமல் வெளிநாடு செல்ல எத்தனித்துள்ளார் என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்து வெளிநாடு செல்லும் விதத்தில் போலி முத்திரை இடப்பட்ட நிலையில் சவுதி செல்ல முற்பட்ட மேலும் 4 பெண்களையும் பணியகத்தின் விமான நிலைய அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

பணியகத்தில் கடவுச்சீட்டில் பதியப்படும் முத்திரை போன்றே போலி முத்திரை தயாரித்து இவர்களை வெளிநாடு அனுப்ப முற்பட்ட உப முகவர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மருதானை பகுதியிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையமொன்றின் உப முகவர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.


பெண்களை போலி ஆவணங்கள் தயாரித்து வெளிநாடு அனுப்பும் உப முகவர்கள் குறித்து பணியகம் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது. இவ்வாறானவர்கள் தொடர்பாக உடனடியாக பொலிஸாருக்கு அறிவிக்குமாறும் பணியகம் கேட்டுக்கொண்டுள்ளது. (செ-2)

## திறப்பு விழா

(கரணவாய்)

கரணவாய் செல்வாபுர மக்களுக்கான குடிநீர் விநியோகத்திட்ட திறப்பு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு செல்வாபுரம் இளங்கோ சனசமூக நிலைய தலைவர் கு.மகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விநியோகத்திட்டப் பெயர்ப்பலகையை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இணைந்து திரை நீக்கம் செய்யவுள்ளனர். (செ-9-74)





நீர்வேலியில் புதிதாக அமைக்கப்பட்ட பொன்செல்வமஹால் மணிமண்டபத் திறப்புவிழாவும் நீர்வை மயூரகிரி தொகுப்பாக்கம் செய்த கல்யாண வசந்தம் நூல் வெளியீட்டு விழாவும் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்ப்பாணக் கல்வி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் இ.குணநாதன் மங்கல விளக்கேற்றுவதையும் கல்யாணவசந்தம் நூலை நீர்வையூர்த் தொழிலதிபர் பொன்.கிருஷ்ணானந்தன் தம்பதியினர் வெளியிட்டு வைக்க தொழிலதிபர் எஸ்.கிருபாஹரன் தம்பதியினர் பெற்றுக்கொள்வதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நெடுங்கேணி பிரதேசத்தில் நெற்செய்கை பாதிப்பு

(குருமன்காடு)

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேசத்தில் கடந்த 22 ஆம் திகதி இரவு தொடக்கம் பெய்து வரும் கடும் மழையினால் நெற்செய்கை பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

நெடுங்கேணி பிரதேசத்தில் அறுவடை ஆரம்பித்துள்ள நிலையில் மழை பெய்து வருவதால் வெட்டப்பட்ட நெற்பயிர்கள் மழை நீரில் நனைந்து வருவதுடன் அறுவடைக்கு தயாராகவுள்ள நெற் பயிர்களும் நீரில் வீழ்ந்து சேதமடைந்துள்ளதாகவும் தெரிவித்த விவசாயிகள் தாம் நெல் விளைச்சலின் போது மழையின் தாக்கத்துக்குள்ளாகி விதை நெற்கள் பாதிப்படைந்திருந்ததாகவும் எனினும் அதில் இருந்து மீண்டு அறுவடைக்கு தயாரான போது இவ்வாறு மீண்டும் மழையினால் நெற்பயிர் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவித்தனர்.

இதேவேளை இவ்வருட நெற் செய்கையின் பாதிப்பு தொடர்பாக வவுனியா மாவட்ட விவசாய திணைக்கள விரிவாக்கற்பிரிவு பிரதிப் பணிப்பாளர் சகிலா பானு தெரிவிக்கையில்,

இவ் ஆண்டு 11 ஆயிரத்து 523 ஹெக்டெயரில் நெல் பயிரிடப்பட்டிருந்தது. எனினும் மழை காரணமாக ஆயிரத்து 755 ஏக்கர் 100 வீதத்தாலும் 2 ஆயிரத்து 258 ஏக்கர் 75 வீதத்தாலும் 2 ஆயிரத்து 122 ஏக்கர் 50 வீதத்தாலும் 5 ஆயிரத்து 358 ஏக்கர் 25 வீதத்தாலும் பாதிப்படைந்துள்ளதாக தெரிவித்ததுடன் ஏறத்தாழ பத்தாயிரம் மெற்றிக் தொன் நெல் உற்பத்தி வீழ்ச்சி ஏற்படும் எனவும் தெரிவித்தார். (செ-9-250)

# வரும் நோயாளர்களோ 200 பேர்; பார்வையிடும் வைத்தியரோ ஒருவர்

## தவிக்கிறது தர்மபுரம் வைத்தியசாலை

(றெட்பானா)

தர்மபுரம் வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறையால் நோயாளர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

மேற்குறித்த வைத்தியசாலைக்கு தினமும் 200 வெளிநோயாளர்கள் வருகை தந்து சிகிச்சை பெறும் நிலையில் ஒரு வைத்தியரே இவ் வைத்தியசாலையில் கடமை புரிகின்றார்.

இதனால் நோயாளர்கள் நீண்ட நேரம் காத்திருந்தே சிகிச்சை பெற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

பல் வைத்தியத்திற்குரிய உபகரணங்கள் இருந்தும் இடவசதி வைத்தியர் இன்மையால் அச்சிகிச்சையை முழுமையாக பெறமுடியாத நிலையும் அங்கு உள்ளது.

எனவே உரிய தரப்பினர் உடன் விரைந்து நடவடிக்கை எடுத்து வைத்தியர் ஒருவரை நியமித்து நோயாளர்களின் சிரமத்தை போக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (செ-3-260)

# கண்ணிவெடி அகற்றும் பணிகள் முகமாலையில் தீவிரம்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முகமாலைப் பகுதியில் தற்போது கண்ணிவெடி அகற்றும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் சத்தியசீலன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஹலோ ட்ரஸ்ற் நிறுவனம் இப்பகுதியில் முழுமையான ஈடுபாட்டுடன் கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. இப்பகுதியில் அதிகளவான கண்ணிவெடி புதைக்கப்பட்டிருந்த நிலையிலேயே இக்கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

கிளாலி கடற்கரையிலிருந்து நாகர்கோவில் கடற்கரைவரையான 14 கிலோமீற்றர் நீளமும் 4 கிலோமீற்றர் அகலமும் கொண்ட நிலப்பரப்பில் கடந்த ஓராண்டுக்கும் மேலாகக் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தற்போது இப்பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

ஏ-9 பாதையின் இருமருங்கிலும் கண்ணிவெடிகள் அகற்றும் பணிகளைத் தீவிரப்படுத்தியுள்ள ஹலோ ட்ரஸ்ற் நிறுவனம் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பகுதிகளில் மீள் குடியேற்றத்துக்கான ஏற்பாடுகளுக்கும் இடமளித்துள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் முகமாலை, இத்தாவில், வேம்பொடுகேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மட்டுமே கண்ணி வெடி அகற்றும் பணிகள் அதிகளவில் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாகவும் கூறினார். (செ-2)

# விடுதி வசதி இன்மையால் யாழ். போதனாவிற்கு நெருக்கடி

## வைத்திய ஆளணியினை தக்கவைக்க முடியாதுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது மிகப் பெரும் பிரச்சினையாக ஆளணிப்பற்றாக்குறையே காணப்படுகின்றது என வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார். இவ் ஆளணிப்பற்றாக்குறைக்கு இங்கு விடுதி வசதியின்மையே காரணமாகும் எனவும் அவர் கூறினார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது எமது வைத்தியசாலையில் 300 சிற்றூழியர் வெற்றிடம், ஆயிரத்து 105 தாதியர் வெற்றிடம், இதனைவிட வைத்தியர்கள், வைத்திய நிபுணர்களின் பற்றாக்குறையும் காணப்படுகின்றது.

இவ் வெற்றிடங்களினை சுகாதார அமைச்சானது தீர்ப்பதற்கு முன்வருகின்ற போதிலும் அவர்களினை இங்கு வரவழைத்து தங்க வைப்பதற்கு விடுதி வசதி என்பது முட்டுக்கட்டையாகவுள்ளது.

நோயாளர்களினை தங்க வைப்பதற்கே இங்கு இடப்பற்றாக்குறை காணப்படுகின்ற நிலையில் எவ்வாறு தாதியர்களுக்கும் வைத்தியர்களுக்கும் மேலதிகமாக விடுதியினை அமைப்பது?

விடுதி வசதி இருந்தால் நாம் வைத்தியர்களினை தருகின்றோம் என்கிறது சுகாதார அமைச்சு. எனினும் இங்கு விடுதி வசதி என்பது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. இவ் ஆளணிப்பற்றாக்குறையினால் சில பிரச்சினைகள் நிர்வாகச் சிக்கல்கள் ஏற்பட்ட வண்ணமுள்ளன எனவும் பணிப்பாளர் தெரிவித்தார். (அ-4)

# ஆனந்தசங்கரியுடன் பேசாது மௌனம் காத்தார் ஜனாதிபதி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் ஆனந்தசங்கரியை வைபவம் ஒன்றில் சந்தித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவருடன் பேசாது சென்ற நிகழ்வு அண்மையில் இடம் பெற்றுள்ளது.

இது குறித்து தெரியவருவதாவது, கொழும்பு கொம்பனித்தெரு கங்காராம விகாரையில் விசேட வைபவம் ஒன்று கடந்த திங்கட்கிழமை மாலை இடம்பெற்றது இதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான ஜயலத் ஜயவர்த்தன, ரவிகருணாநாயக்க மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் ஆனந்தசங்கரி ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்த ஆனந்தசங்கரி ஜனாதிபதியின் அருகிலிருந்த ஆசனத்தில் அமர்ந்திருந்த போதிலும் எந்தவித சம்பாசனையும் இடம்பெறவில்லை. ஆனந்தசங்கரியுடன் ஜனாதிபதி எத்தகைய உரையாடலையும் மேற்கொள்ளவில்லை.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு ஆனந்தசங்கரி நீண்ட கடிதம் ஒன்றினை எழுதியிருந்தார். அதில் பல விடயங்களையும் சுட்டிக்காட்டியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (2-9)

# நாட்டில் அண்மைக்கால சம்பவங்கள் ஜனநாயகத்தை முழுமையாக சீர்குலைத்தன

## பேராயர் திலோராஜ் ஆண்டகை குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் ஜனநாயகம் முற்றுமுழுதாக சீர்குலைந்துள்ளதாக கொழும்பு மறை மாவட்டத்திற்கான அங்கிலிக்கன் பேராயர் திலோராஜ் கனகசபை ஆண்டகை குற்றம் சுமத்தியுள்ளார்.

அண்மைய நாட்களில் இடம்பெற்ற சம்பவங்கள் நாட்டின் ஜனநாயகத்திற்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக அவர் கடிதமொன்றின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் அரசியல் சாசனத்தின் அடிப்படையில் ஜனநாயகம் அமுல்படுத்தப்படுவதாக ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகார பாராளுமன்றம் அரசியல் சாசனத்தை உதாசீனம் செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

அங்கிலிக்கன் திருச்சபையும் ஏனைய மத நிறுவனங்களும் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் உதாசீனம் செய்துள்ளதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

கிறிஸ்தவ தேவாலயம் என்ற ரீதியில் நாட்டில் இடம்பெற்று வரும் நிகழ்வுகளை தொடர்ந்தும் வேடிக்கை பார்த்து மௌனம் காக்க முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறான மௌனம் தேவனுக்கும் அவருடைய மக்களுக்கும் செய்யும் துரோகமாகவே கருதப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி நடைபெறவுள்ள சுதந்திர தின ஆராதனைகளுக்கு வெள்ளை நிற ஆடைகளை அணிந்து வருமாறு பேராயர் கனகசபை ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார். (2-9)





கிளி/ உருத்திரபுரம் மகா வித்தியாலய தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கிளி. வலய தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. பிறேமா மருதநாயகம் மங்கல விளக்கேற்றுவதையும் விழா நாயகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சிவநகர்ச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இராணுவத்தினருக்கு கர்நாடகாவில் பயிற்சியா?

## அமைச்சர் அந்தோனிக்கு வைகோ கண்டனம்

**தமிழகம் தவிர மற்ற மாநிலங்களில் இலங்கை இராணுவத்துக்குப் பயிற்சி அளிப்போம் என்ற கூறியுள்ள மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனிக்கு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார்.**



இது குறித்து நேற்று முன்தினம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அதில் கூறியிருப்பவை வருமாறு,

தமிழர்கள் இதயத்தில் சூட்டுக் கோலைத் திணிப்பது போல் இலங்கை விமானப் படைக்குத் தாம்பரத்தில் பயிற்சியும் இராணுவ அதிகாரிகளுக்கு நீலகிரி வெலிங்டனில் பயிற்சியும் கொடுத்தது. தமிழீழத்தில் இன்றும் இராணுவம் கொடுமை செய்து வருகிறது. தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்முறைக்கு ஆளாகின்றனர் என்று அவர் ஆவேசமாகத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் தமிழ்நாட்டைத் தவிர்த்து வேறு மாநிலங்களில் இலங்கை இராணுவத்திற்குத் தொடர்ந்து பயிற்சி கொடுப்போம் என்று இராணுவ அமைச்சர் ஏ.கே.அந்தோனி கூறியிருக்கிறார்.

இலங்கையில் தமிழ் இனப் படுகொலையை இலங்கை அரசு நடத்தியதில் கூட்டுக் குற்றவாளி ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாகும். திட்டமிட்டே இந்தத் துரோகத்தை இந்திய அரசு செய்தது. தமிழர்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்த இலங்கை அரசை இந்தியாவுக்குத் திரும்பத் திரும்ப அழைத்து வந்து சிவப்புக் கம்பள வரவேற்பையும் கொடுத்தது.

இத்தனைக்கும் பின்னரும் இலங்கை இராணுவத்துக்கு இந்தியாவில் பயிற்சி கொடுப்போம் என்று அந்தோனி பேசுகிறார் என்றால் அது அவரது தனிப்பட்ட குரலல்ல. சோனியாகாந்தி இயக்குகின்ற காங்கிரஸ் தலைமை தாங்கும் அரசின் கொக்கரிக்கும் ஓங்காரக்குரல். இதன்மூலம் மத்திய அரசின் துரோக முகம் மேலும் அம்பலப்படுகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-2)

# பட்ஜெட் கூட்ட விவாதத்தில் விஜயகாந்த் பங்கேற்பாரா?

**காத்திருக்கிறது பரபரப்பு**

தே.மு.தி.க தலைவரும் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான விஜயகாந்த் கடந்த ஆண்டு பட்ஜெட் கூட்ட விவாதத்தின்போது சூடாக பேசி பரபரப்புக்கு உள்ளானார். இதனால் அவர் சட்டசபை கூட்டத்தில் இருந்து 10 நாட்கள் தற்காலிகமாக பணி நிறுத்தம் செய்யப்பட்டார். அதன் பின்னர் அ.தி.மு.கவுடனான கூட்டணியையும் தே.மு.தி.க முறித்துக் கொண்டது.

பின்னர் அக்டோபர் 29 ஆம் திகதி தொடங்கிய சட்டசபை குளிர் கால கூட்டத்தொடரிலும் ஒருநாள் மட்டும் வந்து விஜயகாந்த் கையெழுத்திட்டுச் சென்றார். அதனால் எதிர்வரும் சட்டசபை கூட்டத்தில் விஜயகாந்த் பங்கேற்பாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

அதேநேரத்தில் தே.மு.தி.க எம்.எல்.ஏக்கள் 10 பேர் மீது உரிமை மீறல் பிரச்சினை எழுந்து அந்தப் பிரச்சினை உரிமை மீறல் குழு விசாரணையில் உள்ளது. எனவே இந்த சட்டசபை கூட்டத்தில் தே.மு.தி.க உறுப்பினர்கள் மீதான நடவடிக்கை என்னவென்று தெரியவரும். (செ-2)



பா.ஜ.கட்சியின் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ராஜ்நாத் சிங்கிற்கு டில்லியில் வரவேற்பு அளிக்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.

# குடியரசு தின விழாவை சீர்குலைக்க தீவிரவாத இயக்கத்தின் திட்டம்

இந்திய குடியரசு தினத்தில் 4 இடங்களில் தொடர் குண்டுத் தாக்குதலுக்கு லக்ஷர்-இ-தொய்பா திட்டமிட்டிருப்பதாக உளவுத்துறை தெரிவித்துள்ளது.

இந்தியா முழுவதும் குடியரசு தின விழா கொண்டாட்டம் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்திய தலைநகர் புதுடில்லியில் நடைபெறும் குடியரசு தின விழா கொண்டாட்டங்களை சீர்குலைக்க தடை செய்யப்பட்ட பாகிஸ்தான் ஆதரவு பெற்ற அமைப்பான லக்ஷர்- இ-தொய்பா திட்டமிட்டுள்ளது.

டில்லியில் 4 இடங்களில் தொடர் குண்டு வெடிப்புக்கு இந்த இயக்கம் திட்டம் தீட்டியுள்ளதை உளவுத்துறை கண்டறிந்துள்ளது. இதைத் தொடர்ந்து டில்லி முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்ய உள்துறைக்கு மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்தக் குண்டு வெடிப்பு தெற்கு டில்லியிலுள்ள லோட்டஸ் கோவில், சாந்தினி சவுக், காந்தி நகர் மார்கெட் மற்றும் ஒரு மெட்ரோ புகையிரத நிலையம் ஆகிய 4 இடங்களில் குண்டுகளை வெடிக்கச் செய்ய லக்ஷர்-இ-தொய்பா அமைப்பினர் திட்டமிட்டுள்ளதாகவும் இந்திய புலனாய்வு தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-5)

# அழகிரியை அமைச்சரவையிலிருந்து நீக்க வேண்டும்- ஜெயலலிதா

மத்திய உரத் துறையில் ஆயிரம் கோடி ரூபாய் வரையிலான இழப்பை அரசுக்கும் விவசாயிகளுக்கும் ஏற்படுத்தியுள்ள மத்திய இரசாயனம் மற்றும் உரத்துறை அமைச்சர் மு.க. அழகிரியை பிரதமர் அமைச்சரவையிலிருந்து நீக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

மத்திய அரசின் ஊட்டச்சத்து அளவிலான மானியம் வழங்கும் கொள்கை காரணமாக உரங்களின் விலை இரண்டு, மூன்று மடங்கு அதிகரித்துவிட்டது.

மத்திய அரசின் இந்தத் தவறான உரக் கொள்கை காரணமாக விவசாயிகள் கடுமையாக பாதிப்படைந்துள்ளனர் என்பதைச் சுட்டிக் காட்டி இந்த விவசாய விரோதக் கொள்கை உடனடியாக திரும்பப் பெறப்பட வேண்டும் என்றும் உரங்களின் அதிக பட்ச சில்லறை விலை நிலையானதாக இருக்கும்படியான முந்தைய கொள்கையை மீண்டும் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி பிரதமருக்கு தாம் கடிதம் எழுதி இருந்ததாகவும் இருப்பினும் பாரத பிரதமர் இது குறித்து எந்தவித நடவடிக்கையையும் இது வரை எடுக்கவில்லை எனவும் குறிப்பிட்டார்.

இதேவேளை உர உற்பத்தி நிறுவனங்கள் பயன்பாட்டுச் சான்றிதழை சமர்ப்பித்து உரம் தயாரிப்பதற்கான விலையின் விபரங்களை மத்திய உரத்துறைக்கு தெரிவிக்க வேண்டுமென்றும மத்திய இரசாயனம் மற்றும் உரத்துறை இணை அமைச்சர் ஸ்ரீகாந்த்ஜனா மத்திய இரசாயனம் மற்றும் உரத் துறை அமைச்சர் மு.க அழகிரிக்கு குறிப்பு வைத்ததாகவும் தெரிவித்துள்ளார். எனவே ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்தியின்படி தி.மு.க தலைவர் மு.கருணாநிதியின் மகன் மு.க அழகிரி பொறுப்பு வகிக்கும் மத்திய இரசாயனம் மற்றும் உரத் துறை அமைச்சகத்தினால் உர நிறுவனங்களுக்கு சுமார் ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு கொள்ளை இலாபம் ஏற்பட்டுள்ளது. மத்தியரசுக்கும் விவசாயிகளுக்கும் ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு உர மானியம் என்ற பெயரில் அரச பணம் கொள்ளையடிக்கப்படுகிறது.

மத்திய உரத்துறை இணை அமைச்சரே தன்னுடைய துறையில் ஏற்பட்டுள்ள இழப்பை தடுப்பதற்கான குறிப்பை அளித்துள்ள நிலையில் அவற்றை உதாசீனப் படுத்தி ஆயிரம் கோடி ரூபாய் வரையிலான இழப்பை அரசுக்கும் விவசாயிகளுக்கும் ஏற்படுத்தியுள்ள மத்திய இரசாயனம் மற்றும் உரத் துறை அமைச்சர் மு.க. அழகிரியை பிரதமர் அமைச்சரவையிலிருந்து நீக்க வேண்டும் என்றும் இதன் பேரில் மத்திய புலனாய்வுத்துறை மூலம் தீவிர விசாரணை மேற்கொண்டு உண்மை நிலையைக் கண்டறிந்து அரசுக்கு ஏற்பட்ட இழப்பை மீட்டெடுப்பதோடு மட்டுமல்லாமல் இதற்கு காரணமானவர்கள் மீது தக்க குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதமரை நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றேன் என்று தெரிவித்துள்ளார். (செ-5)

# 6 வயது சிறுமியை கொன்ற இளைஞருக்கு தூக்குத்தண்டனை

பீகார் மாநிலம் ராக்ஹோபூர் கிராமத்தைச் சேர்ந்த இளைஞன் 6 வயது சிறுமியொருவரை பலாத்காரத்தின் பின் கழுத்தை நெரித்துக் கொலை செய்தமைக்காக தூக்குத் தண் டனை விதிக்கப்பட்டுள்ளது.

இண்டல் குமார் சர்மா என்கிற இந்திரா தாக்கூர் (வயது 30) கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 ஆம் திகதி தனது வீட்டுக்கு அருகில் உள்ள வீட்டின் 6 வயது சிறுமியை ஆசை வார்த்தை கூறி அழைத்துச் சென்றான். அங்கு அவளை வன்புணர்வுக்குட்படுத்தி கழுத்தை நெரித்து கொலை செய்தான்.

இந்த சம்பவம் வெளியே தெரியாமல் இருப்பதற்காக சிறுமியின் பிணத்தை தனது வீட்டுக்குள்ளேயே புதைத்து விட்டான். 2 நாட்களுக்கு பின்னர் சர்மா மீது சந்தேகம் அடைந்த சிறுமியின் தாத்தா இது குறித்து பொலிஸில் முறைப்பாடு கொடுத்தார். அதன் பேரில் சர்மாவை பொலிஸார் கைது செய்து சிறுமியின் பிணத்தை அவன் வீட்டிலிருந்து தோண்டி எடுத்தனர்.

இது தொடர்பாக சர்மா மீது பல்வேறு பிரிவுகளின் கீழ் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த விரைவு நீதிமன்ற நீதிபதி சுனில் குமார் சிங் குற்றம் சாட்டப்பட்ட சர்மாவுக்கு சிறுமியை கொல்ல செய்ததற்காக தூக்கு தண்டனையும் வன்புணர்ந்த குற்றத்துக்காக ஆயுள் தண்டனையும் சிறுமியைக் கடத்தியதற் காக 10 ஆண்டு கடுங்காவல் சிறைத்தண்டனையும்சாட்சியங்களை மறைத்த குற்றத்துக்காக 7 ஆண்டு கால கடுங்காவல் சிறை தண்டனையும் விதித்து தீர்ப்பளித்தார். (செ-2)

# பாரதச் செய்தி



புதுடில்லி ராஷ்டிரபதி பவனில் நேதாஜி சுபாஷ் சந்திரபோசின் 116 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு அவரது உருவப்படத்திற்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி மலர் தூவி அஞ்சலி செலுத்தியதைப் படத்தில் காணலாம்.

# உறைகிறது காஷ்மீர்

காஷ்மீர் மாநிலத்தில் கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக கடுமையான பனி பெய்து வருகிறது. உறைநிலையான பூச்சியம் டிகிரியையும் தாண்டி சில மாவட்டங்களில் நேற்றைய தட்ப வெப்ப நிலை -6 டிகிரி ஆக நீடித்தது. இரத்த ஓட்டத்தை உறைய வைக்கக்கூடிய கடும் குளிரில் ஏராளமான மக்கள் சிக்கித் தவித்தனர்

இந்திய விமானப்படையின் தலைமையதிகாரி பி.பாட்டன்கே மற்றும் ஜம்மு வட்டார தலைமையதிகாரி பிரதீப் குப்தா மேற்பார்வையில் பாதிக்கப்பட்ட மக்கள் விமானம் மூலமாக அப்பகுதியில் இருந்து நேற்று வெளியேற்றப்பட்டனர்.

அதிகமான பனிப்பொழிவு ஏற்பட்ட கிஷ்ட்வார் மாவட்டத்தின் நவபஞ்சி சொன்டார் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சுமார் 150 பேர் எம்-17 ரக உலங்குவானூர்திகளின் உதவியுடன் வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். (செ-5)

# பெண்கள் நீதிமன்றம்

இந்தியாவில் பெண்களுக்கு எதிராக பாலியல் குற்றங்கள் பெருகிவிட்ட நிலையில் மேற்கு வங்க மாநிலத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்து விசாரிக்க பெண்கள் நீதிமன்றம் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

மேற்கு வங்க மாநிலம் மால்டா மாவட்டத்தில் முதன்முறையாக இந்த நீதிமன்றம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தினை திறந்து வைத்த கொல்கத்தா மேல் நீதிமன்ற நீதிபதி அருண் மிஸ்ரா பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு கடுமையான தண்டனை வழங்க இந்த நீதிமன்றம் உதவிகரமாக இருக்கும். இதன் மூலம் பெண்களின் உரிமை பாதுகாக்கப்படும் என தெரிவித்துள்ளார். (செ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரலுக்கு ஒருபக்கம் இடி. ஆனால் மத்தளத்துக்கு இரு பக்கமும் இடி.

–தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# உள் உடைப்பும் வெளி உடைப்பும்

ஈழத் தமிழர்களின் நிலைமையை ஒருகணம் சிந்தித்துப் பார்த்தால் உலகில் மிகவும் பாவம் செய்த பிறப்புகள் என்று கூறும் அளவிற்கு ஈழத் தமிழ் இனத்தின் அவலநிலை உள்ளது.

30 வருட கால யுத்தத்தால் நொந்துகெட்ட தமிழினம் வன்னிப் போரில் பேரவலத்தைச் சந்தித்தது. 30 ஆண்டு கால யுத்தத்தில் நடந்த இழப்பு களின் பன்மடங்காகவும் பெருந்துயராக வன்னிப் போர் நடந்து முடிந்தது.

எத்தனையோ குடும்பங்கள் தங்கள் உறவுகளை இழந்த சோகத்தினின்றும் மீளமுடியாமல் தவிக்கின்றன.

இவை ஒருபுறம் இருக்க யுத்தத்திற்குப் பின்பான தமிழினத்தின் வாழ்வு என்பதும் ஏக்கம் நிறைந்ததாக–நிம்மதியற்றதாகக் கடந்து போகிறது.

இவை அனைத்திலும் ஈழத்தமிழினத்தின் உள்ளும் புறமுமான உடைப்பு என்பது இங்கு நோக்குதற்குரியது.

அதாவது உலகில் உள்ள சில இன மக்கள் உள்நாட்டில் வதைக்கப்படுவார்கள். ஆனால் அவர்களுக்காக வெளிநாடுகளும் ஐநா சபையும் காத்திரமாகக் குரல் கொடுக்கின்றன. இது உள் உடைப்பும் வெளி ஆதரவும் ஆகும்.

இன்னும் சில இன மக்களை வெளிநாடுகள் அடக்கிக் கொண்டாலும் உள்நாட்டில் அவர்களுக்கு என்றொரு இறைமை, அவர்களுக்கு என்றொரு அரசு, அவர்களுக்கான உரிமை என்ற வகையில் உள் ஆதரவும் வெளி உடைப்புமாக உள்ளது.

ஆனால் இலங்கையில் ஈழத் தமிழர்களை எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு உள்நாட்டிலும் ஆக்கினை. வெளிநாட்டிலும் பழிவாங்கல்.

அதிலும் எங்களுக்கு உதவுவதுபோல பாசாங்கு செய்துகொண்டு எங்களை அழிப்பதில் மறைமுக ஆதரவுகள்.

இதனால்தான் ஈழத் தமிழினத்திற்கு உள் உடைப்பும் வெளி உடைப்பும் என்று கூறினோம்.

ஐயா! உலக நியதியில் வெளி உடைப்பு அழிப்பாக இருந்தால் உள் உடைப்பு உயிர்பாக இருக்கும்.

உதாரணத்திற்கு கோழிமுட்டையை எடுத்துக் கொள்ளுங்களேன்.

கோழி முட்டை வெளியில் இருந்து உடைக்கப் படுமாக இருந்தால் அது முட்டையில் இருக்கக் கூடிய உயிர்க் கருவை அழித்துவிடும்.

மாறாக கோழிமுட்டை உள்ளிருந்து உடைக் கப்படுமாக இருந்தால் அங்கு ஒரு உயிர்ப்பு நடந்திருக்கும்.

கோழிமுட்டைக்குக் கூட உள் உடைப்பு உயிர்ப்பாகவும் வெளி உடைப்பு அழிப்பாகவும் இருக்கும் போது, ஈழத் தமிழ் இனத்திற்கு மட்டும் உள் உடைப்பும் வெளி உடைப்பும் அழிப்பாக இருக்கிறது.

இந்த மகா அதர்மம் என்று ஒழியுமோ நாம் அறியோம்.

ஆனாலும், கோழிகள் தம் முட்டைகளை எங்ஙனம் அடைகாத்து உயிர்ப்பிற்காய் உள்உடைப்புக்கு உதவுகின்றனவோ, அதுபோல எங்கள் தமிழினப் புத்திஜீவிகளும் அரசியல்வாதிகளும் தமிழினத்தின் உயிர்ப்புக்காக அடைகாக்க வேண்டும்.

அந்த அடைகாத்தல் கூழாகிப் போவதற்கல்ல.

உயிர்ப்பின் உள் உடைப்புக்கானதாக இருக்க வேண்டும்.

# முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதத்தை ஆராய்ந்து சமர்ப்பிக்க தெரிவுக்குழு

## நியமிக்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் இனவாத செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்காக நாடாளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமிக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் இனவாத செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்க இடமளிக்க முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கும் முஸ்லிம் அமைச்சர்கள் மற்றும் ஆளும் தரப்பு முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் நேற்றுக் காலை அலரிமாளிகையில் நடைபெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசீம் கருத்து தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் இனவாத செயற்பாடுகள் தொடர்பில் அரசாங்கத்திலுள்ள முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

இதனையடுத்து விசேட கூட்டமொன்று ஜனாதிபதி தலைமையில் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே நாடாளுமன்ற தெரிவுக்குழுவை நியமிப்பதற்கு ஜனாதிபதி உத்தரவிட்டார்.

அத்துடன் இந்த நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாக இதற்கு தீர்வு காண முடியும் என ஜனாதிபதி தெரிவித்தார். இந்த தெரிவுக்குழுவின் முன்னிலையில் முஸ்லிம்களுக்கு எதிராக இனவாத செயற்பாடுகளை பரப்புவோர் சாட்சியமளிக்க முடியும்.

அத்துடன் இனவாத கருத்துக்களை பரப்பும் பௌத்த பிக்குகளை அழைத்து பேசுவதாகவும் ஜனாதிபதி உறுதியளித்தார் என்றார்.

இதேவேளை சிரேஷ்ட அமைச்சர் பௌசி கருத்து தெரிவிக்கையில்,

முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் இனவாத செயற்பாடுகளை ஒழிக்க ஜனாதிபதி தயாராகவுள்ளார். இன்றைய சந்திப்பின் மூலம் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒற்றுமை ஜனாதிபதிக்கு காட்டப்பட்டுள்ளது. அத்துடன் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாக முஸ்லிம்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் இனவாத செயற்பாடுகளுக்கு தீர்வு காண முடியும் என்றார். (செ–2)

# மத்தள விமான நிலையம் மார்ச் மாதம் திறக்கப்படும்

## விமானசேவைகள் அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மத்தள விமான நிலையம் எதிர்வரும் மார்ச் மாதம் 18 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படும் என விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டைமாவட்டத்தில்அமைக்கப்பட்டுவரும் இரண்டாவது சர்வதேச விமான நிலையமான மத்தள விமான நிலையத்தின் ஓடுபாதை அமைக்கும் பணிகள் பூர்த்தியாகியுள்ள நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் திறந்துவைக்கப்படும் என்றார்.

தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சுமார் 2ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பில் மத்தள விமான நிலையம் அமைக்கப்பட்டு வருவதோடு அதன் நிர்மாணப் பணிகளுக்கென 209 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மிகப் பெரிய விமானங்கள் இறங்கும் வகையில் மத்தள விமான நிலையத்தின் ஓடுபாதை 4 ஆயிரம் மீற்றர் நீளமும் 75 மீற்றர் அகலமும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ–2)

## தைப்பூச இலட்சார்ச்சனை

மாவிட்டபுரம் ஸ்ரீகந்தசுவாமி ஆலய தைப்பூச இலட்சார்ச்சனை கடந்த 18 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இவ் இலட்சார்ச்சனை பூர்த்தி விழாவும் திருமஞ்சப் பவனியும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். அன்றையதினம் முற்பகல் 10.30 மணிக்கு இலட்சார்ச்சனை பொது உபயமாக நடைபெறவுள்ளதுடன் பிற்பகல் 4.30 மணிக்கு திருமஞ்ச பவனியும் நடைபெறவுள்ளதாக ஆதீன கர்த்தா அறிவித்துள்ளார். (செ–9)

## நயினாதீவில் தைப்பூச திருவிழா

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் வருடாந்த தைப்பூச விழா எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது.

அன்றையதினம் முற்பகல் 11 மணிக்கு விசேட அபிஷேகமும் நண்பகல் 12 மணிக்கு உச்சி காலப்பூசையும் நடைபெற்று தொடர்ந்து விசேட வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று திருமஞ்சத்தில் அம்பாளின் வீதியுலா வருதலும் நடைபெறும்.

இதனை முன்னிட்டு அடியார்களின் நலன்கருதி விசேட யாழ்–குறிகாட்டுவான் போக்குவரத்து சேவையும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோவில் நிர்வாக செயலாளர் தெரிவித்துள்ளார். (அ–5)

## வெள்ளி நற்சிந்தனை

108

# செவ்வியல் தமிழில் சீர்மியம்

கோயில் வழிபாடு தமிழர் பண்பாட்டில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. இறைவனின் திருக்கோலங் களைக் கண்ணாரக்கண்டு வழிபடும் போது ஏற்படும் பக்தியனுபவமே தனித்துவமானது. அந்த அனுபவத்தைப் பலர் தமது பாடல்களிலே பதிவு செய்துள்ளனர். சிறப்பாக நாயன்மார்களுடைய பாடல்களில் இப்பதிவினைக் காணலாம். மணிவாசகரது பாடல்களில் இப் பக்தியனுபவம் பெரிதும் உணர்ச்சியோடு பேசப்பட்டுள்ளது.

இறைவனைப் பற்றிய சிறப்பியல்புகளைப் பலர்கூறக்கேட்ட அனுபவம் ஒன்று மணிவாசகரது பாடல்களின் உள்ளக்கிடக்கையாக உள்ளது. அவர் தனது பாடலில் சிவனைப்பற்றிய மூன்று செய்திகளைப் பதிவு செய்துள்ளார். பரந்த மூன்று உலகங்களுக்கும் ஒப்பற்ற தலைவன் மேல், நடு, கீழ் என்னும் மூன்று உலகங்கள் உள்ளன. அவற்றிற்கெல்லாம் சிவபெருமானே தலைவராக இருக்கிறார் என்பதே முதலாவது செய்தியாகும். அடுத்து நிலைபெற்று விளங்கும் உத்தரகோச மங்கை என்னும் திருத்தவத்திற்கு அரசனாக இறைவன் விளங்கும் செய்தியைக் குறிப்பிடுகிறார். மூன்றாவதாக மூவிலை வேல் வலனேந்திப் பொலியும் இறைவனுடைய திருக்கோலத்தைப்பற்றிக் குறிப்பிடுகிறார்.

மூன்றாவதாக அவர் குறிப்பிடும் செய்தி இறைவனுடைய பேராற்றலைப் புலப்படுத்தி நிற்கிறது. சூலப்படையினுடைய தோற்றத்தை அவர் பொருதலை மூவிலை வேல் வலனேந்திப் பொலிபவனே எனப்பாடியுள்ளார். பொருதலை மூவிலை வேல் என்பது போர் செய்தற்குரிய இலைவடிவினவாகிய மூன்று நுனிகளையுடைய சூலப் படையைக்காட்டி நிற்கிறது.

சூலப் படையை வலது திருக்கரத்திலே தாங்கி நிற்கும் தோற்றம். அதைக் காணும் போது வழிபடும் அடியார் மனதிலே ஒரு நம்பிக்கை ஏற்படுகிறது. எம்முடைய பகையெல்லாவற்றையும் அழித்து எம்மைக் காக்கும் தலைவனாகச் சிவன் விளங்குவதையே மணிவாசகர் பாடலில் சுட்டிக் காட்டியுள்ளார். சூலம் போர்க்கருவியாக விளங்குவதால் அது வலக்கரத்திலே உள்ளது. இறைவனுடைய திருக்கோலத்தை நேரடியாகக் காணும் வாய்ப்பற்றவரும் இப் பாடலடிகளைப் படிக்கும்போது நேரிற் காணும் அனுபவத்தைப் பெறுவர். இவ்வாறு இறைவனைப் பற்றிய செய்திகளைக்கூறும் மணிவாசகர் இறைவனைப் பிரிந்தமையால் தான் படும் துன்பத்தை விளக்கிக்காட்ட ஓர் உவமையைக் கையாண்டுள்ளார். இரு தலைக்கொள்ளியின் உள்ளெறும்பு ஒத்து நினைப்பிரிந்த விரிதலையேன் எனத் தன்னிலையை எடுத்துரைத்துள்ளார். இருபக்க மும் நெருப்புப் பொருந்திய விறகின் உட்டுளையுள்ளே அகப்பட்ட எறும்பைப்போன்ற நிலையில் இருப்பதாகக் கூறுகிறார். இருபக்கமும் நெருப்புப் பற்றியெரிகிற விறகினுடைய உட்டுளையிலே அகப்பட்ட எறும்பு ஒருபக்கத்தாலும் வெளியே வரமுடியாது. ஆனால் நெருப்பு இருபக்கத்தாலும் அதனை நெருங்க நெருங்க மிக்க துன்பத்தை

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

எறும்பு அனுபவிக்க நேரிடும். அது போல உன்னைப் பிரிந்த நான் என் உலகியல் வாழ்விலிருந்து மீளமுடியாமலுள்ளேன். எனவே நின்னைப்பிரிந்த விரிந்த தலையையுடைய என்னைக் கைவிடாதொழிதல் வேண்டும் என இறைவனை வேண்டுகிறார். உலக வாழ்க்கையில் ஓயாத கவலையால் துன்புறும் மக்களுக்கு மணிவாசகர் பாடல் மருந்தாக அமைந்துள்ளது.

**இருதலைக் கொள்ளியினுள் ளெறும்**
**பொத்து நினைப்பிரிந்த**
**விரிதலையேனை விடுதி கண்டாய்**
**வியன் மூவுலகுக்**
**கொருதலை வா மன்னும் உத்தர**
**கோசமங் கைக்கரசே**
**பொருதலை மூவிலை வேல்வல**
**னேந்திப் பொலிபவனே**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஸி.டெனிஸ்;
# நட்சத்திரங்கள் வெளியேறுகின்றன




**காலிறுதியில் செரீனா வில்லியம்ஸ் வரலாற்றுத் தோல்வி**

அவுஸ்திரேலிய பெண்கள் ஒற்றையர் பிரிவிற்கான காலிறுதிப் போட்டியில் உலகின் முன்னணி வீராங்கனைகளில் ஒருவரான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் (வயது 31), அந்நாட்டு வீராங்கனையான சுலோன் ஸ்டீபனுடன் (வயது 19) மோதினார்.

இதில் செரினா வில்லியம்ஸ் 6-3, 5-7, 4-6 என்ற கணக்கில் அதிர்ச்சி தோல்வி அடைந்தார். 15 முறை சம்பியனான செரீனா வில்லியம்சின் இந்த அதிர்ச்சி தோல்வியானது, டெனிஸ் வரலாற்றின் மிகப்பெரிய தோல்வியாக கருதப்படுகிறது.

செரினா வில்லியம்சை வீழ்த்தியதன் மூலம், 19 வயதான அமெரிக்காவின் சுலோன் ஸ்டீபன் உலக டெனிஸ் ரசிகர்களின் கவனத்தை தன்பக்கம் ஈர்த்து இருக்கிறார்.



**அரையிறுதியில் சரபோவா அதிர்ச்சித் தோல்வி**

அவுஸ்திரேலிய டெனிஸ் போட்டியில் ரஷ்யாவின் சரபோவா சீனா வீராங்கனை லீ நா இடம் அதிர்ச்சித் தோல்வியைச் சந்தித்தார்.

அவுஸ்திரேலிய டெனிஸ் மெல்பேர்ன் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற மகளிருக்கான அரையிறுதி போட்டியில் சீனாவின் லீ நா, ரஷ்யாவின் மரியா சரபோவாவை எதிர்கொண்டார். இதில், தரவரிசையில் 2ஆவது இடம் வகிக்கும் சரபோவாவுக்கும், 6ஆவது இடம் வகிக்கும் லீ நாவிற்கு இடையே கடும் போட்டி இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்நிலையில், சீன வீராங்கனை அதிரடியாக ஆடி சரபோவாவிற்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்துள்ளார். முதல் செட்டை லீ நா அபாரமாக விளையாடி 6-2 என்ற கணக்கில் கைப்பற்றினார். இந்நிலையில் இரண்டாவது போட்டியை சரபோவா தனதாக்குவார் என்று எதிர்பார்க்கப்பட்ட வேளையில் இதிலும் லீ நாவின் கையே ஓங்கியது.

இதில் 6-3 என்ற கணக்கில் பறிகொடுத்து சரபோவா போட்டியில் இருந்து வெளியேறினார். வெற்றி பெற்ற லீ நா இறுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளார். லீ நா இறுதி போட்டியில், மற்றொரு அரையிறுதி போட்டியில் வெற்றி பெறும் அஸ்ரெங்கா அல்லது ஸ்டீபன்சுடன் விளையாடுகிறார்.




## இலங்கையுடனான T20 மோதலுக்கு ஆஸியின் ஷேர்ன் மார்ஷூம் களத்தில்


இலங்கை அணியுடன் ரி20 தொடரில் மோதவுள்ள அவுஸ்திரேலிய அணியில் அதிரடி துடுப்பாட்ட வீரர் ஷான் மார்ஷ் இடம்பெற்றுள்ளார்.

இலங்கை, அவுஸ்திரேலிய அணிகளிடையே 2 போட்டிகள் கொண்ட ரி 20 தொடர் சிட்னியில் 26ஆம் திகதியும், 2ஆவது போட்டி மெல்பேர்னில் 28ஆம் திகதியும் நடைபெறவுள்ளது. இந்த போட்டிகளுக்கான ஆஸி. அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஜார்ஜ் பெய்லி தலைமையிலான அணியில் அதிரடி வீரர் ஷான் மார்ஷ் சேர்க்கப்பட்டுள்ளார்.

**ஆஸி. ரி20 அணி:** ஜார்ஜ் பெய்லி (தலைவர்), பென் கட்டிங், சேவியர் டோஹர்டி, ஜேம்ஸ் பாக்னர், ஆரோன் பிஞ்ச், பென் லாஹ்ப்லின், ஷான் மார்ஷ், கிளென் மேக்ஸ்வெல், மிட்செல் ஸ்டார்க், ஆடம் வோஜஸ், மேத்யூ வேட், டேவிட் வார்னர்.

## டிராவிட், சுஷில்குமார் இருவரும் பத்மபூஷன் விருதுக்கு பரிந்துரை





இந்தியாவின் 3ஆவது உயரிய விருதான பத்மபூஷன் விருதுக்கு முன்னாள் கிரிக்கெட் வீரர் ராகுல் டிராவிட் மற்றும் மல்யுத்த வீரர் சுஷில்குமார் ஆகியோரது பெயர்களை இந்திய விளையாட்டு அமைச்சகம் பரிந்துரை செய்துள்ளது. இந்திய கிரிக்கெட் அணியின் தடுப்புச்சுவர் என்று அழைக்கப்பட்டவர் ராகுல் டிராவிட். 16 ஆண்டு காலம் இந்திய அணியில் இடம் பெற்று பல்வேறு வெற்றிகளையும், சாதனைகளையும் படைத்தவர். அவருடைய சாதனைகளுக்காக அவரது பெயர் பத்மபூஷன் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

2008ஆம் ஆண்டு பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் மல்யுத்தத்தில் வெண்கல பதக்கமும், லண்டன் ஒலிம்பிக்கில் வெள்ளி பதக்கமும் வென்று சுஷில்குமார் இந்தியாவுக்கு பெருமை சேர்த்தார். 2009ஆம் ஆண்டு இவருக்கு ராஜீவ்கேல்ரத்னா விருது வழங்கப்பட்டது. 2011ஆம் ஆண்டு பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டது. அவரின் சாதனைகளுக்காக தற்போது பத்மபூஷன் விருதுக்கு விளையாட்டு அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது.

## 2017 உ.கிண்ணம் காற்பந்து இந்தியாவில்...?

2017 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள 17 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ணக் காற்பந்து போட்டியை இந்தியாவில் நடத்துவது குறித்து பரிசீலித்து வருவதாக சர்வதேச காற்பந்து சம்மேளனம் (ஃபிபா) தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அகில இந்திய காற்பந்து சம்மேளனம் அளித்த கடிதத்தை ஃபிபா ஏற்றுக்கொண்டது. மேலும் போட்டியை நடத்துவது தொடர்பாக இந்திய காற்பந்து சம்மேளனத் தலைவர் பிரஃபுல் படேல், ஃபிபா அதிகாரிகளுடன் சந்திப்பொன்றையும் மேற்கொண்டிருக்கிறார்கள்.

## மைக்கல் கிளாக் அற்புதமான வீரர்



**–பொன்டிங் பு...ாரம்**

அவுஸ்திரேலிய அணியின் த...வர் மைக்கல் கிளாக் அற்புதமான வீர... வர்ணித்திருக்கும் பொன்டிங் அணி... ஏனைய வீரர்கள் மீதும் தனக்கு நம்பி...கை யுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.


கடந்தாண்டு இறுதியில் சர்வ... போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்ற றிக்கி பொன்டிங், டொன் பிரட்மனுக்குப் பி...பு அவுஸ்திரேலியாவில் தோன்றிய மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரராகக் கருதப்படுகின்றார். அதிக வெற்றிகளைப் பெற்ற அணித்தலைவராகவும் விளங்குகிறார்.

இந்நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள றிக்கி பொன்டிங், புதிய வீரர்களான டேவிட் வோணர், பிலிப் ஹியூஸ் ஆகியோரோடு ஷேன் வொற்சனும் எதிர்வரும் இந்திய, இங்கிலாந்துத் தொடரில் சிறப்பாக ஆடுவார்கள் என நம்பிக்கை வெளியிட்டார்.

தானும், மற்றொரு சிரேஷ்ட வீரருமான மைக்கல் ஹசியும் ஓய்வுபெற்றுள்ள போதிலும், இவ்வீரர்கள் சிறப்பாக ஆடும் திற... யுள்ளவர்கள் என அவர் தெரிவித்தார்.

மைக்கல் கிளார்க் தனது விளையாட்டை மற்றொரு கட்டத்திற்கு எடுத்துச் சென்றுள்ளதாகத் தெரிவித்த பொன்டிங், அவர் எதிர்பார்க்க முடியாத ஒரு சிறப்பான நிலையில் ஆடுவதாகவும், அணியை முன்னிருந்தே அவர் வழிநடத்துவதாகவும் தெரிவித்துள்ளார.

## சர்ச்சையில் சிக்கினார் ஹோலி



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் (பி.சி.சி.ஐ) விதிப்படி தொடர் நடந்து கொண்டிருக்கும் போது போட்டியன்று ஏற்பாடு செய்யப்படும் பத்திரிகையாளர்கள் சந்திப்பு தவிர மற்றபடி யாரும் ஊடகத்தினரிடம் கருத்து வெளியிடக்கூடாது. அணித் தலைவர் மட்டும் பிற இடங்களில் கருத்துக்களை தெரிவிக்கலாம்.

இவ்விதியை மீறியுள்ளார் வீராட் ஹோலி. கடந்த 19ஆம் திகதி, டில்லியில் இருந்து வெளியாகும் பத்திரிகையில் இவரது பேட்டி வெளிவந்தது. இதில் இந்திய அணியின் எதிர்காலம் உட்பட பல பிரச்சினைகள் குறித்து பேசியிருந்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து பி.சி.சி.ஐ.,யின் செல்வாக்கு மிக்க நிர்வாகி ஒருவர், இந்திய அணிக்குரிய பொறுப்பாளருக்கு இ-மெயில் அனுப்பினார். இதற்கு பதில் தெரிவித்த அவர், பி.சி.சி.ஐ விதிகள் குறித்து வீரர்களிடம் மீண்டும் எடுத்துக் கூறப்படும் என்று உறுதியளித்தார்.

இதனிடையே, வீராட் ஹோலி தனது செயலுக்கு மன்னிப்பு கேட்டுள்ளார். இதுகுறித்த செய்தியில், தொடரின் நடுவில் ஊடகத்தினரிடம் பேசக்கூடாது எனத் தெரியாது. இனி இதுபோன்ற செயல் நடக்காமல் பார்த்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

## தொடரை இழந்தது இங்கிலாந்து

இந்தியாவுடனான 4 ஆவது ஒருநாள் போட்டியில் தோல்வியடைந்த இங்கிலாந்து அணி ஒருநாள் தொடரையும் இழந்தது. இப்போட்டியில் இந்திய அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நான்காவது ஒருநாள் மொகாலியில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணியின் அணித் தலைவர் டோனி களத்தடுப்பை தெரிவு செய்தர்ர்.

இந்திய அணியில் தொடக்க வீரர் ரகானே நீக்கப்பட்டு ரோகித் சர்மா இடம் பிடித்தார். இங்கிலாந்து அணியில் கீஸ்வெட்டருக்கு பதில் ஜோஸ் பட்லர் வாய்ப்பு பெற்றார்.

இங்கிலாந்து அணிக்கு அணித்தலைவர் குக், பெல் ஜோடி நிதான தொடக்கம் தந்தது. பெல் 10 ஓட்டங்கள் எடுத்தபோது இஷாந்த் வேகத்தில் ஆட்டமிழந்தார். மற்றொரு தொடக்க வீரரான குக், அடுத்து களமிறங்கிய பீட்டர்சன் ஆகியோர் அரைசதம் கடந்து தலா 76 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். இங்கிலாந்து அணி 50 ஓவர் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 257 ஓட்டங்கள் எடுத்தது. ஜோ ரூட் ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்கள் எடுத்தார்.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் ஜடேஜா 3 விக்கெட்டும், இஷாந்த் சர்மா, அஷ்வின் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 258 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 5 விக்கெட் இழப்பிற்கு இலக்கை அடைந்து 5 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

ரோகித் சர்மா 83 ஓட்டங்களும், சுரேஷ் ரெய்னா இறுதி வரை ஆட்டமிழக்காமல் ... ஓட்டங்களும் எடுத்து வெற்றிக்கு வழி வகுத்தனர்.

ஆட்டநாயகனாக சுரேஷ் ரெய்னா தெரிவானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவா மாநாட்டை இலக்காக கொண்டதே இராணுவ அறிக்கை

## மூத்த ஊடகவியலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

மார்ச் மாதத்தில் நடக்கவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஜெனிவா மாநாட்டை மனதில் வைத்து நேற்று இராணுவ விசாரணை அறிக்கை வந்திருப்பதாக இலங்கையின் மூத்த செய்தியாளரான அனந்த பாலகிட்ணர் தெரிவித்துள்ளார்.

இராணுவத்தின் உள்ளக விசாரணை அறிக்கையை மாத்திரம் வைத்து இலங்கைப் போரின் இறுதிக்கட்ட இழப்புகள் குறித்து ஒரு முடிபுக்கு வரமுடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த வருடம் ஜெனிவா மாநாட்டில் சர்வதேச நாடுகளினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் பல தரப்பட்ட குற்றச்சாட்டுக்கள் விடுக்கப்பட்டிருந்தன. அவற்றை முற்றாக மறுக்கும் பட்சத்திலேயே இந்த அறிக்கை அமைந்துள்ளது.

இழப்புக்கள் குறித்து உண்மையானது என்று இந்த ஒருதலைப்பட்சமான அறிக்கையை வைத்துக்கொண்டு நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. அது ஒரு நடுநிலையான விசாரணைகள் மூலம் தான் அங்கு நிகழ்ந்த உண்மையான இழப்புக்களை அறிந்து கொள்ளலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே இந்த அறிக்கை வெளியிடப் பட்டுள்ள காலப் பகுதியை நோக்கினால் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடரை மையமாகக் கொண்டே வெளியிடப்பட்டுள்ளது என நம்பகரமாகக் கூறலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய அறிக்கைகள் எப்போதும் ஒருதரப்பு கருத்தாக மாத்திரமே இருக்கின்றது என்றும், பலதரப்பட்ட இராணுவ ரீதியிலான விடயங்களை மட்டும் தாங்கியுள்ளவையாக அமைந்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆனால் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இராணுவத்துக்கு மும்மொழி கற்பிக்கும் திட்டத்தை அவர் வரவேற்றுள்ளார்.

இறுதிப்போரில் இராணுவம் சர்வதேச போர்ச் சட்டங்கள் தமக்கு எவ்வளவு தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன என்பதை அனுபவாயிலாக அறிந்து கொண்டுதான் உள்நாட்டுப் போருக்கான சட்டங்கள் வகுக்க வேண்டும் என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது என்றார். (எ -11)

# உணவுப் பொறுப்பு இலங்கைக்கு!

ஐக்கிய நாடுகள் அமைப்பின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் தலைமைப் பொறுப்பு இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

ரோமை தலைமையகமாகக் கொண்டு இயங்கிவரும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் 2013-ம் ஆண்டுக்கான தலைமைப் பொறுப்பு இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

ரோமிற்கான இலங்கைத் தூதுவர் ஹசித பெரேரா இந்த அமைப்பின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். போட்டியின்றி இந்தப் பதவிக்கான தலைமைப் பொறுப்பு ஹசித பெரேராவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

132 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் உணவு மற்றும் விவசாய அமைப்பின் அமர்வுகளில் பங்கேற்றனர்.

இந்த அமைப்பின் ஆசியா பிராந்திய வலயத்திற்கான உப தலைவர் பதவியும் ஹசிதவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் பொருளாதார சமூக நிலைமைகளை மேம்படுத்தும் நோக்கில் 1964 ஆண்டு 75 உறுப்பு நாடுகளுடன் இந்த அமைப்பு ஆரம்பிக்கப் பட்டது. (எ-11)

# இலங்கை கிரிக்கெட் அணியின் தேர்வாளராக ஜெயசூரிய!

இலங்கைக் கிரிக்கெட் அணியின் தேர்வாளராக இலங்கை அணியின் முன்னாள் அணித்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சனத் ஜெயசூரிய நியமிக்கப் படலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இம்மாத இறுதியில் இலங்கைக் கிரிக்கெட் அணியின் தேர்வாளர்களின் எண்ணிக்கையில் ஒருவர் அதிகரிக்கப்படவுள்ளார். இதற்கான பரிந்துரைக்கான நபர்களின் விபரங்கள் இலங்கை விளையாட்டு அமைச்சருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அதிலேயே சனத் ஜெயசூரியாவின் பெயரும் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 11 பேரின் விபரங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், இந்தப் பட்டியலில் மேலும் சிலர் சேர்க்கப்படலாம் எனவும், இவர்களில் ஒருவர் இலங்கைக் கிரிக்கெட் அணியின் தேர்வாளர்களில் ஒருவராகத் தெரிவு செய்யப்படவுள்ளார்.

சனத் ஜெயசூரிய இலங்கையின் ஆளும்




கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அவரது கட்சியை சேர்ந்த விளையாட்டமைச்சரால் நியமிக்கப்படவுள்ள புதிய உறுப்பினராக சனத் ஜெயசூரிய நியமிக்கப் படுவதற்கான வாய்ப்புகள் அதிகமுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய தேர்வாளர்களின் பதவி இம்மாத இறுதியுடன் நிறைவடையவுள்ள நிலையில் புதிய தேர்வுக்குழுவும் இம்மாத இறுதியில் அறிவிக்கப்படவுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

# இடைத் தரகர்களால் ஏமாறும் மக்கள்; யாழ்.செயலக சூழலில் தொடரும் அவலம்

(யாழ்ப்பாணம்)

அரச உத்தியோகத்தர்களாக இடைத் தரகர்கள் செயற்பட்டு மக்களிடம் பணத்தை வசூலிப்பதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலகத்திற்கு வெளியே தொழில்நடவடிக்கையில் ஈடுபடுட்டு வரும் இடைத்தரகர்கள் மீதே இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் யாழ். மாவட்ட செயலகத்திற்கு தனது சேவையின் நிமித்தம் வந்த வயோதிப் பெண்ணிடம் இடைத்தரகர் ஒருவர் அணுகி அவரிடமிருந்த படிவம் ஒன்றினை பூரணப்படுத்தி கொடுத்துவிட்டு அவரிடமிருந்து 100 ரூபா பணத்தை பெற்றுள்ளார்.

பூரணப்படுத்தப்பட்ட படிவத்துடன் மாவட்ட செயலகத்தில் தனக்கான உதவியைப் பெறும் நோக்குடன் அதிகாரியிடம் சென்றுள்ளார்.

இதன்போது, தான் பூரணப்படுத்த வேண்டிய படிவத்தினை ஏன் நீங்கள் பூரணப்படுத்தினீர்கள் எனக் கேட்டுள்ளார் அந்த அதிகாரி.

இதன்போது அதிர்ச்சியடைந்த குறித்த வயோதிபப் பெண், மாவட்ட செயலகத்திற்கு வெளியே உள்ள இடைத்தரகரின் ஒருவர்தான் படிவத்தைப் பூரணப்படுத்தி கொடுத்தார். இதற்காக என்னிடம் 100ரூபா பணத்தையும் பெற்றுக்கொண்டார் எனக்கூறியுள்ளார்.

குறித்த படிவத்தில் அதிகாரியினால் பரிந்துரைக்கப்பட வேண்டிய பலவற்றிற்கு இடைத் தரகர் பரிந்துரைத்துள்ளமை இங்கு குறிப் பிடத்தக்கது.

இதேவேளை யாழ் .மாவட்ட செயலகத்தில் பிரஜைகள் பட்டயம் வைக்கப்பட்டுள்ளது என்வும் இடைத்தரகர்களை நம்பி பொதுமக்கள் ஏமாற வேண்டாம் எனவும் அறிவித்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (எ-6)

# உடுப்பிட்டி ம. கல்லூரி விவகாரம் விசாரணை் கொழும்புக்கு மாற்றம்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அதிபர் நியமன விவகாரம் தொடர்பான விசாரணைகள் மனிதவுரிமை ஆணைக்குழுவின் தலைமைக் காரியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

மேற்படி பாடசாலையின்அதிபர் நியமனம் முறையற்றது என மனிதவுரிமை ஆணைக் குழுவின் யாழ். பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

குறித்த முறைப்பாடு தொடர்பிலான விசாரணைகள் யாழ். பிராந்திய காரியாலயத்தில் இடம்பெற்று வந்த நிலையில் விசாரணை யின் போது முடிபுகள் எட்டப்படாததால் அக் கல்லூரியின் அதிபர் நியமனம் தொடர்பான விசாரணைகளை இலங்கை மனிதவுரிமை ஆணைக் குழுவின் கொழும்பில் அமைந்துள்ள தலைமைக் காரியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளது என யாழ் பிராந்திய இணைப்பாளர் ரி.கனகராஜ் தெரிவித்தார். (எ-4)

# இன, மதவாத...

நாட்டின் அனைத்து மக்களிடையேயும் சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நேற்றைய நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொண்ட போது அனுரகுமார திஸநாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

**புலமைப்பரிசில் மாணவர்களுக்கான புதியதோர் திருப்பம்**

- நவீன முறையிலான கற்பித்தல் நடவடிக்கை (Projecter மூலமான விளக்கம்)
- குழுக்களாக சேர்ந்து கற்றல்
- 10 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர்(தொடர் பயிற்சி வினாக்கள்)
- நவீன வசதி கொண்ட இருக்கைகள்
- தனித்தனி பாடங்களுக்கான ஆசிரியர்கள்

01. பகுதி I
திரு.மு.ஜெயமதன் (மதன் ஆசிரியர்)

02. பகுதி II
திரு.S.நவகாந்தன்



03. வழிகாட்டலும் ஆலோசனையும்
திருமதி அ.வேதநாயகம் (ஓய்வுபெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர்)

04. நிர்வாகம்
திரு.சி.குகனேசன் (உதவிக் கல்விப் பணிப்பாளர்)

குறைந்த கட்டணத்தில் நிறைந்த அறிவைப்பெற உடனே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

இடம்: 3RD FLOOR, THANAARAJ BUILDING, STANLEY ROAD, JAFFNA.(மக்கள் வங்கி 3-ம் மாடி)

காலம்: 27.01.2013

நேரம்: 9 மணி தொடக்கம் 12 மணி வரை (பதிவுகளை மேற்கொள்ளவும்)

குறிப்பு: கைநூல் தழுவியே கற்பித்தல் இடம்பெறும்.

"சிறப்புறக் கற்று மேன்நிலை பெறுக"

(C-234)

# வடக்கில் அவசர தேவை...

பிரச்சினைகள் ஏற்படினும் பொலிஸாரே முன்னின்று தீர்த்து வைக்கின்றனர். இந்த நிலையில் அவசர தேவைகளின் பொருட்டே இராணுவத்தினர் செயற்படுவர்.

யுத்தம் காரணமாக வடக்கில் முடக்கப்பட்டிருந்த அபிவிருத்தி மற்றும் பொருளாதார முன்னேற்ற நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந் திருந்தன. இருப்பினும் யுத்தம் முடிபுக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து அங்குநிலைமை மாறியுள்ளது.

மக்கள் தங்களது தொழில்களை சுதந்திரமாக செய்கின்றனர். அவர்களின் வாழ்க்கைத் தரம் அதிகரித்து வருகிறது. யுத்தம் இடம்பெற்ற நாடொன்று இதுவரை செய்யாத சாதனையை இலங்கை இந்த குறுகிய காலப் பகுதியில் ஈட்டியுள்ளது. இது குறித்து நாம் பெருமையடைய வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் போது காணாமல்போனோர் தொடர்பாக இந்தியாவும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமே பொறுப்புக் கூற வேண்டும்.

அத்துடன் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது பாதுகாப்பு தரப்பினரால் பதியப்பட்டு பொறுப்பேற்கப்பட்ட எவரும் காணாமல் போகவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இறுதி யுத்தத்தின்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களிருந்து இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்தவர்கள் இந்திய வைத்தியசாலைகள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் ஆகியவற்றினூடாகவே வருகை தந்தனர்.எனவே அவர்களிடம் போய்ச் சேர்ந்தவர்கள் தொடர் பில் இந்தியாவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமுமே பொறுப்புக்கூற வேண்டும்.

யுத்தம் இடம்பெறும் நாடொன்றில் காணாமல்போதல், உயிரிழத்தல், காயமடைதல் என்பவை சாதாரணமானவை. கடந்த 30 வருடங்களாக நிலவிய யுத்தம் காரணமாக இராணுவத்தைச்சேர்ந்த மூவாயிரம் பேர் காணாமல் போயுள் ளனர். இவர்களுக்கு என்ன நடந்தது என்று இதுவரையில் தெரியாது.

இதேவேளை யுத்தம் இடம் பெற்ற இறுதி இரண்டரை வருடகாலப்பகுதியில் இராணுவத்தை சேர்ந்த 6 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். 20 ஆயிரம் பேர் காயமடைந்தனர். ஆயிரக்கணக்கானோர் அங்கவீனமுற்றுள்ளனர்.

குறிப்பிட்டதொரு பிரதேசத்தில் இரு தரப்பினர்களுக்கிடையில் யுத்தம் இடம்பெறும்போது, அப்பகுதியில் சிக்குண்டவர்கள் மரணிக்க வாய்ப்புண்டு அல்லது காணாமல் போக வாய்ப்புண்டு. யுத்த காலத்தின்போது தமிழீழ விடுதலைப்புலிகளால் வடக்கில் 100 சதவீதான நிலப்பரப்பு ஆட்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது பயங்கரவாத நடவடிக்கைகளுக்கென பலர் பலவந்தமாக அவ்வியக்கத்தினாரால் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். இவர்கள் யுத்தத்தின்போது இறந்திருக்கலாம். ஆனால் இதுவரை அவர்கள் தொடர்பில் தகவல்கள் இல்லை.

இறுதி யுத்தத்தின்போது இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்த மக்களை முதலில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் இந்திய வைத்தியசாலைகளுமே பொறுப்பேற்றன. அவையே பின்னர் அம்மக்களை பாதுகாப்புத் தரப்பினரிடம் அழைத்து வந்தன. இவ்வாறு பாதுகாப்பு தரப்பினரிடம்அழைத்து வரப்பட்டவர்கள் பதியப்பட்டே பொறுப்பேற்கப்பட்டனர்.

இவ்வாறு பதிவு செய்யப்பட்ட எவரும் இதுவரையில் காணாமல்போகவில்லை. அவ்வாறு காணாமல்போயிருப்பார்களாயின் அது இந்திய வைத்தியசாலைகளிடமோ அல்லது சர்வதேச செஞ்சிலுவை சங்கத்திடமோ சரணடைந்தபோதோ அல்லது அதற்கு முன்னரோ காணாமல்போயிருக்க வேண்டும் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2013 Biology Exam Mark List - 19

| இல | முழுப்பெயர் | புள்ளி | பாடசாலை |
|---|---|---|---|
| 01 | K.சசிகரன் | 85 | J.H.C |
| 02 | K. தாரணி | 85 | J.V.G.H.S |
| 03 | R. மோனிஷா | 84 | J.V.G.H.S |
| 04 | A. சுதிரா | 82 | J.V.G.H.S |
| 05 | S. பிரியந்தினி | 81 | J.V.G.H.S |
| 06 | T. நிஜுஜா | 80 | J.V.G.H.S |
| 07 | J.S. ஆன்றிரோசினி | 80 | C.G.C |
| 08 | Y. சாருஜன் | 79 | J.H.C |
| 09 | J. அமிர்தன் | 77 | J.H.C |
| 10 | S. சோபிதா | 77 | J.V.G.H.S |
| 11 | S. சிறிபவன் | 77 | J.P.C |
| 12 | P. ருக்ஷிகா | 75 | J.V.G.H.S |
| 13 | S. ஷம்யா | 75 | J.V.G.H.S |
| 14 | S. துலக்சி | 74 | C.G.C |
| 15 | P. சாஸ்வதன் | 73 | J.H.C |
| 16 | M. ஆரண்யா | 73 | C.G.C |
| 17 | M. மாதங்கி | 73 | J.V.G.H.S |
| 18 | R. கஜானன் | 72 | J.H.C |
| 19 | S. வெண்ணிலவன் | 72 | J.H.C |
| 20 | S. மயூரி | 70 | C.G.C |
| 21 | S. குகநேசன் | 68 | J.H.C |
| 22 | K. அருணியா | 68 | C.G.C |
| 23 | S. வர்த்தனி | 68 | C.G.C |
| 24 | P. பவித்திரா | 68 | J.V.G.H.S |
| 25 | D. லன்சி | 68 | M.P.C.C |
| 26 | K.பிரணவன் | 68 | J.H.C |
| 27 | S . சாலினி | 68 | U.G.C |

### 2015 Class Time table

பிரிவு I
சனி / ஞாயிறு } 11.00 (A.M) - 12.30

பிரிவு II
சனி / ஞாயிறு } 3.00 - 4.30 (P.M)

சு.பொன்திவாகரன்

2015 - புதியபிரிவு ஆரம்பம் - 28.01.2013 (திங்கள்) மாலை - 5 மணிக்கு.
நேரம் : திங்கள், புதன், வியாழன் - 5-6 (P.M)

(1578)

## முழு அளவிலா...

பிரதமரைச் சந்தித்த போது அவர் இந்த உறுதிமொழியை அளித்துள்ளார்.

இருதரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள கூடுதலான முனைப்பு எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை இந்தியாவிற்கு இடையிலான கூட்டு ஆணைக் குழு அமர்வுகள் உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள வழி கோலும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள இரண்டு நாடுகளும் எடுத்துவரும் முயற்சிகள் பாராட்டுக்குரியவை என பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார். (எ-1)

## ரணில்-சஜித் சந்தி...

வும் கூறப்பட்டது. கட்சியில் முக்கிய பதவிகளில் மாற்றங்கள் மேற்கொள்ளப்படும் போது இவ்வாறான சந்திப்புகள் இடம் பெறும் என்றும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-1)

## மக்களின் இழப்பை...

யங்களை கையாள பொருத்தமற்றவை.

அத்துடன் உள்நாட்டுப் போர்களின் போது சர்வதேச மனித நேய உதவி நிறுவனங்களுக்கென ஒரு குறிப்பிடத்தக்க விதிகள், நியமங்கள் ஆகியன எதுவும் கிடையாது.

ஆகவே உள்நாட்டுப் போர் நிலைமைகளை கையாளும் வகையில் புதிய உள்ளூர் விதிகள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அந்த அறிக்கை பரிந்துரைத்துள்ளது.

கடந்த 30 வருட காலப் போரில் தமிழ் மற்றும் ஆங்கில மொழி புலமையின்மை என்பது இராணுவத்தினருக்கு ஒரு பாதகமான அம்சமாக இருந்ததாகத் தெரிவித்துள்ள அந்த அறிக்கை அவர்களுக்கு மும்மொழிப் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளது.

போரில் உயிரிழந்த இராணுவச் சிப்பாய்களின் குடும்பத்தினர் மற்றும் காயமடைந்த சிப்பாய்கள் ஆகியோரின் நலனைக் கவனிக்கவென இராணுவ தலைமையகத்தில் பிறிதான செயலகம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

இலங்கை நிலைமைகளைக் கருத்தில் கொண்டு பொலிஸ் பிரிவு தொடர்ந்தும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கலாம் என்றும் அது பரிந்துரைத்துள்ளது.

வடக்கு கிழக்கில் இராணுவப் பிரசன்னம் குறித்து கருத்து கூறியுள்ள அந்த அறிக்கை, நாட்டின் எந்தப் பகுதியிலும் இராணுவத்தினரை வைத்திருக்கும் உரிமை அரசாங்கத்துக்கு இருக்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளது. (எ-1)

## இனவாதப் பிரச்...

சிறிபால டி சில்வா நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக பௌத்த-முஸ்லிம்களுக்கு இடையிலும், பௌத்த-கிறிஸ்தவ மதங்களுக்கு இடையிலும் முரண்பாட்டு நிலைமைகள் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான நிலைமைகள் மற்றும் அதற்கான காரணிகளை ஆராய்ந்து எதிர்வரும் காலங்களில் இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் நோக்கில் இவ்வாறு நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (எ-1)

## விஸ்வரூபத்துக்கு...

தமிழகத்தில் விஸ்வரூபம் திரைப்பட விளம்பர சுவரொட்டிகளில் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் படமும் கமலஹாசனின் படமும் இணைந்து காட்சிப்படுத்தப்பட்டமையை இலங்கையின் சிங்கள ஊடகங்கள் பெரிது படுத்தி செய்திகளை வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதனிடையே விஸ்வரூபம் திரைப்படத்தில் சர்ச்சைக்குரிய காட்சிகளை வெட்டிவிட்டதாக இலங்கை திரைப்பட தணிக்கைத் துறையும் கூறியுள்ளது. இருப்பினும் தற்காலிக தடை நீடிக்கும் என்று இலங்கை அரசு தெரிவித்திருக்கிறது.

இதேவேளை சென்னை உயர் நீதிமன்றம் நடிகர் கமலஹாசனின் விஸ்வரூபம் திரைப்படம் எதிர்வரும் ஜனவரி 28 ஆம் நாள் வரை திரையிடப்படக்கூடாது என உத்தரவிட்டிருக்கிறது.

இஸ்லாமியர்களை விஸ்வரூபம் பயங்கரவாதிகளாக சித்தரிப்பதாக குறைகூறி அதற்குத் தடை விதிக்கவேண்டும் மென்று கோரி பல்வேறு முஸ்லிம் அமைப்புக்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்க விருப்பதாக அறிவித்ததன் பின்னணியில், தமிழக அரசு சட்டம் ஒழுங்கினைக் காரணம் காட்டி இன்று வெள்ளியன்று வெளியாக விருந்த அத்திரைப்படத்திற்கு இருவாரத் தடை விதித்திருக்கிறது. தமிழக அரசின் ஆணையினை எதிர்த்து கமலஹாசன் சார்பாக வழக்குத் தொடுக்கப்பட்டது.

நீதிபதி கே.வெங்கட்ராமன் முன் வழக்கு விசாரணைக்கு நேற்று வியாழன் வந்த போது சட்ட ஒழுங்குப் பிரச்சினையின் காரணமாகவே இருவாரத்தடை என அரசின் சார்பில் தெரிவிக்கப் பட்டது. அரசின் கவலைகளை மனதில் கொண்டு ஜனவரி [illegible] வரையிலாவது படத்தை வெளியிடுவதை ஒத்திவைக்கலாமா? என நீதிபதி கேட்ட போது, அதற்கு கமலஹாசன் தரப்பினர் உடன்பட மறுத்துவிட்டனர்.

எக்காட்சி எப்பகுதி ஆட்சேபனைக்குரியது என கமலஹாசன் தரப்பில் கேட்கப்பட்டபோது, அரசு வழக்கறிஞர் சரியான பதில் எதுவும் தரவில்லை. நீண்ட நேர வாதப்பிரதிவாதங்களுக்குப் பின்னால் ஜனவரி 26 அன்று திரைப்படத்தைபார்த்துவிட்டு தனது இறுதித்தீர்ப்பை வெளியிடுவதாகவும், எனவே ஜனவரி 28 வரை விஸ்வரூபம் மீதான தடை தொடரும் எனவும் நீதிபதி வெங்கட்ராமன் கூறியுள்ளார். (எ-1)


33 ஆம் நாள் நினைவலைகள்

அமரர்
வேலாயுதபிள்ளை
லோகேந்திரா (லோகு)



காற்றோடு வந்த செய்தி கனவாகிப் போகாதோ?
தேற்றிட இயலாது தவித்து நாம் வாடுகிறோம்
அன்பான உறவே! சொந்தம் நிறை பந்தமே!
பண்பின் பிறப்பிடமே! பாசத்தின் உறைவிடமே!
அறிவின் சிகரமே! அழகின் வடிவமே
உன் சிங்க நடையும், சிரித்த முகமும்
கூடி மகிழ்ந்திடும் குதூகல வாழ்வும்
அக்கினி வாய்பட்டு ஆகுதி ஆனதுவோ!

அன்பு மனையாளும் ஆருயிர் செல்வங்களும் பெற்ற
தாயாரும், சகோதரர்களும் சித்தப்பா சித்திமாரும்,
மாமா மாமிமாரும், மைத்துனரும், நண்பர்களும்,
உறவுகளும் உளம்வெந்து வாடுகின்றோம்
ஓர்முறை தானும் ஓடி நீர் வாரீரோ!

130, இராசாவின் தோட்டம் வீதி,
நல்லூர்.

நின் பிரிவால் வாடும்
செ.நடேசபிள்ளை
பொ.வி.திருநாவுக்[illegible]

(1579)



ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம் veta

யாழில் பல்கலைக்கழக, தொழில் தேடுவோர், தொழில் புரிவோர்
5000க்கு மேற்பட்டோர் தெரிவு செய்து வெற்றி பெற்று நிரூபிக்கப்பட்ட Experts in English Training




Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பம்.

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| Sat, Sun 7.00 a.m. | Tue,Thu 8.30 a.m. | Mon, Wed, Fri | Sat, Sun 10.00 a.m. |
| Wed, Fri 3.30 p.m. | Sat, Sun 2.00 p.m | 10.00 a.m. | Tue,Thu 8.30 a.m. |

சர்வதேச ஆங்கில பரீட்சைகள்

UK செல்வதற்கான A1-Exam (திருமணம் செய்து UK செல்வதற்கான) B1-Exam (Student Visa மூலம் UK செல்வதற்கான)

City & Guilds Approved Centre

IELTS • Unique Test Tips • Latest course Materials

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113. கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403 | M.M.V வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel.:021-226 2470 | கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 | கே.கே.எஸ். வீதி, (NSB வங்கி அருகில்) Jet மோட்டோஸ் சந்தி Tel.:021-224 1970 |



Bsc (வெளிவாரி)

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

- மேற்படி பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- A/L இல் முழுமைச் சித்தி அடைந்தவர்களும் A/L இல் இரண்டு பாடம் சித்தியடைந்தவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.
- பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.
- B.A., B.Com B.BA ஆகிய பட்ட நெறிகளுக்கும் மேற்படி பல்கலைக்கழகத்தின் பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
- B.A. இல் வரலாறு, அரசியல் விஞ்ஞானம், சமூக விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம், பொருளியல் ஆகிய பாடநெறிகளில் ஒன்றினை தெரிவுசெய்து இப்பட்ட நெறியினை நிறைவு செய்யலாம்.
- இதுவரை காலமும் ஆங்கில மொழியில் நடைபெற்ற B.A சமூகவியல் பாடம் இந்த ஆண்டில் இருந்து தமிழ் மொழிக்கு மாற்றப்பட்டுள்ளது.

முக்கிய குறிப்பு:

1. இப்பாடங்களானது இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
2. பரீட்சைகள் யாவும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய உயர்கல்லூரி வளாக பரீட்சை மண்டபத்தில் நடைபெறுகின்றன.

விரிவுரைகள் ஆரம்பம் : 26.01.2013 காலை 8 மணி

கவனிக்குக : கடந்தகாலங்களில் எமது நிறுவனத்தினூடாக மேற்படி பட்டநெறிகளை நிறைவு செய்த பட்டதாரிகளுக்கு பயிலுநர் பட்டதாரி வேலைவாய்ப்பு வழங்கப்பட்டதை அறியத் தருகின்றோம்.

இணைப்பாளர், காமராசர் பல்கலைக்கழகம்,
தொ.பே: 021 222 8148

(சி-2231)

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.